# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை19சனிக்கிழமை (02 – 05 – 1998) SANJEAVY• Regenerative Tamil Weekly சிகரம்: 48


# யாழ்ப்பாண நகரில் மேதின நிகழ்வுகள் சோபிக்கவில்லை!

## மக்கள் கூட்டம் குறைவு

யாழ்ப்பாணம், மே 2

மேதினத்தை ஒட்டி நேற்று யாழ்ப்பாணத்தில் இரு மேதினப் பேரணிகள், பல்வேறு கூட்டங்கள் நடைபெற்ற போதிலும் அவற்றில் ஓரிரண்டைத் தவிர ஏனையவை சோபிக்கவில்லை, அனேகமாக நிகழ்வுகளில் மக்கள் கூட்டம் வெகு குறைவாகவே காணப்பட்டது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் யாழ்: பிரிவு நடத்திய மேதினக் கூட்டத்திலும் பேரணியிலும் ஐம்பதுக்கும் குறைவானோரே பங்குபற்றினர்.

நல்லூர் கைலாயபிள்ளையார் கோயில் முன்றலில் தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய மேதினக் கூட்டத்தில் நூற்றுக்கும் சற்றுக் கூடிய எண்ணிக்கையினரே கலந்து கொண்டனர்.

யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் பரவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஹட்டனில் மின்மாற்றிகள் தகர்ப்பு

கொழும்பு, மே 2

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பிரதி அமைச்சருமான சந்திரசேகரன் ஹட்டனில் மேதினக் கூட்டத்தை ஏற்பாடு செய்த மைதானத்துக்கு அருகில் இருந்த இரு மின்மாற்றிகள் நேற்று முன்தினம் அதிகாலை குண்டு வைத்துத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. கூட்டத்தில் மக்கள் வெள்ளம்

கொழும்பு, மே 2

தெற்கில் நடந்த மேதினக் கூட்டங்களில் கண்டியில் நடந்த ஐ. தே. கவின் கூட்டத்திலேயே ஆகக் கூடியளவு மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

மலையகத்தில் இ. தொ. கா., மலையக மக்கள் முன்னணி ஆகியன உட்பட மற்றும் மலையக தொழிற் சங்கங்களின் கூட்டங்களும் இடம்பெற்றன. (உ–3)

## ஐ.தே.கவினர் மீது தாக்குதல்கள்!

கொழும்பு, மே 2

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரேணுகா ஹேரத்தும் அவரது ஆதரவாளர்களும் சென்ற வாகன அணி இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளது. வாகன அணிமீது துப்பாக்கிப்பிரயோகமும்மேற்கொள்ளப்பட்டது.

கண்டியில் நடந்த ஐ.தே.க மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்ற இந்த வாகன அணி நேற்றுக் காலை 11 மணியளவில் றந்திரிகலவில் வைத்தே தாக்கப்பட்டது.

இத்தாக்குதலில் காயமடைந்த 8பேர் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு வாகனங்கள் சேதமடைந்தன.

அதேநேரம் - கேகாலையில் இருந்து சென்ற வாகனம் ஒன்று அம்பன்பிட்டி என்னும் இடத்தில் கவிழ்ந்ததில்18பேர்காயமடைந்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனை நடைபெறாத தடை நிலைகளில் ஓடிச் செல்லலாம்!

### பிரிகேடியர் மீள அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 2

''யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் (512 ஆவது படையணிக்கு உட்பட்ட பிரதேசத்தில்) உள்ள சோதனைச் சாவடிகளில் சோதனை நடைபெறாத வேளைகளில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் அவற்றை விட்டு இறங்கிச் செல்லத் தேவையில்லை; வேகத்தைக் குறைத்து சோதனை நிலையங்களை மெதுவாகத் தாண்டிச் செல்லலாம்.''

யாழ். நகர படைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் நேற்றிரவு சஞ்சீவிக்கு இவ்வாறு தெரிவித்தார்.

''இத்தகைய அறிவிப்பு முன்னர் வெளியாகிய பின்னரும், மக்கள் இன்னமும் சோதனைத் தடை முகாம்களில் இறங்கி உருட்டிச் செல்கின்றார்கள்; சில சோதனைச் சாவடிகளில் 'இறங்கி உருட்டிச் செல்லவும்' என்று எழுதப்பட்ட அறிவிப்புகள் இன்னும் உள்ளன. மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பியுள்ளார்கள். நிலைமையைத் தெளிவுபடுத்துங்கள்'' — என்று கோரிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

''சோதனை நடைபெறாத தடை நிலைகளில் மக்கள் இறங்கி வாகனத்தை உருட்டிச் செல்லத் தேவையில்லை என்பது சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாருடைய அறிவுறுத்தலும் இல்லாமல் மக்கள் தாமாகவே இறங்கி உருட்ட வேண்டிய தேவை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மீண்டும் சினிமாத் தியேட்டர்!

யாழ்ப்பாணம், மே 2

நீண்ட பல வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் முதலாவது சினிமாத் தியேட்டர் இன்று முதல் மீண்டும் இயங்கவிருக்கின்றது.

யாழ். நகரின் மத்தியில் உள்ள ராஜா தியேட்டர் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று மாலை சுபநேரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இன்று மாலை 5-00 மணிக்கு முதலாவது சினிமாப் படமாக எம். ஜி. ஆர்., ஜெயலலிதா நடித்த 'ஒளிவிளக்கு' திரையிடப்படுகின்றது.

கிழமை நாள்களில் தினசரி பிற்பகல் 2.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இரண்டு காட்சிகள் இடம்பெறும்.

இந்த சினிமாத் தியேட்டர்களை திறந்து வைப்பது தொடர்பான உதவிகளை யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் வழங்கினார் எனத்தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பிலும் மேதினம் அதிக சூடு பிடிக்கவில்லை

கொழும்பு, மே 2

கொழும்பிலும் நேற்று மேதின நிகழ்வுகள் மந்தமாக நடைபெற்றதாகஅங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. இந்நிகழ்வுகளில் மக்கள் முன்னைய காலங்களைப் போல் ஆர்வத்துடன் பங்குபற்றவில்லை. மக்கள் கூட்டம் குறைவாகவே இருந்தது.

நகரில் பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமாக இருந்தன. தாக்குதல், குண்டுவெடிப்பு போன்றவை நிகழலாம்என்ற அச்சம் காரணமாகவே மேதின நிகழ்வுகளில் பங்குபற்றாமல் மக்கள் தவிர்த்துக் கொண்டதாக பேச்சடிபட்டது.

ஜே. வி. பி. அமைப்பு ஏற்பாடு செய்த ஊர்வலம் வெள்ளவத்தை கூரே மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி ஹைட்பார்க் மைதானத்தை அடைந்தது. அங்கு கூட்டம் நடைபெற்றது. இதில் சுமார் பத்தாயிரம் பேர் வரை கலந்து கொண்டதாக மதிப்பிடப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் பல்வேறு தலைவர்களின் உருவங்கள் தாங்கிய பொம்மைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

ஜனாதிபதி சந்திரிகாவின் கையில் இலங்கை பல பல துண்டுகளாகத் துண்டாடப்பட்டுள்ளமை சித்திரிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் கையில் வடக்கையும், அமைச்சர் அஷ்ரப்பிடம் கிழக்கையும், அமைச்சர் தொண்டமானிடம் மலையகத்தையும் கையளிப்பது போன்ற பொம்மைகள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இடதுசாரிக் கட்சிகள் ஊர்வலத்தை பகிஷ்கரிப்பு

கொழும்பு. மே 2

கொழும்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்த மேதின ஊர்வலத்தில் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக்கட்சிகள் பங்குபற்றவில்லை.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, இலங்கை மக்கள் கட்சி, தேசவிமுக்தி ஜனதா ஆகிய கட்சிகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊர்வலத்தில் பங்குபற்றாமல் தனியாக ஊர்வலம் நடத்தின.

ஊர்வல இறுதியில் நகர சபை மைதானத்தில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் அவர்கள் பங்குபற்றினர்.

## மட்டு., திருமலை, வவுனியாவில் அமைதியான மேதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 2

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மேதினக் கூட்டங்கள் ஊர்வலத்துடன் அமைதியாக இடம்பெற்றதாக அங்கிருந்து செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

வவுனியாவில் கோயிற்குளத்தில் உள்ள உமாமகேஸ்வரன் சமாதியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் பல வீதிகள் ஊடாகச் சென்று நகரசபை மைதானத்தை அடைந்தது.

வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் தலைமையில் அங்கு கூட்டம் நடந்தது.

நகரசபைத்தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் மற்றும்தொழிற் சங்கப்பிரமுகர்கள் கூட்டத்தில் உரையாற்றினர்.

திருகோணமலையில் வடக்கு - கிழக்கு மாகாண பொது ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த மேதின ஊர்வலம் நகரில் பல பகுதிகள் ஊடாகச் சென்று இறுதியில் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கூட்டம் நடந்தது.

இக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சந்திரகுமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை மகேஸ்வரி

( காரைநகர் )

வேதர் அடைப்பு காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மகேஸ்வரி நேற்று (01-05-1998) காலமாகிவிட்டார்.

அன்னார் லலிதாவின் அன்புத் தாயாரும், நாகரத்தினத்தின் அன்பு மாமியாரும், சிந்துஜன், குவேதினி, சுபாசினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 2-5-98 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. நாகரத்தினம்
(மருமகன்)

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(55692)

## திருமதி கிரேஸ் யுவக்கீன்

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூவைச் சேர்ந்த திருமதி கிறேஸ் யுவக்கீன் 26-04-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் – எலிசபெத் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சவிரிமுத்து யுவக்கீனின் அன்பு மனைவியும், பிரான்சிஸ் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகஸ்தர்), காலஞ்சென்ற ஜோண் (சிறைச்சாலை அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லூசியா, அருளம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் அருளானந்தம், காலஞ்சென்ற அன்ரனி, செல்வராணி, ரோகிணி (கனடா), ராகினி (ஜேர்மன்), வினோதினி, [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும் இம்மானுவேல் (கொழும்பு], தோமஸ்(கனடா), விக்னேஸ் [ஜேர்மன்] ஆகியோரின் அன்பு மாமியாரும் றெஜினோல்ட் [U.K], இராஜேந்திரா [U.K], சிறாணி, சாந்தக்குமார், தர்சினி, இவோன் [கனடா), ஜேன் [கனடா], சிறோமி [ஜேர்மன்], ஜாண் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 02-05-98 இன்று சனிக்கிழமை மாலை 3 மணி(ப. நே) அளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
S. இம்மானுவேல்
(மருமகன்)

3, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி.

(55685)

## ஐயாத்துரை பஞ்சலிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற இ. போ. ச. சாரதியுமாகிய ஐயாத்துரை பஞ்சலிங்கம் 01 - 05 - 98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, செல்வராஜா, விபுலானந்தராஜா, ரவீந்திரராஜா, வனஜாராணி, கிரிஜா, மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கந்தசாமி, விமலாதேவி, சரோஜாதேவி, ஜெயந்திமாலா, சந்திரலிங்கம், கனகலிங்கம், விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02-05-98 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஏழாலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
A. P. செல்வராஜா
(மகன்)

மில் லேன்,
ஏழாலை மேற்கு.

(55691)

## முத்துத்தம்பி மனோன்மணி

இணுவில் தெற்கைச் சேர்ந்த முத்துத்தம்பி மனோன்மணி காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், இணுவில் ஐங்கரன் பந்தல் சேவை உரிமையாளர் சண்முகம், சாரதாதேவி, தங்கரத்தினம், சறோஜினிதேவி (பதுளை), இந்திராணி, காலஞ்சென்ற சரஸ்வதி, மகேந்திரராணி, மாலினி, இராசலட்சுமி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மகாலிங்கம், நடராசா, நீதிராசா, பாலசுப்பிரமணியம், கனகரத்தினம், சிவசம்பு, சிவலிங்கம், பிரியநாதன், அமிர்தகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் இன்று (02 – 05 – 98) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தகவல்:
சண்முகம் (மகன்)
(ஐங்கரன் பந்தல் சேவை உரிமையாளர்)

இணுவில் தெற்கு,
இணுவில்.

(55696)

# யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் பொ. ஐ. மு. போட்டியிடாதது ஏன்?

## யாழ். மேதினக் கூட்டத்தில் விளக்கம்

யாழ்ப்பாணம்: மே 2

'' யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட நாம் முன்வந்தபோது, ஜனாதிபதி வழங்கிய அறிவுரையையடுத்து அந்த முயற்சியைக் கைவிட்டோம் '' — என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வட பிரதேச பொதுச் செயலாளர் ஒஸ்வோல்ட் தெரிவித்தார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்திய மேதினக் கூட்டத்திலேயே அவர் இப்படிக் கூறினார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள முன்னணியின் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான சமாதானப் பேரணி துரையப்பா விளையாட்டரங்கை அடைந்ததும் அங்கு கூட்டம் நடைபெற்றது. ஊர்வலத்திலும் கூட்டத்திலும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே பங்கு பற்றினர்.

அங்கு பேசுகையில் ஒஸ்வோல்ட் மேலும் கூறியதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இங்கு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால், ராணுவ அழுத்தம் காரணமாகவே மக்கள் ஆளும்கட்சிக்கு வாக்களித்ததாக ஏனைய கட்சிகள் குறை கூறும் என்றும்– ஆகவே தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்ப்போம் என்றும்– ஜனாதிபதி அறிவுரை கூறினார்,

இதன் காரணமாகவேநாம் தேர்தலில் போட்டியிடவில்லை,

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சிகள் ஆயுதபாணிகளாகச் செயற்பட நாம் நிரந்தர சமாதானத்தை நோக்கி செயற்படுகிறோம்–என்றார்.

யாழ். நாகவிகாராதிபதி உரையாற்றுகையில், போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தைக்கட்டி எழுப்புவதே எமது குறிக்கோள்– என்று கூறினார். மற்றும் பலரும் உரையாற்றினர்.

(உ–3–8–ரீ)

# மிதிவெடி அகற்றுவது குறித்து ஆராய நிபுணர்

## யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், மே 2

ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இங்குள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியை மதிப்பிடுவதற்காக கண்ணிவெடி நிபுணர் டேவிட் ரெய்லர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

கண்ணிவெடி, மிதிவெடிகள் உள்ள இடங்கள், அவற்றால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக பலதரப்பட்டவர்களுடன் பேசி வரும் இவர் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார்.

தமது யாழ். விஜயத்தின் பின்னர் இங்கு கண்ணிவெடி அகற்றும் பணியை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை அவர் ஜெனிவாவில் உள்ள தமது அமைப்பின் தலைமையகத்துக்குச் சமர்ப்பித்தார்.

அதன் பின்னர் கண்ணிவெடியகற்றும் குழு இலங்கை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ–3)

# தமிழ்மொழி திறன் போட்டி

யாழ்ப்பாணம், மே 2

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தினப் போட்டிகளின் தெரிவுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் காலை 8-30 மணி முதல் நடைபெறும்.

இப் போட்டிகளில் 1 ஆம், 2 ஆம் பிரிவுகளுக்குரிய மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர். இதில் வெற்றியீட்டும் மாணவர்கள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாவார்கள்.


யாழ்.
**றீகல்** வெண் திரையில்

சனி, ஞாயிறு
காலை 8-30 மணி
CYBORGCOP
(Part - II)
(அதிபயங்கர சண்டைப் படம்)

10–30 மணி
ராம்கி, விஜயசாந்தி
தடயம்

பிற்பகல் 2–30 மணி
சுப்பஸ்ரார் ரஜனி
பாண்டியன் IPS

(55698)



**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்
அகல வெண்திரையில்
02-05–98 சனி
விஜய், தேவயாணி
நினைத்தேன் வந்தாய்
(CD வெளியீடு)
10– 30 — 2-30

(55689)



**வைஷ்ணவி திரையரங்கு**
(ஷண் றெக்கோடிங் மேல்மாடி)

சனிக்கிழமை
முரளி, குஷ்பு
நடித்த
வீரத்தாலாட்டு
(C. D. பிரதி)

ஞாயிற்றுக்கிழமை
ராஜ்கிரண், குஷ்பு
நடித்த
பொன்னுவிளையிற பூமி
(C. D. பிரதி) (55697)



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
அகல வெண்திரையில்
இன்று முதல்
ரஜனி, குஷ்பு, ஜனகராஜ்
நடித்த
அண்ணாமலை
(CD வெளியீடு)
நேரம்:– 10-30, 2–30
(பழைய நேரம்)
தொலைபேசி இல:
070 21223

(55326)


## தொண்டராசிரியர் கவனத்திற்கு

நிரந்தர நியமனம்கோரி யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களும், வித்தியாலய அதிபர் சங்கமும் இணைந்து கல்வி வலயம்- I இல் எதிர்வரும் 4–5–98 ஆம் திகதி அன்று காலை 7.00 மணியளவில் மறியல் போராட்டம் முன் குறிப்பிட்டது போல நடத்தவுள்ளனர். அன்றைய தினம் சகல தொண்டராசிரியர்களும் கலந்துகொள்வதுடன் தமது பெயர். சேவைக் காலத்தினையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**இலங்கை வித்தியாலய அதிபர் சங்கமும்**
**தொண்டர் ஆசிரியர்களும்.**

(சி/3621)


**WANTED**

Wanted a house on rent for running office in Jaffna to
**FORUT (INGO)**
Preference will be given to Nallur area.
Further details please contact.
Senior project Co-ordinator,
FORUT,
Point Pedro
within one weeks.

(55687)


# மரண அறிவித்தல்

## செல்வநாயகம் சுகிர்தநாயகம்

(அப்பு, நாயகம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் சோதிவேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சுகிர்தநாயகம் 30–04–98 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சு. நகுலேஸ்வரி
(மனைவி)

சோதிவேம்படிலேன்,
மானிப்பாய்.

(55694)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்தைக் கைப்பற்ற படைகள்

# புதிய உத்தி வகுக்க வேண்டிய நிலை!

வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஸ்ரீ லங்கா அரசுத் துருப்புகள் கடந்த ஒருவருட காலமாக மேற் கொண்டு வரும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை அடுத்து வரும் வாரங்களில் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்தவின் நீடிககப்பட்ட பதவிக்காலம் கடந்த மாத இறுதியுடன் முடிவடைவதாக இருந்தது. ஆனால் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை அவரின் தலைமையில் தொடர்வதற்கு வசதியாக அவரின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் பதினொரு நாள்களில் 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாகி விடும். அந்த நாள்களை ஒட்டி, பரபரப்பான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு அல்லது மேற்கொள்வது போல பிரசாரம் செய்து, அக்காலத்தில் தமது தரப்புக்கு எதிராக எழக்கூடிய இராணுவ விமர்சனங்களை முறியடிக்க அல்லது முடிமறைக்க அரசுத் தரப்பு




தயாராகும் என்பது திண்ணம்.

'வெற்றி உறுதி' ஒரு வருடம் பூர்த்தியாகும் போது, அதுவரை அந்த நடவடிக்கையால் ஏற்பட்ட பலாபலன்கள், சாதக—பாதகங்கள், வெற்றி— தோல்விகள் ஆகியவை பற்றியெல்லாம் தென்பகுதிப் பத்திரிகைகள் பிய்த்துப் பிய்த்து உதறும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

அதனால் எழக்கூடிய விளைவுகளைச் சந்திக்க விரும்பாத அரசுத் தரப்பு, அத்தகைய விமர்சனங்களை அடித்துச் செல்லக் கூடிய தான — பரபரப்பான — இராணுவ நடவடிக்கைகள் பற்றிய — தகவல்களை அக்காலத்தை ஒட்டி வெளியிடும் என எதிர்பார்க்கலாம்.

தற்போது அரசுத் துருப்புகள் மாங்குளத்துக்கு ஏழு கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளன. அங்கிருந்து கொண்டு மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக படை நகர்வுகளை ஆரம்பிக்கும் போதெல்லாம், புலிகளின் கடும் எதிர்ப்பை அரசுத் துருப்புகள் சந்திக்க வேண்டியிருக்கின்றது.

கடந்த இருபதாம் திகதியும் இவ்வாறே ஒலுமடுப் பகுதியிலிருந்து முன்னேற படைகள் முயன்ற சமயம் புலிகளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டியதாயிற்று; நூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்தனர்; முந்நூறுக்கும் அதிக படையினர் படுகாயமடைந்தனர்; கைப்பற்றிய நிலப்பிரதேசத்தையும் விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

இதற்கு முன்னர் ஒலுமடுப் பகுதியில் புலிகள் மேற் கொண்ட ஷெல் தாக்குதலில் அங்கு நிலை கொண்டிருந்த 55 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சரத் பொன்சேகா காயமடைந்தார். அவருக்கு இப்போது மேஜர் ஜெனரல் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

காயமடைந்த சரத் பொன் சேகாவின் இடத்துக்கு 55 ஆவது படையணி கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் நிஹால் மாரம்பே நியமிக்கப்பட்டார்.

கடந்த 20ஆம் திகதி ஒலுமடுப்பகுதியில் படையினர் மேற் கொண்ட நகர்வு முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்ட போது படையினர் தாம் கைப்பற்றி நிலை கொண்டிருந்த ஒரு கிலோ மீற்றர் தூர பிரதேசத்தைக் கைவிட்டு பின் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது, இப் பின்வாங்கலுக்கான உத்தரவை பிரிகேடியர் மாரம்பேயே பிறப்பித்திருந்தார்.

ஆனால் இந்தப் பின்வாங்கல் படை உயர் வட்டாரங்களை சீற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது. கைப்பற்றிய பிரதேசத்தை விட்டுக் கொடுத்ததாலும், யுத்தத்தில் பின் வாங்கிய காரணத்தாலும் பிரிகேடியர் மாரம்பே தண்டனை இடமாற்றத்துடன் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டார். தமது துருப்புக்களுக்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்கவே தாம் படைகள் பின் வாங்குவதற்கான உத்தரவை விடுத்ததாக பிரிகேடியர் மாரம்பே கூறிய விளக்கத்தை படைத்தலைமைப் பீடம் ஏற்க மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

எப்படியும் மாங்குளத்தை விரைவில் கைப்பற்றி விட வேண்டும் என்பதில் படைத் தரப்பு மும்முரமாக உள்ளது.

மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சியின் போது புலிகளிடமிருந்து கிடைக்கும் அதே கடும் எதிர்ப்பை புளியங்குளம், கனகராயன்குளம் ஆகியவற்றைக் கைப்பற்றும் போதும் புலிகளிடமிருந்து படையினர் எதிர் கொண்டனர்.

எனவே புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கனகராயன்குளம், புளியங்குளம் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு எடுக்கப்பட்ட அதே உத்தியை மாங்குளம் விடயத்திலும் கைக்கொள்ள அரச படைகள் முனைந்து வருகின்றன.

கண்டி வீதி வழியாக முன்னேறி கனகராயன்குளம், புளியங்குளம் ஆகியவற்றை கைப்பற்ற முனைந்த போது புலிகளின் எதிர்ப்பு பலமாக இருக்கவே, துருப்புக்கள் நேரடியாக கண்டி வீதி வழியாக முன்னேறுவதைக் கைவிட்டு, பல்வேறு முனைகளிலும் பிரிந்து, சம்பந்தப்பட்ட பிரதேசத்தை (கனகராயன் குளம், புளியங்குளம்) முக்கால் பிறை வடிவில் சுற்றி வளைத்து அப்பிறைக்குள்ளே இருக்கும் புலிகளின் நிலைகளுக்கு அழுத்தம் கொடுத்து அங்கிருந்து புலிகளை வாபஸ் பெறச் செய்து, அப் பிரதேசங்களைக் கைப்பற்றியது.

புளியங்குளம் விடயத்தில்—

வெலிஓயா, நெடுங்கேணிப் பகுதிகளால் முன்னேறிய துருப்புக்கள் கிழக்குப் புறத்திலும்—

வவுனியாவிலிருந்து கண்டி வீதி வழியாக வந்த துருப்புக்கள் தெற்குப் புறத்திலும் —

புதூர் வழியாக முன்னேறிய துருப்புக்கள் மேற்குப் புறத்திலும் —

சூழ்ந்து நின்று முக்கால் பிறை வடிவ வியூகத்தை வகுத்தன. அதன் மூலம் புளியங்குளத்தைக் கை விட்டு புலிகள் பின் வாங்கும் நிலை ஏற்பட்டது.

கனகராயன் குளம் விடயத்தில் —

விஞ்ஞானக்குளம், கரப்புக்குத்தி பகுதிகளில் புலிகளின் பலத்த தாக்குதலில் ஏற்பட்ட இழப்புகளுடன் முன்னேறிய படையணி கிழக்குப் புறத்திலும் —


புதூர், மன்னகுளம் பகுதியால் முன்னேறிய துருப்புக்கள் மேற்குப் புறத்திலும் —

புளியங்குளம் பகுதியால் கண்டி வீதி வழியாக முன்னேறிய துருப்புக்கள் தெற்குப் புறத்திலும் —

சூழ்ந்து நின்று பிறை வடிவ வியூகத்தை வகுத்து கனகராயன் குளத்தை இறுதியில் கைப்பற்றின.

இதே உத்தியை மாங்குளம் விடயத்திலும் அரசுத் துருப்புக்கள் பயன் படுத்த முயற்சித்தாலும் ஏற்கனவே கிடைத்த அனுபவங்களை வைத்துக் கொண்டு மாற்று எதிர்ப்பு வழிகளை புலிகள் தயாரித்து விட்டதாக அறிய வருகிறது. இதன் காரணமாக தமது முன்னைய உத்திகளைக் கைவிட்டு வேறு வழிகளை நாட வேண்டிய நிலை அரசுத் துருப்புக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போதய கண்டி வீதியில் மாங்குளத்தைக் கைப்பற்ற முயல்வது பலத்த இழப்பையும் பின்னடைவுகளையும் தரும் என்பதால்அந்த முயற்சியைக் கைவிட்டு வேறு மார்க்கத்தில் கிளிநொச்சியை அடையலாமா என்பது குறித்தும் படை உயர் வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள்.



இதற்கு பழைய கண்டி வீதியைப் பயன் படுத்தினால் என்ன என்றும் ஆலோசிக்கப் படுகின்றதாம்.

கற்கிடங்கு, கரிப்பட்ட முறிப்புப் பகுதிகளில் படைகள் உள்ளன. அங்கிருந்து பழைய கண்டி வீதியில் அம்பகாமம், முதலியாகுளம், பழைய கொக்காவில், இரணைமடு, வட்டக்கச்சி ஆகியவை வழியாக கிளிநொச்சியை அடையும் மார்க்கம் பற்றியும் சிந்திக்கப்படுகிறது.

வன்னியில் படை நகர்வை ஏனைய இடங்களில் கடுமையாக எதிர்க்கும் புலிகள் பழைய கண்டி வீதிப் பாதையைபடைகள் நாடும் விதத்தில் தமது எதிர்ப்பை அப் பிரதேசங்களில் தளர்த்தி வருவதாகவும் தெரிகிறது.

அதாவது வடக்கிற்கு பாதுகாப்பான தரைவழி விநியோகப் பாதையை திறக்கும் முயற்சியில் பிடிவாதமாக இருக்கும் அரச துருப்புகளை பழைய கண்டி வீதிப் பாதையை நோக்கி திசை திருப்புவதில் புலிகளும் ஆர்வமாக உள்ளனர்.

பழைய கண்டி வீதிப் பாதையை அரசுத்துருப்புகளுக்கு ஒரு பொறியாக புலிகள் பயன்படுத்த எத்தனிப்பதாக இராணுவ விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தப் பழைய கண்டி வீதிப்பகுதி இரணைமடுக்குளம் போன்றவற்றுக்குரிய நீரேந்து பிரதேசமாகும். மழைகாலத்தில் பெரு வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய பிரதேசமும் கூட.

எதிர்ப்புக் காட்டி காலத்தை இழுத்தடித்துக் கொண்டு பழைய கண்டி வீதி வழியாக அல்லது அதற்கு அண்மித்த பிரதேசங்கள் வழியாக படைகளை நகர வைத்தால் அங்கு நிலை கொளளும் படைகளை மழை காலத்தில் ஒரு வாங்கு வாங்கலாம் என்று புலிகள் திட்டமிடுகின்றனர்.

ஆனால் பழைய கண்டி வீதிப் பாதையை நாடுவது மழைகாலத்தில் ஆபத்தைத் தரவல்லது என படைத் தரப்புக்கு நன்கு தெரியும். எனவே புலிகள் விரிக்கும் வலையில் சிக்காமல் தப்ப படைத்தரப்பு ஆலோசிக்கிறது.

ஒரு கேந்திரத் தளத்தை கைப்பற்றுவதற்கு முக்கால் பிறை வடிவத்தில் அல்லது 'யூ' வடிவத்தில் அதனைச் சுற்றி வளைக்கும் கிடுக்கிப் பிடி நகர்வை (Pincer Movement) அரசுத் துருப்புக்கள் மேற் கொண்டதும் —

அதனை எதிர்க்கும் மாற்றுத் தற்காப்பு வழிகளைத் தயாரிப்பதில் புலிகளுக்கு முன்னனுபவம் கிட்டியிருப்பதும் —

வன்னிச்சமர்க்களத்தில்இரு தரப்புகளும் மேலும் புதிய புதிய யுத்திகளை நாடுவதற்கு —

அறிமுகப்படுத்துவதற்கு — வழி செய்யுமென எதிர்பார்க்கலாம்.

வன்னி யுத்த களத்தில் புலிகளின் ஆட்லறி தாக்குதல்களைச் சமாளிப்பதற்கும், எதிர்கொள்வதற்கும் புதியவழிமுறைகளை படைத் தரப்பு செய்து வருகின்றது. காடுகளிடையே உள்ள பாரிய மரங்களுக்கிடையே தமது ஆட்லறி நிலைகளை வைத்து புலிகள் தாக்குவதாகவும் —

இதனால் அந்த ஆட்டிலறி நிலைகளைப் பதில் தாக்குதல் நடத்தி அழிக்சமுடியாது இருப்பதாகவும் —

அரசுத் தரப்பு படை வட்டாரங்கள் கூறுகின்றன.

எனவே தாம் நிலைகொண்டுள்ள இடங்களிலிருந்து சிறு சிறு கொமாண்டோ அணிகளாக முன்னேறி, தொலைவிலுள்ள மரங்களை அடியோடு அழித்துவிட்டு வரும் நடவடிக்கைகளிலும் படைகள் ஈடுபட்டுள்ளன.

இப் பகுதிகளில் உள்ள காடுகளில் மரங்களுக்கு புலிகள்இலக்கங்களைப் பொறித்திருப்பதாகவும்—

அந்த இலக்கங்களை வைத்துக் கொண்டு தமது தாக்குதலுக்கான— துல்லியமான— நிலையங்களை அவர்கள் குறைந்த நேரத்தில் தீர்மானிக்கக்கூடியதாக இருப்பதாகவும்— கூறப்படுகின்றது.

இதற்கிடையில் புலிகளின் ஆட்லறி, மோட்டார் குண்டுகளை ஏவும் நிலைகளை துல்லியமாகக் காட்டக் கூடிய அதிநவீன ராடர் கருவிகள் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டுவன்னி யுத்தகளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**பாசுபதன்**

இந்த நவீன கருவிகளைப் படைத்தரப்பு கடந்த பத்து நாள்களாக பயன்படுத்தத் தொடங்கியிருப்பதாகவும்—

இதனால் புலிகளின் பீரங்கி, மோட்டார் தாக்குதல்கள்வெகுவாகக் குறைந்து விட்டதாகவும்—

யுத்த முனைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதே சமயம், அரசுத்தரப்புத் துருப்புகள், புலிகள் மீது தாம் தாக்குதல் நடத்தும் பீரங்கிகள் புலிகளின் கைகளில் சிக்கிவிடாமல் பாதுகாப்பது போல இந்த அதிநவீன ராடர் கருவிகளையும் விசேட கவனம் எடுத்துப் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

படையிடம் உள்ள பீரங்கிகளைக் கைப்பற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு கண் வைப்பது போல் இந்த ராடர் கருவிகளையும் கைப்பற்ற அல்லது அழிக்க புலிகள் முயலலாம் என படைத்தரப்புக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வன்னிபடை நடவடிக்கை தாமதமாவதால் சீற்றம் கொண்டுள்ள சில இராணுவ விமர்சகர்கள் நடவடிக்கையை வழிப்படுத்தும் அதிகாரிகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென அரசுக்கு ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

தற்போது மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ள படையணிக்குப் பொறுப்பாக இருப்பவர் இராணுவஅதிகாரி மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா ஆவார். யாழ்ப்பாணத்தைப் படைகள் கைப்பற்றும் நடவடிக்கையை முன்னின்று வழிநடத்தியவர் இவர். புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசுப் படைகளுக்கு சில முக்கிய வெற்றிகளை ஈட்டிக்கொடுத்தவர். மந்தமடைந்துள்ள வன்னி நடவடிக்கையை துரிதப்படுத்தி வெற்றியை உறுதிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கல் பேடஸ் ஒன்றின் விலை 200 ரூபா. கையிருப்பு முடியும் வரை சனி, ஞாயிறு சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
[55676]

நல்ல நிலையில் உள்ள 700 ஓடுகள், தீராந்திகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கட்கு: தி. உமா, உடையார் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில். பார்வையிடும் நேரம் தினமும் மாலை 3.00 மணிக்குப் பின். [55668]

ஒரு மாதம் நிரம்பிய பூச்சி நீக்கிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. வாவு, டச்சு வீதி, மானிப்பாய்.
[55678]

### உடன் விற்பனைக்கு

பிறிமா ஒரு நாள் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 20 மட்டுமே ''மல்லிகாபதி'' மார்க்கற், கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
[55397]

### தவறிவிட்டது

சதாசிவம் தமயந்தி ஆகிய எனது ¾ பவுண் சாறிபுறோச் பருத்தித்துறை பஸ்ஸில் 29-4-98 புதன்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 48, புரூடிலேன், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[55656]

கனகசபை சிவாகரி என்பவரது தேசிய அடையாள அட்டை (777780751V), விசேட அடையாள அட்டை (090700164) என்பன பிரதான வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். 14/1, அன்னச்சத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம், அல்லது மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[55677]

### வேப்பம் பூ தேவை

வேப்பம் பூ சேகரித்து வைத்திருப்பவர்கள், சேகரித்து தரக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். உரிய விலை கொடுக்கப்படும். வீ. வெற்றிவேல், 343, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்).
[55329]

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் உள்ள கல் வீடு (வளவு 2 பரப்பு 16குழி) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 732, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [55369]

### வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து வகுப்புகள் மற்றும் விசேட சிங்கள வகுப்புகள் புதிய பிரிவு 03-05-98 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பம். தொடர்பு: சாயி, இல. 116, பலாலி வீதி, (கராச் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[55350]

### ஆங்கிலக்கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 730, C/o உதயன், யாழ்ப்பாணம். [55286]

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 19 — 11 — 1931



உதிர்வு: 25 — 04 — 1996

### அமரர் விசுவர் கந்தையா
(சோமு)

திதி: 02-05-1998

அன்பிற்கோர் அணையா விளக்காய்
உதித்த அன்புத் தெய்வமே!
குலவிளக்காய் மிளிர்ந்து எமது நலம் காத்த —
தந்தையே!

கலங்குமெங்கள் கண்களெல்லாம்
குலமதுவாய் மாறிநீர் அலைமோதுதப்பா
பலரறிய முடியாது தானே அகன்றதுவே
ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப்பூக்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி க. இராசகிளி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மச்சான், மச்சாள்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி

(சி/3603)

---

## ST. John's College Jaffna
### Old Boys' Association

175th Anniversary Celebration LUNCH
on Thursday 7th May 1998
Tickets - Single RS. 250/-
Couple RS. 400/-

Those who Wish to buy tickets please Contact The Hony Treasurer Mr. T. NANTHAKUMARAN AT COLLEGE. Before 5th May 1998

Hony Secretary
O. B. A/ S. J. C

(சி/3540)

---

## எட்டாம் ஆண்டு நினைவு துயர்த் துளிகள்



அன்னை மடியில்:
13 — 10 — 1950

ஆண்டவன் அரவணைப்பில்:
02 — 05 — 1990

### தேவராசா ஆரோக்கியம்

[illegible]
ஆண்டு எட்டு சென்றாலும்
ஆறாது எங்கள் நெஞ்சக் கவலை.
உம்முடைய எழில் முகம் எம்மைவிட்டு
[illegible] அகலவில்லை!
அன்னையாய் தந்தையாய் ஆதரித்துவிட்டு
எங்கே போய் விட்டாய் அம்மா?

உம் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(55356)

---

உ

அருள்மிகு

## ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
### வருடாந்த மணவாளக் கோல சங்காபிஷேகம் - 1008

நிகழும் வெகுதானிய வருடம் (03 - 05 - 98) ஞாயிறு அம்பாளுக்கு மணவாளக் கோல சங்காபிஷேகம் (1008) நிகழ திருவருள் கூடியுள்ளது.

கர்மாரம்பம் - காலை 7. 30 மணி
சங்காபிஷேகம் - காலை 11. 00 மணி
வசந்த மண்டபப் பூசை - மாலை 3. 30 மணி

அதனைத் தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை, திருஊஞ்சல், அம்பாள் பூந்தண்டிகையில் திருவீதிஉலா வருதலும் இடம்பெறும்.

கிரியா குரு:-
சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள்
(முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம், திருநெல்வேலி)

தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு:-
**E. S. P. பேரம்பலம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3620)

---

## ஊரெழு கலைவாணி
பாலர் பாடசாலை அபிவிருத்தி நிதிக்கான

### கலை நிகழ்வு

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கு

காலம்: 03 - 05 - 98 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30 மணி (இலங்கைநேரம்)

நாடகம்
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட
மாணவர்களின்
**செந்நீர் கோவணங்கள்**
மற்றும் நடனநிகழ்வுகளும் இடம் பெறும்
பிரவேசம்: 20 /-, 50 /-

விளம்பர அன்பளிப்பு:
**ராஜா கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(55655)

---

## வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சமாதான நீதிவான்களாக பதவி ஏற்றிருக்கும் எமது சங்க அங்கத்தவர்களாகிய

திரு. S. M. பாலசுப்பிரமணியம்–கொழும்பு
திரு. ஆ. சி. கணேஷவேல்–ஆனைக்கோட்டை
திரு. சி. பேரின்பநாயகம்–சுன்னாகம்
திரு. சி. சிவரட்ணம்–யாழ்ப்பாணம்

ஆகியோரை நீடூழி வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் க. பொ. த. (உயர்தரவகுப்பில்) கற்கும் மாணவர்களில் எமது சங்கத்தால் தெரிவு செய்யப்பெற்ற மாணவர்களுக்கு 03 - 05 - 98 ஞாயிறு காலை 10. 00 மணியளவில் எமது காரியாலயத்தில் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். தயவுசெய்து எமது சங்கஅங்கத்தவர்களை இதில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
207, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

அன்பளிப்பு:
**'எரிக்கணேஷ்'**
[மூக்கு கண்ணாடி விற்பனையாளர்]
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3616)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் ஊழியர் போராட்டத்தின் பின்னணியில் ஜே. வி. பி., ஐ. தே. க.!

## அமைச்சர் மங்கள குற்றச்சாட்டு

கொழும்பு, மே 2

தற்சமயம் நடைபெறும் தபால், தொலைத் தொடர்பு சேவை தொழிலாளரின் போராட்டத்தின் பின்னணியில் ஜே. வி. பி. யும் ஐ. தே. கவும் உள்ளன. தபால்தொலைத் தொடர்பு வெகுஜனத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் தமது கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று ஜே. வி. பி. அமைப்பு அறிவித்ததும், கைதானவர்களுக்கு சட்ட உதவி வழங்க ஐ. தே. க. முன் வந்தமையும் — அவை இந்தப் போராட்டத்துக்கு உதவுகின்றன என்பதையே எடுத்துக் காட்டியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-7)

# குடாநாட்டுக்கு மேலும் 1,000 தொலைபேசிகள்

கொழும்பு மே 2

யாழ்ப்பாணத்துக்கு மேலும் ஆயிரம் தொலைபேசித் தொடர்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பாவனையாளர் சேவைப் பணிப்பாளர் கிறிஷ்ரி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த 3 அல்லது 4மாதங்களுக்கிடையில் இந்த சேவை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச் சேவையைவழங்க சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் சுமார் 30 கோடி ரூபாவை செலவு செய்துள்ளது எனவும் இத்திட்டத்தின் கீழ் 300 வானொலி தொலைபேசிகளும் Radio (TelePhone) வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசிகளை வழங்கத் தேவையான கேபிள்களை கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# இரட்டைக் குழந்தைகளை காரில் பிரசவித்த தாய்

நெல்லியடி, மே 2

பிரசவத்திற்காக வைத்தியசாலைக்கு காரில் கொண்டு வரப்பட்ட நிறைமாதக்கர்ப்பிணிப் பெண் ஒருவர், அழகான இரு பெண்குழந்தைகளை காருக்குள் பிரசவித்தார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் மந்திகை மருத்துவமனை வாயிலில் இடம்பெற்றது.

இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த தவராசா—சாந்தம் (வயது 33) என்னும் கர்ப்பிணித்தாயே இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

இச் சமயம், ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் பணியில் ஈடுபட்டிருந்த காவலாளியும், சிற்றூழியர்களும் முதலுதவி மேற்கொண்டதின் பின் வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்கு அனுப்பி வைத்தனர்.

தற்பொழுது தாயும்சேய்களும் நலமே உள்ளனர்.

(ஐ-109-173)

# 10 ஆம் திகதிக்கு முன் சந்தையை திறக்குக

## திருமலைநகரசபைதீர்மானம்

திருகோணமலை, மே 2

திருகோணமலை நகரில் 60 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன சந்தையை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் திறக்க அனுமதிக்க வேண்டும்.

இல்லையேல் அதன் பின்னர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

திருகோணமலை நகரசபையின் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த சபையின் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாகச் சந்தை திறக்கப்படாவிட்டால் வடக்கு— கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம், திருமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் முன்பாக உண்ணாவிரதம் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-3)

## A REQUIEM MASS

A Requiem Mass has been arranged for the Late Antony Alphonsus, the Father of Rev. Fr. A. I. BERNARD (The Rector, St. Patrick's College).

It will take place at St. Mary's Cathedral On Monday the 4th of May at 10. 00 a m.

All are Kindly requested to join the Requiem Mass

Rev. Fr. J. S. Jeevanadas Ferando
O. M. I.
St. Patrick's College,
Jaffna.

(C/3615)

## பாய்கள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய் மே 2

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திய சாலைக்கு நோயாளர்களின் நலன் கருதி 60 பாய்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இவ் வைத்தியசாலை வார்ட்டுகளில் நோயாளர்களுக்கான கட்டில்கள் பற்றாக் குறையாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## சீருடை கொடுப்பனவு

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி வரும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு சீருடைக்கான கொடுப்பனவாக ஐயாயிரத்து 200 ரூபா கடந்த ஏப்ரல் மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## தராசு படிகளுக்கு முத்திரை

வல்வெட்டித்துறைப் பகுதியில் பாவனையிலிருக்கும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை நகர சபைக்கட்டடத்தில் முத்திரை இடப்படவுள்ளது.

(ஐ-109)

## சண்டிலிப்பாய் கோட்ட விளையாட்டு

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் செ. மகாலிங்கம், சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பிரதிகல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(ஐ 135)

## உடற்பயிற்சி போட்டி

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

இப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கரவெட்டி மருதங்கேணிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கலந்து கொள்வார்.

(ஐ-ரீ)

# கிருஷாந்தி வழக்கு விசாரணை முடிவு

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசாமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்ததாக படையினர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் கடந்த புதன் முடிவடைந்தன.

''இந்த வழக்கின் சாட்சியங்கள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. எதிர்வரும் 6 ஆம் திகதி தொகுப்புரை நிகழ்த்துவதற்கு அனுமதிக்க வேண்டும்.'' என்று அரச சட்டவாதி பிரசாந்தி மகிந்தரட்ண விடுத்த கோரிக்கையை நீதிபதி அனுமதித்தார்.

''டிரயல் அட்பார்'' முறையில் மேல் நீதிமன்ற நீதிபதிகளான நிமல் ஈ திஸநாயக்க, அன்ரூ சோமவன்ஸ, காமினி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் இவ் வழக்கு கடந்த பல மாதங்களாக நடைபெற்று வந்தது.

வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள படையினர் தமது சாட்சியங்களில், இந்தக் கொலைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தெரிவித்தனர்.

சாட்சியங்கள் அனைத்தும் முடிவடைந்ததையடுத்து மே ஆறாந் திகதி தொகுப்புரை நிகழ்த்த அனுமதிக்க வேண்டும் என்ற அரச சட்டவாதி பிரசாந்தி மகிந்தரட்னவின் கோரிக்கையை ஏற்று நீதிபதி தொகுப்புரை நிகழ்த்த அனுமதி வழங்கினார்.

(ஐ-8)

# பாடசாலை கூரை, ஓடு இரவு வேளை திருட்டு

தென்மராட்சி, மே 2

சாவகச்சேரி கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் உள்ள கூரை ஓடுகள், மரங்கள் இனந் தெரியாதோரால் இரவு வேளைகளில் அபகரித்துச் செல்லப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கையின் பின்னர் இப் பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டு இயங்காததால் விஷமிகள் இவ்வாறு பாடசாலைப் பொருள்களை திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


## NEW SCIENCE COLLEGE
## JAFFNA

A/L - 97 & 98
CHEMISTRY
Mr. N. மகேஸ்வரன் B. Sc Dip. - Edu.
ORGANIC PAPER CLASS
ஆரம்பம்: 03 - 05 - 98 Sun 1, 30 P. m.

(55679)


ஓம் சாயிராம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### சின்னப்பு பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், கனகரத்தினம் மகா வித்தியாலயம், ஸ்தாபகர்-அரியாலை சத்தியசாயி நிறுவனம்)

தாயின் மடியில்: **01 - 11 - 1908**

சாயிபகவான் திருவடியில்: **02 - 04 - 1998**

இன்று 02 - 05 - 98 10. 30 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

85/07, ஆனந்தம் வடலி வீதி,
கொழும்புத்துறை.

(55681)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது!

நெல்லியடி, மே 2

கடந்த செவ்வாயன்று நெல்லியடி பஸ் நிலையப் பகுதியில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தில் சைக்கிளில் வந்த வயோதிபர் ஒருவர் லொறியினால் மோதுண்டு உயிரிழந்தது தெரிந்ததே.

கொழும்பு செல்வதற்காக வங்கியில் பணம் எடுத்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வதிரியைச் சேர்ந்த கந்தையா நடராசா (வயது 65) என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

பருத்தித்துறையில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்றுடன் மோதுண்டதால் இந்த விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தை அடுத்து அவ்விடத்தில் கூடிய கூட்டத்தினரிடையே இருந்த விசமிகள் சிலர் விபத்தில் பலியானவரிடமிருந்த சுமார் 35 ஆயிரம் ரூபா பணத்தை 'அபேஸ்' செய்துள்ளனர். அத்துடன் அவரது அடையாள அட்டையும் அபகரிக்கப்பட்டுள்ளது,

தேசிய அடையாள அட்டையை எடுத்தவர்கள் அதனைத் திருப்பி ஒப்படைக்குமாறு நெல்லியடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக சம்பந்தப்பட்ட லொறிச் சாரதி கைது செய்யப்பட்டார்.

சனக் கூட்டம் நிரம்பிக் காணப்பட்ட நெல்லியடி பஸ் நிலையப் பகுதியில் இவ் விபத்துச் சம்பவத்தை நேரில் கண்ட எவரும் மரண விசாரணையின் போது சாட்சியம் அளிக்க முன்வரவில்லை.

மரண விசாரணையை நடத்திய உத்தியோகப் பற்றற்ற பதில் நீதிவான் ஏ.கே, நடராஜா இது குறித்து கவலை தெரிவித்தார்.

இத்தகைய சம்பவங்கள் குறித்து சாட்சியமளிக்க மக்கள் தயக்கம் காட்டுவது குற்றச் செயல்கள் மேலும் அதிகரிக்கவே வழி செய்யும் என்று அவர் தமது தீர்ப்பில் தெரிவித்தார். (ஐ-109-173)

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை இலட்சுமி

காரைநகர் வேதரடைப்பைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இலட்சுமி 29-04-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், திரு. திருமதி கந்தையா அவர்களின் புதல்வியும், திருமதி செல்லையா தவமணி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், K.I.S.S. சங்கரன், மகேஸ்வரி, காலஞ் சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் கணேஸ்வரி, காலஞ் சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, காலஞ் சென்ற சோமசுந்தரம் மற்றும் பாக்கியலட்சுமி, நடராசமணியம் ஆகியோரின் அன்பு மாமியும், யசோதா (லண்டன்), பிரபானினி, பேரின்பவதனா, தயானினி, அரிகரகுமார், தாரணி, சற்குணராசா(நோர்வே), விஜயலட்சுமி, கிருபாலன், சிவகுமார், கலைமகள் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்சனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. நடராசமணியம்
(மருமகன்)

வேதர் அடைப்பு,
காரைநகர். (55675)

### திருமதி பரமேஸ்வரி செல்வரெத்தினம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி பரமேஸ்வரி செல்வரெத்தினம் 30-04-98 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மா. செல்வரெத்தினத்தின் [இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்] அன்பு மனைவியும், வசந்தி (குகன் மோட்டோர்ஸ், கொழும்பு), திருமதி ஆனந்தி (டென்மார்க்), வசந்தன் (நோர்வே), நிசாந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

தகனக்கிரியைகள் கொழும்பில் 03-05-98 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தகவல்:
திருமதி சுகுணா பாலாபரணம்.

கொக்குவில்

### செல்வி சந்திராதேவி நடராசா

(உதவி அதிபர், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்)

அம்மன் கோயிலடி கோப்பாய் வடக்கைச் சேர்ந்தவரும், கோப்பாய் நாவலர் வித்தியாலய உதவி அதிபருமான செல்வி சந்திராதேவி நடராசா 30-04-98 ஆம் திகதி காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற நடராசா அன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், திருமதி மதிவதனி நடேசு, இதயலட்சுமி சிவராசா, செல்வி பாலயோகினி, சிறீக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடேசு, சிவராசா ஆகியோரின் மைத்துனியும், இல்பகிதா, சண்முகதாஸ், கௌரிஸ்னி ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்தில் 01-05-98 மாலை தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிவராசா
(மைத்துனர்)

அம்மன் கோயிலடி,
கோப்பாய் வடக்கு. (55682)

## ஞாபகார்த்த அற நிதியம்

நல்லூர், மே 2

யாழ். மத்திய கல்லூரியில் காலஞ்சென்ற கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசாவின் பெயரில் ஞாபகார்த்த அற நிதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை மேற்படி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட உடனேயே 35 ஆயிரம் ரூபா நிதியத்திற்கென வழங்கப்பட்டுள்ளது. (ஐ-103)

## வங்காலையில் தாக்குதல்

மன்னார், வங்காலை பாதுகாப்பு நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

இந்தத்தாக்குதலின்போது சிப்பாய்கள் மூவர் காயமடைந்தனர்.

அதே சமயம் நேற்றுக் காலை ''வெற்றி உறுதி'' யுத்தமுனையில் இடம்பெற்ற மோட்டார் தாக்குதலில் 2 சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர் என இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

## தளுவத்த பதவிக்காலம் நீடிப்பு

இராணுவத் தளபதிலெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்தவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை முற்றுப் பெறாமல் இருப்பதால் இவருக்கு இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## 8,032 குடும்பங்கள் இதுவரை வந்தன

வன்னியிலிருந்து குடாக்கடல் ஊடாக இதுவரையும் 8 ஆயிரத்து 32 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 755 பேர் யாழ்ப்பாணம்திரும்பியுள்ளனர் என்று யாழ். செயலக புள்ளி விவரங்கள், தெரிவிக்கின்றன.

இதேவேளை திருக்கோணமலை ஊடாக கப்பல்மூலம் 21 ஆயிரத்து 112 குடும்பங்களைச் சேர்ந்த 67ஆயிரத்து 293 பேர் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

யாழ். குடாவில்தற்போது 1லட்சத்து 42 ஆயிரத்து 469 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 77, ஆயிரத்து 567 பேர் வசித்து வருகிறார்கள். (இ-5)

## ரீ. வி, றேடியோ விவரங்கள் சேகரிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் தற்போது பாவனையில் உள்ள வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகளின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் தத்தமது பிரிவில் வீடு வீடாகச் சென்று விவரங்களைச் சேகரித்து வருகின்றனர். (ஐ-117)

**மாங்குளத்தைக்....**
(மூன்றாம் பக்கத் தொடர்)

படுத்துவதற்கு இவரே பொருத்தமானவர் என அரசுக்கு இவர்கள் ஆலோசனை கூறி உள்ளனர்.

ஆனால் அடிப்படை மனித உரிமைகள் விவகாரத்தில் ஜனக பெரேராவுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க அரச உயர் பீடம் விரும்பவில்லை எனத் தெரிகிறது.

## அதிரடி அரங்கு

உயர்கல்விப் பீடங்களைப் பீடித்திருக்கும் 'ராகிங்' என்ற கொடிய நோய் பற்றி இப்பத்தியில் பல தடவைகள் பிரஸ்தாபித்தாகிவிட்டது. அண்மைக் காலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் இந்தக் கொடிய நோய் தணியும் அறிகுறி காணப்பட்டதைக் குறிப்பிட்டு மகிழ்ச்சியும் தெரிவித்திருந்தோம்.

ஆனால் உயர்கல்விப் பீடங்களில் நுழைந்துகொண்டுள்ள ஒரு சில சமூக விரோதிகள் அல்லது சமூக விரோத சக்திகள் தங்கள் போக்கை மாற்றுவதாக இல்லை.

பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன. அத்தகைய வகுப்பு ஒன்றில் பங்குபற்றுவதற்காக இவ்வாரம் யாழ். மத்திய கல்லூரிக்குச் சென்ற மாணவிகள் சிலரை 'ராகிங்' சமூக விரோதிகள் துன்புறுத்த முயன்றதாகவும்—

ஆனால் அவர்களை பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் நீதி கேட்டு, 'சிறு தட்டுத் தட்டி' அனுப்பி வைத்ததாகவும்—தகவல்.

இந்தச் சிறுதட்டால் குழம்பிப்போன அந்தக் கும்பல் 'தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடித்தப்பியது. வழியில் புகுமுக மாணவிகள் சிலர் சிக்க, அவர்களில் ஒருவரின் மணிக்கூட்டையும் அபகரித்து கைவரிசையைக் காட்டிச் சென்றதாகவும் தகவல்.

தமது சமூகத்தை உயர்த்தும் பொறுப்பு தங்களுக்கு உள்ளதா அல்லது இல்லையா என்பதைப் பல்கலைக்கழக சமூகம் தீர்மானிக்க வேண்டிய காலம் இது! தங்களுக்குள்ள சமூகப் பிரக்ஞையை வெளிப்படுத்தி, தங்கள் கடமையுணர்வை மக்கள் முன் வைக்க வேண்டிய விவகாரம் இது. பொறுப்புணர்வுடன் செயற்படாமல் இருந்துவிட்டு, சமூகத்தின் உயர்ந்த வழிகாட்டிகள்—படித்த அதிமேதாவிகள்—என்று காட்ட நினைப்பது பொருத்தமற்றது.

இந்த விடயத்தில் தமது சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் பகிரங்கமாக இறங்கி, தங்கள் சுயரூபத்தை அவர்கள் காட்ட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரியில் இவ்வாரம் நிகழ்ந்த சம்பவம் இரண்டு விடயங்களைக் காட்டுகின்றது.

ஒன்று—உயர்கல்வி கற்றவர்களில் அல்லது கற்கப் புகுந்தவர்கள் மத்தியில் உள்ள சமூகச் சீரழிவை அவர்களாகத் திருத்தாவிட்டால் மக்களே கொதித்தெழுந்து திருத்தும் நிலை வரும்.—இதன் விளைவை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டு—யாழ். மத்திய கல்லூரிச் சுற்றாடலில்—அக்கல்லூரிக்கு என—சமுதாயப் பிரக்ஞை உள்ள—ஒரு சமூகம் வளர்ந்து வருகின்றது.—இது பாராட்டுக்குரியது.

★ ★ ★

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டோம் என்று கூறிக் கொண்டு குடாநாட்டுக்குள் வந்தவர்கள் 'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய' கதையாக மக்கள் முதுகில் சவாரி விடத் தொடங்கிவிட்டார்கள்.

இத்தகைய கட்சி ஒன்று குறித்தும் அதன் ஒரு சில நடவடிக்கைகள் குறித்தும் 'அதிரடி அரங்கில்' சில மாதங்களுக்கு முன்னர் பிரஸ்தாபித்திருந்தோம். அத்தகவலை அடுத்து அவர்கள் சற்றுத் திருந்தியிருந்தனர். ஆனால் மீண்டும் பல முறைப்பாடுகள் வர்த்தகர்கள் வாய்களிலிருந்து வருகின்றன.

பல கடைகளிலும், வர்த்தக நிலையங்களிலும் சென்று பணம் தரும்படி மிரட்டுவதாகத் தகவல். முதலாளிமாரை சாம, பேத, தான, தண்ட வழிகளில் தமது வழிமுறைக்குக் கொண்டு வரவும் முனைகின்றார்களாம்.

ஆனாலும் நன்றாக நனைந்து களைத்துவிட்ட யாழ்ப்பாண முதலாளிமார் மசிவதாக இல்லை என்பது மட்டும் திருப்தி தரும் விடயம்.

கடைகளுக்குச் சென்று பணம் கேட்பது; தர மறுத்தால் அரிசி, சவர்க்காரம் என்று அள்ளிச் செல்வது — இப்படியான கைவரிசைகளைக் காட்டும் முன்னாள் போராளிகளிடம்(?) சில கேள்விகள்.

ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்ட முன்னாள் இயக்கங்களின் இந்நாள் செலவுகளை யாழ். வர்த்தகர்களும் அவர்கள் மூலம் மக்களும் பொறுப்பேற்க வேண்டும் என்பது என்ன அவர்களின் தலையெழுத்தா? அரசியலில் கூட தமிழ் மக்களுக்காக ஒன்றுபடாமல் ஆளுக்கு ஒரு பக்கம் இழுத்துப் பிடித்து அநாகரிக — சுயலாப — அரசியல் நடத்தும் நீங்கள் எல்லோரும் என்ன முகத்தோடு மக்களிடம் நிதி திரட்ட வருகின்றீர்கள்? சரி. நீங்கள் கேட்பது மிரட்டல் வசூல் அல்ல; நன்கொடை என்றே வைத்துக் கொள்வோமே! நன்கொடை கேட்பதற்கும் கொடுப்பதற்கும் ஒரு முறை, ஒரு நாகரிகம் உண்டல்லவா? மிரட்டல் பாணியில் கேட்பது நன்கொடை அல்லவே? இராணுவம் இதில் தலையிட்டு உங்களை அடக்காமல் நீங்களாகவே அடங்கமாட்டீர்களா?

மிரட்டலுக்கு உள்ளாகும் முதலாளிமாரிடமும் சில கேள்விகள். எத்தனை நாளுக்கு இப்படி தனித் தனியாக மிரட்டல்களை எதிர் கொள்ளப் போகின்றீர்கள்? இந்தத் தொல்லையிலிருந்து நீங்குவதற்கு உங்கள் ஒற்றுமை — ஐக்கிய சக்தி— அவசியம். எப்போது ஐக்கியப்பட்டு கொதித்தெழப் போகின்றீர்கள்? அல்லது சில பட்டம், பதவிகளுக்கும் அடுத்தவனை வீழ்த்துவதற்கும் இத்தகைய மிரட்டல் அணிகளுக்குப் பின்னால் அணி சேரப் போகின்றீர்களா? உங்களுக்குள் ஒன்று பட்டு செயற்படாவிட்டால் நட்டம் உங்களுக்கே! அதனால் இழப்பு மக்களுக்கே:

ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஓரிரு கட்சிகளின் இத்தகைய அடாவடித்தனமான நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது. தாங்கள் அத்தகைய செயல்களில் ஈடுபடுவதில்லை என்பதை பகிரங்கப்படுத்துவதும், அத்தகைய அடாத்துக்களில் ஈடுபடும் கட்சிகளை அம்பலப்படுத்துவதும் கூட அவர்களின் கடமையாகும். அப்படி இல்லாமல் மௌனம் சாதிப்பது அவர்களையும் சமூகத்தின் முன்னால் குற்றத்தில் பங்காளியாக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சு பொரிக்க வைக்க 196 மின் கருவிகள்!

## எடுத்து வரப்பட்டுள்ளன

ஜெனரேட்டர் மின்சாரம் அல்லது பற்றறி மின்சாரத்தின் உதவியுடன் கோழிக் குஞ்சு பொரிக்க வைக்கும் கருவிகள் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

இதற்கான கருவிகள் ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தினால் நேற்று முன் தினம் எடுத்துவரப்பட்டுள்ளன.

எடுத்துவரப்பட்டுள்ள இந்த வகையான 196 கருவிகளும் பிரதேச செயலர் அலுவலகங்களால் சிபார்சு செய்யப்படுபவர்களுக்கு வழங்கப் படவிருக்கின்றன.

ஐ. நா. உதவித் திட்டத்தின் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ். எடுத்துவரப்பட்டுள்ள இக்கருவிகள் மூலம் கோழிக் குஞ்சுகளை இங்கேயே உற்பத்தி செய்யமுடியும் என்றும் —

தெற்கில் இருந்து கோழிக் குஞ்சுகளை எடுத்து வர வேண்டிய தேவை இல்லாமல் போகும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 2

வடக்கு—கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெறவிருக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள், யாழ். கல்வி வலயம் 1, வலயம் 2 பிரிவுகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு இடையில் இன்று முதல் நடைபெற இருக்கின்றன:

இன்று நடைபெறும் போட்டிகளின் விவரம் வருமாறு:-

★ மென்பந்து கிரிக்கெட்—யாழ். இந்து எதிர் சங்கானை சைவப் பிரகாச ம. வி; சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி (இவ்விரு ஆட்டங்களும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை நடைபெறும்).

★ கரப்பந்தாட்டம்—ஆவரங்கால் மகாஜனா எதிர் அரியாலை ஸ்ரீபார்வதி ம.வி; உடுப்பிட்டி அ. மி. கல்லூரி எதிர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரி (இப் போட்டிகள் நல்லூர் விக்னேஸ்வரா மைதானத்தில் இன்று காலை நடைபெறும்).

★ கரப்பந்தாட்டம்— புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி எதிர் கனகரத்தினம் ம. வி; அச்சுவேலி ம. வி; எதிர் அரியாலை ஸ்ரீபார்வதி ம. வி; (இப்போட்டிகள் நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்). (உ-3)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், மே 2

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திரசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று காலை 8.45-ற்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலைப் பூஜைகள் 7 மணிக்கும் மாலைப் பூஜைகள் 3மணிக்கும் ஆரம்பமாகி சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்.

மஹோற்சவ நாள்களில் தினமும் மாலை 6.15 முதல் 7.15 வரை பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கத்தின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

கிரியைகளை தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீசிவாகம சிரோன்மணி பொ. வரதராஜக்குருக்கள் நடத்தி வைப்பார். (ஐ-8)

# தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தின் தொடர் கல்வி செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் இடம்பெறும் என சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். (உ)


## வண்ணை கோம்பயன் மணல் மயான பரிபாலன சபை

நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான

## விசேடபொதுக் கூட்டம்

வண்ணை கோம்பயன் மணல் மயான பரிபாலன சபையின் விசேட பொதுக் கூட்டம் **10— 05— 1998** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு (புதிய நேரம்) யாழ். இந்து ஆரம்பபாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி

❈ தேவாரம் ❈ அறிக்கை வாசித்தல் ❈ தலைவர் நிறைவுரை ❈ புதிய நிர்வாகிகள் தெரிவு ❈ வேறுவிடயங்கள் ❈ தேவாரம்.

குறிப்பு

★ பழைய உறுப்பினர்கள் தகுந்த ஆதாரத்துடன் ஆண்டுச் சந்தாப் பணத்தை **09 — 05 — 98** சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு (புதிய நேரம்) முன்னர் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

★ வண்ணார்பண்ணை, கொக்குவில் மேற்கு ஆகிய பகுதிகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 18 வயதுக்கு உட்படாதவர்கள் இப்பரிபாலன சபையில் உறுப்புரிமை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்,

★ புதிய உறுப்பினர்களாக விரும்புபவர்கள் **09— 05— 98** சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு (புதிய நேரம்) முன்னர் சந்தாவைச் (சாதாரண உறுப்பினர் சந்தா ரூபா 10. 00, ஆயுள் சந்தா ரூபா. 100. 00) செலுத்தி உறுப்புரிமை பெற விண்ணப்பிக்கலாம்.

த. சண்முகலிங்கம்
தலைவர்

440, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
28 - 04 - 98

(அ/3610)


# தொழிலாளர் நலன் பேணுவதற்கு நாம் ஒன்றுபட்டு செயற்படுவோம்!

## மேதினக் கூட்டத்தில் ஜெகன் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 2

சொந்த மண்ணில் அகதி நிலையில் — தொழில் இன்றி — நிவாரணத்தை எதிர் பார்த்துக் கிடக்கும் எமது தொழிலாளர்களின் அவல நிலையைப் போக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் ஈ. பி. டி. பி. அமைப்பின் மேதினக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற போது, அதில் கலந்து பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

மானிப்பாய், சங்கானை, நல்லூர், சுன்னாகம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய இடங்களில் சிறுசிறு கூட்டங்களை ஈ. பி. டி. பி. நடத்தியது.

அந்த வரிசையில் நல்லூரில் திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நல்லூர் சன சமூக நிலையங்களின் சமாஜ உபதலைவர் எஸ். சண்முகநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தை நல்லூர் சன சமூக நிலையங்களின் சமாஜமும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. நூறுக்கும் உட்பட்ட எண்ணிக்கையினரே இக்கூட்டத்தில் பங்கு பற்றினர்.

அங்கு பேசுகையில் ஜெகன் மேலும் கூறியதாவது:-

சுபீட்சம் நிறைந்த தேசத்தை உருவாக்கும் சிற்பிகள் தொழிலாளர்களே. அவர்களது பிரச்சினைகளுக்குத் தகுந்த முறையில் தீர்வு காணப்பட வேண்டும்; தேவைகள் நிறைவு செய்யப் படவேண்டும். தொழிலாளர் விடயத்தில் நீதியான முறைகளை அரசாங்கம் கையாள வேண்டும்.

இற்றைக்கு 112 வருடங்களுக்கு முன் தொழிலாளர்கள் தமது உரிமைக்காக சிக்காக்கோ நகரில் போராடினார்கள். அந்தப்போராட்டம் சிந்திய இரத்தம் தொழிலாளர்களின் விடிவுக்குக்காலாக அமைந்தது.

போராடுவதும் இரத்தம் சிந்துவதும் எமக்குப் புதிதல்ல. இன்று எமது மக்கள் — தொழிலாளர் — சொந்த மண்ணில் அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். எமது குடாநாட்டில் பல தொழில் நிலையங்கள் மூடப்பட்டு தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். இன்று தொழிலாளி நிவாரணத்தை எதிர்பார்த்தே வாழவேண்டியுள்ளது. தமிழ் மக்கள் இந்த நிலையைப் போக்க உழைக்கவேண்டும். சமாதானம், சமத்துவம், இன ஐக்கியம் என்ற அடிப்படையில் எமது பிரச்சினைகளைத் தீர்க்க மேதினத்தில் உறுதி எடுப்போம் — என்றார்.

ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகப் பொறுப்பாளர் பி. வசந்தன், எஸ். கனகசபாபதி, நா. சங்கரப்பிள்ளை, எஸ். நடராசா, யா. லவன் ஆகியோரும் உரையாற்றினர்.

வடமராட்சியில் புலோலி வர்த்தகர் சங்கத்தினால் புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்ட மேதினக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. வடமராட்சிப் பொறுப்பாளர் ஐ. சிறீரங்கேஸ்வரன் உரையாற்றினார். (உ-3-103-109)

# யாழ். தொழிலாளர்கள் மீது ஆயுதக்குழுக்கள் அதிகாரம்

## கூட்டணி மேதினத்தில் ஆனந்தசங்கரி உரை

நல்லூர், மே 2

தொழிலாளர்கள் சுதந்திரமாகவும் ஜனநாயகரீதியிலும் செயற்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இயக்கங்கள், ஆயுதக் குழுக்கள் அவர்களிடையே அதிகாரம் செலுத்துகின்றன. நாங்கள் இந்தச் செயற்பாடுகளை எச் சந்தர்ப்பத்திலும் எடுத்துக் கொள்ளவில்லை.

–இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் மேதின விழாவில் பேசிய கூட்டணியின்உபதலைவர் வி. ஆனந்தசங்கரி கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேதினக் கூட்டம் நேற்று மாலை நல்லூர் கைலாசபிள்ளையார்கோயில் முன்பாக நடந்த சமயம் அங்கு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்மேயர்சரோஜினிதேவி யோகேஸ்வரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் வீ. ஆனந்த சங்கரி கூறியதாவது:-

நாங்கள் அரசின் தீர்வுத் திட்ட விடயம் தவிர வேறு எவ்வகையிலும் அரசுடன் ஒத்துழைக்கவில்லை. ஒரு தீர்வுவேண்டும் என்பது கடந்தகால அரசாங்கமும் ஒப்புக்கொண்டதே. எனவே தான் நாங்கள் தீர்வுத் திட்டத்தை மட்டும் ஆதரிக்கிறோம் என்றார்.

யாழ். மாநகர முதல்வர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் தமது உரையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் இன்று மிக அமைதியாக மேதின விழா நடக்கிறது. நிரந்தர அமைதி, சமாதானம் என்பவற்றையே மக்கள் விரும்புகிறார்கள் என்பதையே இது காட்டுகின்றது; தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரம் மறுக்கப்படும் வரை தமிழ் தேசிய இனத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள்; நலன்கள் மறுக்கப்பட்டே காணப்படும்.

இங்கு தொழிலாளர்கள் தமது கடமைகளைச் சுதந்திரமாகச் செய்வதற்குப் போர்ச் சூழ்நிலை. ஊரடங்குச் சட்டம், வீதித்தடைகள், சோதனை முகாம்கள், சுற்றிவளைப்புகள் என்பன தடையாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் தனியார் துறையினர் தொழிலாளர்களை மதிப்பதில்லை. முதலாளி வர்க்கம் இருக்கும் வரை தொழிலாளர்கள் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுவர். எனவே இடதுசாரிக் கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி தொழிலாளர் சாசனத்தை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தவேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, தமிழர் ஏற்காத தீர்வுப் பொதியை நடைமுறைப் படுத்த முனைவதன் மூலம் எதையும் நிறைவேற்ற முடியாது மாநில சுயாட்சியை உருவாக்குவதன் மூலமே பாட்டாளி மக்களின் சுதந்திரமும் உரிமைகளும் பேணப் படும் — என்றார்.

சட்டத்தரணி பொன். சிவபாலன், யாழ். நகர உதவி மேயர் த. திருநாவுக்கரசு, எஸ். பரமசிவம் உட்பட பலர் உரையாற்றினர்.

# எம் போராட்டத்தை மழுங்கடிப்பதில் இந்தியா, அமெரிக்கா முனைப்பு!

## புளொட் கூட்டத்தில் மாணிக்கதாசன் உரை

யாழ்ப்பாணம், மே 2

எமது இன விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் அமெரிக்காவும், இந்தியாவும் பலகாலமாக மாறி மாறி தமது உள்ளீடான செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. இதனை அமெரிக்காவினதும் இந்தியாவினதும் அண்மைக்கால செயற்பாடுகள் காட்டுகின்றன.

— இவ்வாறு புளொட் அமைப்பின் உப தலைவர் மாணிக்கதாஸன் தெரிவித்தார்.

மேதினத்தை முன்னிட்டு குருநகரில் நேற்று நடைபெற்ற புளொட் கூட்டத்தில் பேசுகையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது போராட்டம்கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் பல்வேறு சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி வந்திருக்கிறது.

ஆனால் அதனது தற்போதைய பாதை போராட்டத்தின் நோக்கத்தை எட்டச் செய்யுமா என்ற ஐயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அமெரிக்காவும், இந்தியாவும் மாறி மாறி எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஈடுபட்டு வருவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

எமது விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க வேண்டுமென்பதே இவ்விரு நாடுகளினதும் அடிப்படையான நோக்கமாகும்.

எம்மத்தியில் காணப்படும் ஒற்றுமையின்மையே வெளிநாடுகள் எமது நாட்டின் பிரச்சினையில் கால்பதிக்கக் காரணம். எம்மிடையே காணப்படும் ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி அமெரிக்கா இலங்கை அரசுடன் பல்வேறு வகையான தொடர்புகளை அண்மைக் காலத்தில் வலுப்படுத்தி வருகின்றது.

தமிழர்களின் பூர்வீகப் பகுதிகளில் உள்ள வளங்களைத் தமது நாட்டிற்குக் கொண்டு செல்வதே அமெரிக்காவின் நோக்கம். இதற்கு சந்திரிகா அரசாங்கமும் ஒத்துழைப்பு வழங்கிவருவதை நாம் காண முடிகிறது. புத்தளத்தில் அமெரிக்கா வானொலி நிலையம் ஒன்றை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியம் மூலமே தமிழர்கள் போராட்டத்தில் வெல்லலாம்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி மேதினத்தில்உரை

குருநகர், மே 2

காலங்காலமாக அடக்கப்பட்ட தொழிலாளர் தமது கோரிக்கையை வென்றதே மேதின வரலாறு ஆகும். ஐக்கியம் மூலமேஎமது போராட்டத்தைவெல்ல முடியும். அறுபதாயிரத்துச்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தும் பல கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்தும் கூட எம்போராட்ட இன்னும்பின் தங்கியே உள்ளது; எனவே எமது போராட்டம் வெல்ல அனைத்து தமிழ் அமைப்புக்களும் ஒன்றுபட வேண்டியது அவசியம்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி அமைப்பும் இணைந்துநேற்று குருநகரில் மேதினக்கூட்டத்தில்உரையாற்றிய ஈ.பி.ஆர். எல். எவ். பிரமுகர் சுபத்திரன் (றொபேட்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''அரைகுறைத் தீர்வையே பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பு முன் வைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரைத் தேடும் நிலையே உள்ளது. மீன்பிடிப்பதற்கான கடல் எல்லையை விஸ்தரிக்குமாறு யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர் கோருகிறார்கள். வவுனியாவில் பாஸ் கெடுபிடி உள்ளது. கொழும்பில் தமிழ் மக்கள் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்.

இன்று எமது போராட்டம் உலக ஆதரவின்றி நலிவடையும் நிலையில் உள்ளது.எமது தமிழ் அமைப்புக்கள் இத்தருணத்திலாவது ஒன்றுபட வேண்டும்'' — என்றார்.

## எமது போராட்டத்தை...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

அமைப்பதற்கு முயற்சிகளை எடுத்த போது அப்போது மேல்மாகாண முதலமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஆனால் இன்று அமெரிக்காவோடு பல்வேறு துறைகளிலும் அவர் தொடர்புகளை மேற்கொண்டுள்ளதோடு அமெரிக்காவின் நெருக்குதலுக்கும், அழுத்தங்களுக்கும் இணங்கி வருகின்றார். அதனால் எமது நாடே மரணத்தைத் தழுவ வேண்டிய நிலையில் இருக்கிறது.

எமது நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கைகள் எமது கைகளில் இல்லாமல் அந்நியருடைய கைகளி சிக்கியுள்ளது.

இதேவேளையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குரலாக எமது நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்று படவேண்டும். உலகத் தொழிலாளர் தினமாகிய இன்று தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று கூறுவது போன்று இயக்கங்களே ஒன்றுபடுங்கள் என்ற கோரிக்கை எம்மண்ணில் எழுந்துள்ளது.

எமது பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்ளுகின்ற நிலைக்கு வரவேண்டுமானால் முதலில் எம் மத்தியில் ஒற்றுமை தேவை. எம்மை ஒற்றுமைப் படுத்தும் ஒரே கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணி விளங்கும் எனக் கருதினோம் ஆனால் அது நிறைவேறவில்லை.

மக்களே உங்களை நாடி வருகின்ற கட்சிகளின் பிரதிநிதிகளிடமும், இளைஞர்களிடமும் ஒற்றுமையாக இருங்கள்என்ற எண்ணத்தை அடிக்கடி எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் சக்தியே மாபெரும் சக்தி என்பதைக் காட்டுங்கள்.

தமிழீழம் மீட்பது எமது இறுதி நோக்கம்; ஆயுதப் போராட்டமே வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு என்ற நிலை எம் மத்தியில் என்றுமே உள்ளது.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்துக்கு எதுவித சக்தியும் இல்லை. பிரச்சினையை அரசு உடனடியாகத் தீர்க்கும் என்பதுக்கு எமக்கு சிறிதளவேனும் நம்பிக்கையுமில்லை.

எமது பிரச்சினைக்கு சுவிஸில் நடைமுறையிலுள்ள 'கன்ரோன்' அதிகாரப்பகிர்வு முறையே சிறந்த தீர்வு என நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் — என்றார்.

## கைகலப்பில் உயிரிழப்பு

கல் வீச்சாலும், கம்பியால் தாக்கப்பட்டதாலும் உயிரிழந்ததாகக் கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், நல்லூர், அரசடி வீதிப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் பொன்னையா முத்துலிங்கம் (வயது–53) என்பவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டது.

காணித்தகராறு காரணமாக இரு தரப்பினர்க்கிடையில் இடம்பெற்ற கைகலப்பின் போதே இவர் படுகாயமடைந்ததாகவும்—

ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படுகையில் அவர் உயிரிழந்ததாகவும்— கூறப்படுகின்றது.

## ஜே. வி. பியை சாடுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 2

கொழும்பில் நேற்று நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே. வி. பி. அமைப்பைக் கடுமையான வார்த்தைகளால் சாடினார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார். (உ–3)

### மட்டு...

(முதலாம் பக்கத்தொடர்)

மட்டக்களப்பில் புளொட், ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. பி. டி. பி. ஆகியன இணைந்து நடத்திய ஐக்கிய மேதினத்தையொட்டி காந்தி சதுக்கத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் தேவநாயகம் மண்டபத்தை அடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு நகரசபை உப தலைவர் பெனடிக்ற் தனபாலசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(உ–21-164-3)

### ஹட்டனில்..

(முதலாம் பக்கத் தொடர்)

தகர்க்கப்பட்டன.

பாவிக்க முடியாத அளவுக்கு அந்த மின்மாற்றிகள் சேதமடைந்ததாகவும்—

இதனால் 6 இலட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(உ–10-3)

### தடை...

(முதலாம் பக்கத் தொடர்)

யில்லை. அத்தகைய வேலையைச்செய்ய வேண்டாம் என நான் கோருகின்றேன். சோதனை நடைபெறாத இடங்களில் மக்களை சைக்கிள்களை, மோட்டார் சைக்கிள்களைவிட்டுஇறங்கிச்செல்லுமாறு வற்புறுத்தினால் அதனைநேரடியாகஎனதுகவனத்துக்கு கொண்டுவரலாம் எனதுதொலைபேசி இலக்கம் 2268 அந்த இலக்கத்தைச் சுழற்றி 'பிரிகேட் கொமாண்டருடன்' தொடர்புகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தால் என்னுடன் தொடர்பு கிடைக்கும். பொது மக்கள் இது விடயத்தில் – எதுவித அச்சமுமின்றி- எனக்குத் தொலைபேசி மூலம் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

''சோதனைத் தடைகளில் உள்ள 'இறங்கி உருட்டிச் செல்லவும்' என்ற அறிவிப்புப் பலகைகளை உடன் அகற்றவும் 'மெதுவாக ஓடிச் செல்லவும்' எனத் தெரிவிக்கும் புதிய அறிவிப்புப் பலகையை வைக்கவும் ஏற்பாடு செய்வேன்''—என்று மேலும் கூறினார் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ். (உ)

## மீசாலையில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், மே 2

மீசாலை வடக்கில் நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; இருபடையினர் காயமடைந்தனர்.

பலாலி படைத் தலைமையகம் இத்தகவலை வெளியிட்டது. (உ–3)

### கொழும்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊர்வலமும் இடதுசாரிக் கட்சிகளின் ஊர்வலமும் விகாரமாதேவி பூங்காவை அடைந்து அங்கு கூட்டம் இடம்பெற்றது. இந்த ஊர்வலம் கூட்டம் ஆகியவற்றில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய ஜனநாயகக் கட்சி சார்பில் கொம்பனித் தெருவில் நடந்த ஊர்வலத்திலும், கூட்டத்திலும் குறைந்த எண்ணிக்கையானவர்களே பங்குபற்றினர்.

### ஐ தே. க...

(முதலாம் பக்கத் தொடர்)

கண்டியில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக ஐ. தே. க. ஆதரவாளர்கள் கொழும்பிலிருந்து நேற்று பஸ்ஸில் சென்று கொண்டிருந்த சமயம் நித்தம்புவவில் ஐந்து பஸ்கள் மீது கல்வீச்சு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-10)

### யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

லாக சிறிய, சிறிய மேதினக் கூட்டங்களை ஈ. பி. டி. பி. நடத்தியது. அத்தொடரில் யாழ்ப்பாணத்தில் பாஷையூரிலும், நல்லூர், திருநெல்வேலியிலும் நடந்த கூட்டங்களில் தலா ஐம்பது பேர் வரையே பங்குபற்றினர். நீர்வேலியில் நடந்த கூட்டத்தில் ஐந்நூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புளொட் ஏற்பாட்டில் யாழ். நகரில் நடந்த ஊர்வலத்தில் பல நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர். நூறுக்கும் அதிகமான ஊர்திகள், வாகனங்களும் பேரணியில் சென்றன. யாழ். நகரில் ஆரம்பமான பேரணி குருநகர் மைதானத்தில் முடிவுற்றது.

அங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சியிலும், மேதினக் கூட்டத்திலும் இரண்டாயிரத்துக்கும் அதிக மக்கள் கலந்து கொண்டனர்.

அருணா இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியில் பாடகர் ஏ. ஈ. மனோகரன் பாடல்களைப் பாடினார்.

புளொட்டின் மேதினக் கூட்டத்தில் ஈ. பி. ஆர். எல். ஏவ். பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(-உ-7-9-51-173


நல்லூர்ச் சூழலில் ...

4 முதல் O/L வரை

மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு

1. 15 வருடகாலம் சேவையாற்றும்!
2. ஒழுங்கு, கட்டுப்பாட்டை பிரதானமாகக் கொண்ட!
3. அச்சிட்ட வினாப்பத்திரம் மூலம் 7 பாடங்களுக்கு மாதாந்தப் பரீட்சை நடத்தும்!
4. மாதாந்த கணிப்பீட்டு அறிக்கையுடன் பரிசுகளும் வழங்கும்!
5. முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
6. பின்தங்கிய மாணவர்களுக்கான விசேட கவனம்
7. வாராந்தம் இயக்குநரின் பார்வையில் பயிற்சிக் கொப்பிகள் அனைத்தும்!
8. மூவரில் ஒருவருக்கு இலவசம்
9. O/L வகுப்பிற்கு வாராந்தம் ஒருபாடத்திற்கு 6 வகுப்புகள்!

இத்தனை சிறப்பம்சங்களையும் கொண்ட

ஒரே ஒரு நிறுவனம்

நல்லூர் சயன்ஸ் அக்கடமி

(55684)



வீடியோ

C. D. வெளியீடு

★ வீரத்தாலாட்டு
★ காதலா காதலா
★ பொன்னுவிளையிறபூமி
★ சந்தோஷம்

ஒறிஜினல் வெளியீடு

★ படிக்காத மேதை

அடுத்த வெளியீடு

★ ஜீன்ஸ்

புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/3623)



நல்லூரில்....

எடிசன் அக்கடமி

புதிய கிளை நிறுவனம்

20, வைமன் றோட். நல்லூர்.

திறமை மிகு ஆசிரியர் குழுவின் சேவை

ஆண்டு 4 முதல் O/L வரை

| | |
|---|---|
| கணிதம்: | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம்: | திரு. இரா. செல்வவடிவேல் |
| சமூகக்கல்வி: | எமது வழமையான ஆசிரியர் |
| தமிழ்: | திரு. S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம்: | திரு. B. முரளி |
| வர்த்தகம்: | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்: இன்று பிற்பகல் 3.30 மணி

(55693)



யாழ். நகர மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் ஒரு சேவையாக...

'சுப்ப ஸோ' கலர் படச் சேவை

பதினைந்து நிமிட நேரத்தில் உங்கள் கலர் படச் சுருள்களை

நவீன கொம்பியூட்டர் மூலம்

உரிய தரம் வாய்ந்த படப்பிரதியாகக் கழுவிப் பெற்றிட

இன்றே நாடுங்கள்

"சுப்ப ஸோ" கலர் படச் சேவை,

இல. 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-

சுப்ப ஸோ வீடியோ

ரவி ஒளி கானம்,

இல. 100A, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/3625)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 2-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரங்கா நகை மாடம்

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள யாழ். நகரில் பெயர் பெற்றவர்கள்.

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3602)

கருத்துக் கலசம்

மயூரா

## நூலறிவு

மாணவப் பருவம் மனித மாண்பை வளர்க்கும் பருவம். அது மனிதனின் பருவங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒருவன் எத்தகைய மனிதனாவான் என்பது மாணவப் பருவத்திலேயே — இளைஞன் என்ற பருவத்திலேயே — நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது 'அந்த மனிதன்' மாணவப் பருவத்திலேயே வடிவமைக்கப்படுகிறான்.

ஆகையால் ஒருவன் பூரணமான மனிதனாவதற்கான சகல சேமிப்புகளையும், தேட்டங்களையும் மாணவப் பருவத்திலேயே தேடிக் கொள்வது அவசியமாகும்.

வெறும் பாடசாலைக் கல்வி — பாடநூற் கல்வி — ஒருவனை அறிஞனாக்க மாட்டாது; பூரணமாக்கமாட்டாது. பலவகையான நூல்களையும் வாசிப்பவனே பரந்த அறிவுடையவனாக வளர முடியும். பாடநூற் கல்வி மட்டுப்படுத்தப்பட்ட அறிவை மட்டுமே தரும். அதற்கும் மேலதிகமாக நல்ல நூல்களை வாசிக்கப் பழக வேண்டும்.

ஆனால் இந்த அத்தியாவசியமான பழக்கம் எமது இளம் சந்ததியினர் மத்தியில் மிகவும் அருகி வருகிறது.

பிள்ளை பாடசாலைக்குப் போகிறான். வீட்டுக்கு வந்த கையோடு சாப்பிடவும் நேரமில்லாமல் ரியூட்டரிக்கு ஓடுகிறான். வீடு வர இருட்டாகி விடுகிறது. களைப்படைந்து விடுகிறான். பல நாள்களில் படிப்பதற்கும் முடியாமற் சோர்வடைந்து படுத்துறங்கி விடுகிறான் — என்பதே பல பெற்றோரின் கவலையாக உள்ளது.

ஆனால் ஓட்டமும் நடையுமான இத்தகைய நிலையை — மாணவனின் உள, உடற்சுமையைக் — குறைக்கும் முயற்சியில் எந்தப் பெற்றோரும் அக்கறை காட்டுவதாக இல்லை. ரியூட்டரிக்குப் போகாவிட்டால், தமது மகன் பரீட்சையில் குறைந்தபுள்ளிகள் எடுத்துவிடுவானோ என்ற அச்சம். அடுத்த வீட்டுப்பிள்ளையும் ரியூட்டரிக்குப் போகிறான்; இவனும் போகத்தானே வேண்டும் என்ற ஒரு வகைச் சமாதானம் உள்ளுக்கு!

ஆகையால் நல்ல நூல்களை, அறிவு தரும் நூல்களை மாணவர்கள் வாசிக்கும் சூழ்நிலை இல்லை. மாணவன் ஒருவன் சிறந்த நூல்களை வாசித்து, தன்னைச் சமூதாயத்துக்குப் பயன் உள்ளவனாக உருவமைத்துக் கொள்ளாவிடில், அவன்பிற்காலத்தில் கிணற்றுத் தவளையாக வாழ நேரிடும்.

ஆகையால் பாடவிதானத்தில் நாளாந்தம் ஒரு பாட வேளையையாவது அறிவு நூல் வாசிப்புக்கு கட்டாயமாக ஒதுக்க வேண்டிய தேவை ஒன்று உருவாகி வருகிறது.

''நீரளவையாகுமாம் நீராம்பல், தான் கற்ற நூலளவையாகுமாம் நுண்ணறிவு'' என்ற நீதி வாக்கியம் ஒவ்வொரு மாணவனினதும் வாழ்க்கையின் திறவு கோலாகட்டும்.

# உலக 'உதை' விழாவுக்கு தயாராகிறது பிரான்ஸ்!

உலக உதைபந்தாட்ட விழா ஆரம்பமாவதற்கு இன்னும் ஐந்து வாரங்களே உள்ளன.

இந்த நிலையில் அதற்கான — ஆர்ப்பாட்டமான — ஏற்பாடுகளை அறிவது சுவாரசியமானது.

உலகக்கிண்ணம், உலகச்சம்பியன் பட்டத்துக்காக நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுக்களில் பெரும் வரவேற்பைப் பெற்றவை மிகச் சிலதான்.

இந்த வரிசையில் உதைபந்தாட்டம், கிரிக்கெட், டென்னிஸ், குத்துச்சண்டை போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுக்குக் கிடைக்கும் வரவேற்பு வேறு எந்த விளையாட்டுக்கும் கிடைப்பதில்லை. நமது ஊர் வழக்கில் சொல்வதானால்—இந்த விளையாட்டுக்களின் உலகக்கிண்ண அல்லது சர்வதேச சம்பியன் போட்டிகள் என்றால்—திருவிழாக் கூட்டம் தான்.

ஆனால் இந்த விளையாட்டுக்களிலும் குறிப்பிடத்தக்க அம்சங்கள் உள்ளன. டென்னிஸ், கிரிக்கெட் இரண்டும் பணக்கார விளையாட்டு என்றால் உதைபந்தோ பாமரத்தனமானது.

உதை பந்தாட்டத்தையும் குத்துச் சண்டையையும் ரசிப்பதற்கு விளையாட்டு நுணுக்கமோ அந்த விளையாட்டுப் பற்றிய பூரண அறிவோ தேவையில்லை

இதனாலேயே உலக நாடுகள் முழுவதிலும் விளையாடப்படும் — ரசிக்கப்படும் ஆட்டமாக உதைபந்தாட்டம் திகழ்கின்றது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வுகளில் ஒன்றான உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் 'ஒலிம்பிக்ஸ்' மற்றும் ஏனைய சர்வதேசக் கிண்ண விளையாட்டுக்கள் போன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையே நடத்தப்படுகின்றது.

எனினும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இறுதிச் சுற்று ஆட்டங்களுக்கு முன்னேற்பாடாக தெரிவு நிலைப்போட்டிகள் சுமார் இரண்டரை ஆண்டுகள் முன்னதாகவே தொடங்கிவிடும்.

இந்த சர்வதேசப் போட்டியை 'தமது நாடுகளில் நடத்தி முடிப்பதற்கான வாய்ப்பைப் பெறுவதற்கு போட்டியிடாத நாடுகளே இல்லை எனலாம்.

கடந்த 1994 இல் அமெரிக்காவில் நடந்த இப்போட்டி இந்த ஆண்டில் பிரான்ஸில் நடைபெறவுள்ளது.

## ஜூன், ஜூலையில் இறுதிச் சுற்று ஆட்டங்கள்

52 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போட்டியை பிரான்ஸ் நடத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பிரமிக்கச் செய்யும் வகையில் உள்ளன.

16—ஆவது உலகக் கோப்பைக்கான இப் போட்டி 1995 டிசம்பர் 12 ஆம் தேதி சம்பிரதாயமாகத் தொடக்கி வைக்கப்பட்டது. தகுதிச் சுற்றுப் போட்டிக்கான தெரிவு நிரலை பிரபல டென்னிஸ் வீரர் யானிக் நோவா, அமெரிக்க உதைபந்தாட்ட வீரர் அலெக்ஸ் லாலாஸ் இருவரும் நடத்தினர். பதிவு செய்துள்ள 172 நாடுகளிடையே நடந்த தகுதிநிலைப்போட்டி மூலம் உலகப் போட்டியில் பங்குபெற 30 நாடுகள் தேர்வு பெறுகின்றன.

ஜூன் மாதம் 10ஆம் தேதி தொடங்கும் இந்த உதைபந்தாட்டவிழா, ஜூலை 12 ஆம் தேதி முடிவடைகிறது. போட்டியில் 64 ஆட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

பிரான்ஸின் பாரிஸ், லியான்ஸ், மார்சில்ஸ், பார்தெளக்ஸ், தெளலே, நாண்டே, செயிண்ட் யெதின் மோந்த்பெலிர், லின்ஸ் ஆகிய நகரங்களில் இறுதிச்சுற்று ஆட்டங்கள் நடக்கவுள்ளன. இதற்காக அங்குள்ள 10 விளையாட்டு மைதானங்கள் சீரமைக்கப்படுகின்றன.

பாரிஸ் நகரத்தின் மக்கள் தொகையே இரண்டு கோடி இருபது லட்சம்தான். ஆனால் இந்த மைதானங்களோ 2 கோடியே 50 லட்சம் பேர் ஆட்டத்தைக் காணும் வகையில் சீரமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் 37 பில்லியன் பேர் இப் போட்டிகளை நேரிலும், தொலைக்காட்சி மூலமும் கண்டுரசிக்க விருக்கின்றனர்.

பாரிஸ் நகரிலுள்ள ஸ்டேட் தெபிரான்ஸ் (பிரான்ஸ் மைதானம்) மைதானத்தின் சீரமைப்புப் பணிகளை மேக்கரி, ஸாப்லினா, கான்ஸ்டன்டினி, ரெஜிம்பால் ஆகிய வடிவமைப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர். இச் சீரமைப்பின் சிறப்பம்சம் என்னவெனில் இதன் கூரைப் பகுதி கண்ணாடியால் உருவாக்கப்பட்டுள்ளதுதான். இது ஈபெல் கோபுரம் அளவுக்கு 9000டன் எடையுள்ளது.

இங்கு ஆரம்பம் மற்றும் இறுதி உட்பட 9 ஆட்டங்கள் நடக்கவுள்ளன. ஆட்டங்கள் நடக்கவுள்ள மைதானங்களில் மிகப் பெரியது இது தான். இதை மைதானம் என்பதை விடக் குட்டி நகரம் எனக் கூறலாம். அந்த அளவுக்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மாநாட்டுக் கூடங்கள், கூட்ட அரங்கம், வணிக வளாகம், நகரும் படிக்கட்டு என ஏகப்பட்ட வசதிகள். 42 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த மைதானம் 48 கோடி டொலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு பார்வையாளருக்காக 80ஆயிரம் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாரிஸ் நகரிலுள்ள மற்றொரு மைதானம் பார்க் தெ பிரின்சஸ். இதைச் சீரமைக்க ஏற்கனவே 5 கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது. இருப்பினும் உலகப் போட்டிக்காக மேலும் 4 கோடி 40 லட்சம் பிராங்குகள் செலவிடப்பட்டுள்ளது. மூன்றாமிடத்துக்கான ஆட்டம் உள்பட 6 ஆட்டம் இதில் நடத்தப்படவுள்ளது. இந்த மைதானத்தில் 48 ஆயிரம் பேர் அமர வசதி செய்யப்பட்டுள்ளது.

முதலாம் உலகப் போருக்குப்பின் கட்டப்பட்டது லியான்ஸ் நகரிலுள்ள மைதானம். 1967 இல் வரலாற்றுச் சின்னமாக்கப்பட்ட சிறப்புடையது. கால் இறுதி ஆட்டம் உட்பட 6 ஆட்டங்கள் இங்கு நடைபெறும். 44 ஆயிரம் பார்வையாளர்கள் இங்கு அமரலாம்.

பிரான்ஸின் 3 அவது பெரிய நகரம் மார்சில்ஸ். அங்கு உள்ளவர்களைக் உதைபந்தாட்டப் பிரியர்கள் என்பதை விட வெறியர்கள் என்று கூறலாம். அந்த அளவுக்கு அவர்களின் ரசனை மேலோங்கியுள்ளது. போட்டி நடக்கவுள்ள வெலோடிராம் மைதானம் 1937 இல் உருவாக்கப்பட்டது. 60 ஆயிரம் பேர் அமர்ந்து ஆட்டத்தைக் காணும் வகையில் இது முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கால் இறுதி, அரையிறுதி உட்பட 7 ஆட்டங்கள் இங்கு நடக்கவுள்ளன.

பார்தெளக்ஸ் நகரிலுள்ள பார்க்லெஸ்கர் மைதானம் ஒன்பது கோடி பிராங் செலவில் புதுப்பிக்கப்படுகிறது. 36 ஆயிரத்து 500 பேர் அமர்ந்து ஆட்டத்தைக் காணும் வகையில் இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



உதைபந்தாட்டத்துக்கான உலகக் கிண்ணம் முற்றிலும் தங்கத்தினாலானது

பிரான்ஸின் தென்மேற்கிலுள்ள பிரசித்தி பெற்ற தெளலே நகர மைதானமும் இதே அளவிலானவர்கள் ஆட்டத்தைக் காணும் வகையில் 25 மில்லியன் டொலர் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.

நாண்டேயிலுள்ள பியார் மைதானம் ஐரோப்பிய சாம்பியன் போட்டிக்காக 1984 இல் உருவாக்கப்பட்டது. இங்கு 6 ஆட்டங்கள் நடக்கவுள்ளன.

செயின்ட் யெதின் நகரிலுள்ள ஜெப்ரி கிசார் மைதானம் 36 ஆயிரத்து 500 பேர் ஆட்டத்தைக் காணும் வகை

(XI ஆம் பக்கம் பார்க்க)



போட்டி நடைபெறும் தெளலே மைதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசாங்கத்தைக் கலங்க வைத்த நாகேந்திர நாத் ஜாவின் கருத்துக்கள்!

அனைத்துலகத் தொழிலாளர் தினமான மே நாள் நேற்று சர்வதேச ரீதியில் கொண்டாடப்பட்டது. தொழிலாளர்களின் உரிமைகளை, அவை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தவும் முன் வைக்கவும் இந்நாள் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

அபிவிருத்தி அடைந்த மேற்கு நாடுகளில் மே நாளன்று தொழிலாளர்கள், பணியாளர்களுக்குரிய விசேட உரிமைகளை, புதிய வசதிகளை அரசுகள் அறிவிக்கும்.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் தொழிலாளர்கள் தமக்கு மேலும் பல உரிமைகள் வசதிகள் வேண்டும் என்று கேட்டு ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்துவது வழமையாகிவிட்டது.

மேலும் மே தினக் கொண்டாட்டங்கள் — ஊர்வலங்கள், கூட்டங்கள் — அரசியல் கட்சிகளின் பலத்தை — தொழிலாளர் ஆதரவை — அளக்கும் நாளாகவும் மாறிவிட்டது.

தொழிலாளர்கள் ஒன்றுபட்டு, ஒரே அணியில் நின்று போராடுவதன் மூலமே, குரல் கொடுப்பதன் மூலமே, தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

இதனால் —

தொழிலாளர்கள் ஒரே அணியில் திரண்டு நின்றால் பல வெற்றிகளை அடையலாம் என்று மேதினக் கூட்டங்களில் தொழிற்சங்கத் தலைவர்கள் பேசுவதுண்டு.

ஆனால் நடைமுறையில் தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு சார்புடையனவாக அல்லது ஆதரவளிப்பவையாக உள்ளதால் தொழிலாளர்கள் ஒரே அணி திரண்டு மே நாள் கொண்டாடுவது மிகவும் குறைவு.

அரசியல்கட்சிகள் தொழிற்சங்கங்களைத் தமதுகைக்குள் போட்டுக் கொண்டு, தொழிலாளர்களைக் கன்னை பிரித்து விடுகின்றன. தமது பலத்தை மே தினக் கொண்டாட்டங்கள் மூலம் காட்டுவதற்கும் பின்னிற்பதில்லை. தேர்தல் நெருங்கும் வேளையில் வரும் மே தினத்தன்று தொழிலாளர்கள் பல பத்துப் பிரிவுகளாக பிரிந்து மோதுவதற்கும் தப்புவதில்லை. இது முழுக்க முழுக்க அரசியல் லாபம் கருதியதே.

ஏனைய வருடங்களைப் போலவே கொழும்பில் இம்முறையும் பதினைந்திற்கும் மேற்பட்ட பிரதான மற்றும் சிறியளவு மே தின ஊர்வலங்கள். கூட்டங்கள் நடைபெற்றன.

## யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம் மட்டும் இதில் சளைத்துப் போகவில்லை; குறைந்துவிடவில்லை என்று நேற்றுக் காண்பிக்கப்பட்டது. சில வருட கால இடைவெளியின் பின்னர் குடாநாட்டிலும் நேற்று மேதினப் பேரணிகள், கூட்டங்கள் நடைபெற்றன.

மட்டக்களப்பில் புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. பி. டி. பி. ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரே அணியாக மே நாளைக் கொண்டாடின. தமக்குள்ளே —தொழிலாளர் விடயத்திலாவது — மே தினத்தைக் கொண்டாடுவதிலாவது — ஒற்றுமை உண்டு என்று காட்டின. இந்த ஐக்கியமானது எதிர்காலத்தில் அரசியலிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதிலும், இனப் பிரச்சினை விவகாரத்திலும் சிறிய அளவிலேனும் ஒற்றுமைக்கு அத்திவாரமிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அந்த ஒற்றுமையைக் காண முடியவில்லை. மட்டக்களப்பைப் போலவே இங்கும் ஒரே அணியில் நின்று மே தினம் கொண்டாடினால் என்ன என்ற கேள்வி எழுந்தது.

பேரணி, பொதுக்கூட்டம் ஆகிய இரண்டையும் பெரிய அளவில் நடத்தத் திட்டமிட்டிருந்த "புளொட்" ஒரே அணியில் மே நாள் கொண்டாட்டம் என்ற ஆலோசனைக்குச் செயல் வடிவம் கொடுக்க முயன்றது.

துரதிர்ஷ்டவசமாக ஈ. பி. டி. பி. தனித்து நிற்கவே விரும்பியது. புளொட்டும்,



ஜா

ஈ. பி. ஆர். எல். எவ். வும் ஒன்றுசேர்ந்து மே தினப் பேரணியையும் கூட்டத்தையும், கலைநிகழ்ச்சிகளையும் நடத்தின.

மே தினம். தொழிலாளர் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் நாள். அன்றாவது யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்சிகள் ஒற்றுமைப்பட்டுச் செயற்பட்டிருக்கலாம். ஒற்றுமை என்பது தமிழ்க் கட்சிகளுக்கு வேம்பாய்க் கசப்பது ஏனோ?

அரசியல் கட்சிகள் என்று மேடைக்கு ஆடுவதற்கு வந்துவிட்டால், மக்கள் நலனுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதனை தலைவர்கள் மறந்துவிடுகிறார்கள். தமிழ்க் கட்சிகள் தமக்கிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம். கன்னை பிரிந்து நின்று, பிளவுபட்டு நின்று எதனைத்தான் சாதித்துவிடப் போகிறார்கள்?

யாழ்ப்பாணத்தில் மே தினம் கொண்டாடிய கட்சிகளின் கோரிக்கைகள், கோஷங்கள் மக்களின் இன்றைய சூடான பிரச்சினைகளை முன் வைப்பனவாக அமைந்திருந்தன.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பிலும மே நாளன்று யாழ். நகரில் அமைதி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. மக்களின் பிரச்சினைகளையே இவர்களும் மே நாள் கோஷங்களாக முன் வைத்தனர்.

இந்தக் கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு நேரடியாக அனுப்புவதனால் அவர் அவற்றைப் பரிசீலிப்பார் என்ற நப்பாசையும் காணப்பட்டது. ஆனால் மக்கள் அதில் பெரிதாக நம்பிக்கை வைத்ததாகத்தெரியவில்லை.

ஏதோ, யாழ்ப்பாணத்திலும் மே தினக் கொண்டாட்டங்கள், பேரணிகள் நடைபெற்றன; வழமை நிலைமை திரும்புகிறது என்று வெளி உலகத்துக்குக் காட்டப்பட்டாயிற்று.

★ ★ ★

கொழும்பில் மே நாள் கொண்டாட்டம் கலகலப்பாக இந்த போதிலும் அதனை விட மேலோங்கி, மேலெழுந்து நின்றது நரேந்திரநாத் ஜாவின் விஜயம் தான்!

திரு. நரேந்திர நாத் ஜா முன்னர் இந்தியாவின் இலங்கைத் தூதராகப் பணிபுரிந்தவர். அவர் அப்போது ஒரு இராஜதந்திரி. ஆனால் இம்முறை கொழும்பு வந்தபோது இந்திய அரசியலில், புதிய இந்திய அரசின் முக்கிய பிரமுகராக வந்தார்.

பிரேமதாசா பதவிக் காலத்தில் இந்தியத் தூதுவராகத் தாம் பணிபுரிந்த போது மனம் விட்டுப் பேச முடியாத ஓர் அலுவலராகவே தாம் இருந்ததாக ஜா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

எனினும் தாம் பிரேமதாசாவுடன் நட்புறவு கொண்டு பழகியதாகவும் கூறிய அவர் ராஜதந்திரம் மிக்கவர்தான்

கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வந்த ஜா இப்போது இந்திய அரசியலில் மிகப் பெரிய மனிதர். அவர் அரசாங்கத்தில் அமைச்சரோ அரை அமைச்சரோ இல்லை. ஆனால் ஆளுங்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர். அதனால் தான் அவரது கொழும்பு விஜயம் முக்கியமானதாக அமைந்தது.

இலங்கையுடனான உறவை எப்படி வைத்துக் கொள்வது என்று அரசு முடிவு செய்வதற்குச் சூத்திரதாரியாக விளங்கப் போகிறவர் நரேந்திர நாத் ஜாதான்!

அதனாலேயே அவரது கொழும்பு விஜயம் கலகலப்பானதாக அமைந்ததோடு சலசலப்பையும் ஏற்படுத்தியது.

இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில், இந்திரா, நரசிம்மராவ், குஜ்ரால் அரசுகள் போன்று ஒரு பக்கச் சார்பாக புதிய பாரதீய ஜனதா அரசு நடந்து கொள்ளமாட்டாது என்றும் பக்கச் சார்பின்றி நடந்து கொள்ளும் என்றும் அவர் கூறியதும் கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகின.

"கதை மன்னன்" கதிர்காமர், பாரதீய ஜனதா அரசு பதவியேற்ற இரண்டு நாள்களில் புதுடில்லிக்குப் பறந்து பிரதமர் வாஜ்பாய், அத்வானி ஆகிய தலைவர்களைச் சந்தித்த முதலாவது வெளிநாட்டுப் பிரமுகர் என்று பெருமை தேடியிருந்தார். இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா "மாறுபாடாக" நடந்து கொள்ளாமல் இந்தியத்தலைவர்களுக்குப் "பட்டர் பூசுவதே" அவரது விஜயத்தின் முழு நோக்கமாக இருந்தது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

இலங்கையுடனான நல்லுறவை மேலும் வளர்க்க தமது அரசு பாடுபடும் என்று பிரதமர் வாஜ்பாய் பட்டும் படாமல்,கூறியதை வைத்துக் கதிர்காமரின் விஜயம் வெற்றி என்று கருதி இருந்தனர் கொழும்பு அரசினர்.

ஆனால் புதிய அரசு இனப் பிரச்சினை விவகாரத்தில் பக்கச் சார்பில்லாது செயற்படும் என்றும் நீதியான தீர்வு ஒன்றையே விருப்புவதாகவும் திரு. ஜா ஆளும் தரப்புக்கு ஒரு தலையடி போட்டார். அதனை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்தியப் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாக ஜா தெரிவித்தார் என்று வெளிவந்த செய்தி இலங்கை அரச தரப்பை மேலும் திணுக்குற வைத்தது. உண்மையில்அவர்கள் நிலைகுலைந்துவிட்டனர்; மனம் தடுமாறிப் போயுள்ளனர்.

ஆனால் புதிய திட்டம் எதனையும் தயாரிப்பதாக ஜா கூறவில்லை என்று பின்னர் தெளிவாக்கப்பட்டது. ஆயினும் கொழும்பு அரசினர் தமது தடுமாற்றத்திலிருந்து இன்னும் மீளவில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு வடக்கு — கிழக்கு (நிரந்தரமாக) இணைந்த அம்சத்தையும் உள்ளடக்கி இருக்க வேண்டும் என்ற ஜாவின் கருத்து கொழும்பு அரசினரை மேலும் கலங்க வைத்துள்ளது.

அதனால் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் சிவசங்கர் மேனனை, வெளிநாட்டு அமைச்சுக்கு அழைத்து, நாகேந்திர நாத் ஜாவின் கருத்துக் குறித்து விளக்கம் கேட்டது,

தூதுவர் ஒருவரை இவ்வாறு அழைத்து விளக்கம் கேட்பது, ராஜீக மொழியில், சம்பந்தப்பட்ட நாட்டை இனிமேல் அவ்வாறு சொல்லக்கூடாது என்று எச்சரிக்கை செய்வதாகவே கொள்ளப்படும்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை இந்தியாவுக்கு நிச்சயமாக எரிச்சலை ஊட்டும்; பகைமை உணர்வை உண்டாக்கும் என்று எதிர்பார்க்கலாம்.


அதுவும் போதாது என்று இலங்கை அரசியலில் எடுத்ததற்கு எல்லாம் முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக் கொள்ளும்பௌத்தபிக்குமார் இனப்பிரச்சினை சம்பந்தமாக ஜா முன்வைத்த கருத்துக்களுக்குக் கண்டனம் தெரிவித்துக் கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றார்கள்.

அரசாங்கம் இந்திய எதிர்ப்பு நிலைக்கு அடியெடுத்துக் கொடுக்க, அந்தச் சுவட்டை பின்பற்றி பௌத்த பிக்குமார் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் அரசாங்கம் இருந்திருக்காது என்று சொல்வதற்கு என்ன ஆதாரம்? அனேகமாக அரசாங்கத்தின் தூண்டுதலுடனேயே பௌத்த பிக்குமாரின் ஆர்ப்பாட்டம் நடந்திருக்கும் என்பதற்கே கூடுதல் சாத்தியம் உண்டு.

இந்தியத் தூதுவரை வெளிநாட்டமைச்சுக்கு அழைத்து விளக்கம் கேட்டதை — எச்சரிக்கை செய்யும் பாணியில் நடந்து கொண்டதை—நியாயப்படுத்தும் ஓர் ஏற்பாடாக பௌத்த குருமார் ஆர்ப்பாட்டம் அமையலாம் அல்லவா?

அதாவது ஜாவின் கருத்துகளுக்கு அரசாங்கம் மட்டும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை மக்களும் அக்கருத்துக்களை எதிர்த்தார்கள் என்று பக்க பலம் சேர்க்கும் பொருட்டும் அரசே பௌத்த குருமாரை தூண்டியிருக்கலாம் அல்லவா?

எப்படியோ, இந்திய எதிர்ப்பைத் தேடும் வேண்டாத செயற்பாட்டில் அரசு



கதிர்காமர்

இறங்கியிருக்கிறது என்பது மட்டும் நிதர்சனம்.

ஜா உத்தியோகப்பற்றற்ற முறையில் வந்தார்; தனது கருத்தைச் சொன்னார்; போனார் என்று இருக்காமல் அவரது கருத்துக்களை ஜீரணிக்க முடியாது ஆத்திரம் அடைந்தமை அனுபவமும் முதிர்ச்சியும், ராஜதந்திரமும் இல்லாத அரசியலின் எடுத்துக்காட்டு.

திரு. ஜா தெரிவித்த கருத்துக்கள் இந்திய அரசின், கருத்துக்களே என்பதனை ஆராய்ந்து, கேட்டறிந்து ஊர்ஜிதம் செய்ததாலேயே இலங்கை அரசு இத்தகைய கோபமூட்டும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது என்று கருதவும் இடமுண்டு.

எதுவோ, தினை விதைத்தவன் தானே தினையை அறுக்க முடியும். வினை விதைத்தவன் எதனை அறுப்பான்... அது இருக்கட்டும், இந்தியாவின் எதிர்ப்பைத் தேடினாலும் பரவாயில்லை; வடக்கு — கிழக்கை நிரந்தரமாக இணைக்க முடியாது என்ற முடிவுக்குத் தெரிவுக்குழு வருவதற்கு முன்னரே அரசு வந்து விட்டது என்பது இந்தியத் தூதுவரிடம் விளக்கம் கேட்டதிலிருந்து பளிங்கு போலப் பளிச்சிடுகிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், நீதியான தீர்வு என்பவற்றுக்கு அரசாங்கம் பின்னடிப்பதும் காலம் கடத்துவதும், ஏன் என்பது இப்போது துலக்கமாகத் தெரிகிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளை தனது பக்கம் இழுத்துக் கொண்டால் இந்தியாவைப் பகைத்தாலும் பரவாயில்லை என்ற வாய்ப்பாட்டை இலங்கை அரசு இயற்றி இருக்கலாம்.


இம்மாதம் 18 ஆம் திகதி கொழும்பு வந்து எட்டுமணித்தியாலங்கள்மட்டுமே தங்கியிருந்த அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதுவரும், ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியுமான பில் றிச்சார்ட்சன் அரசின் பக்கமே சாய்ந்து பேசியதும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

சுமார் 25 வருடங்களின் பின்னர் கொழும்புக்கு வந்த அமெரிக்க உயர்மட்டக் குழுவுக்கு றிச்சார்ட்சன் தலைமை

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுபிடியுங்கள்!




வட்ட மேசை ஒன்றில் இருபது பேர் அமர்ந்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் ஒன்று முதல்இருபது வரையான இலக்கங்களில் ஏதேனும் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தமக்குரிய இலக்கத்தைக கழுத்தில் தொங்க விட்டுள்ளனர். அமர்ந்திருப்பவர்களில் அதிசயம் என்ன வென்றால் அடுத்துள்ள இரு ஆள்களின் இலக்கங்களின் கூட்டுத் தொகைக்கும், அந்த இரண்டு பேருக்கும் நேர் எதிரில் உள்ள இருவரினதும் இலக்கங்களின் கூட்டுத் தொகைக்கும் உள்ள வித்தியாசம் இருபதாகவே இருக்கிறது. அந்த இருபது பேரில் ஆறு பேரின் இலக்க ஒழுங்கு மேலே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. மற்றையவர்களின் இலக்க ஒழுங்கு என்ன வென்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

ச. சுஜிதா
(ஆண்டு 11,
(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.)

(விடை XI ஆம் பக்கத்தில்)

## இயலுமா?

| | | | |
|---|---|---|---|
| மெ | பா | ஆ | யா |
| பா | அ | கு | அ |
| ரி | ஆ | யா | கா |
| லி | க் | பி | ஐ |
| ரோ | தி | கா | ரே |
| ஸ் | ரி | வு | சி |

மேலேயுள்ள படத்தில் புவியியலுடன் தொடர்புடைய ஐந்து நிலப்பகுதிகள் ஒளிந்துள்ளன. ஓரெழுத்தை ஒரு தடவைதான் பயன் படுத்த முடியும். ஐந்து நிலப்பகுதிகளையும் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை Xi ஆம் பக்கத்தில்)

## றோசாப்பூ

சின்னச் சின்ன றோசாப்பூ
சிவந்த நிறத்தில் றோசாப்பூ
பசிய நிறத்தில் றோசாப்பூ
பார்க்க அழகாய் இருந்திடுமே.

இதழ் இதழாய் றோசாப்பூ
இதமான றோசாப்பூ
எந்த நிறத்தில் வேண்டுமோ
அந்த நிறத்தில் றோசாப்பூ

பெண்பிள்ளையின் தலையிலும்
மாப்பிள்ளையின் 'பொக்கெட்டிலும்'
மெதுவாக ஏறிக்கொள்ளும்
மென்மையான றோசாப்பூ

தெய்வ சந்நிதானத்தில்
தேவையான றோசாப்பூ
வாசம் வீசும் றோசாப்பூ
வாருங்கள் சேர்ந்து மணப்போம்.

கந்தசாமி கௌசிகா
(ஆண்டு 4,
கச்சாய் அ. த. க. பாடசாலை)

# தெரியுமா உங்களுக்கு?

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகள் அதற்கு மேல் தரப்பட்டுள்ள சொல்லில் ஒளித்துள்ளன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

I.

### நாகர்கோயில்

1. ஆதியில் இங்கு வாழ்ந்தவர்கள்.
2. பழங்கால ஆயுதம்.
3. நாட்டை ஆள்வபன்.
4. குரங்குக்கு இப்படியும் பெயர்.
5. கட்டுவதற்கு உதவுவது.
6. வழிபடும் இடம்.
7. மண்ணுக்கு முன் தோன்றியது.
8. கம்பு அல்லது தடி.
9, ஓரணியில் ஒன்று சேர்.

— பரராஜசிங்கம் சாரங்கன் —
(ஆண்டு 10, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

II.

### கிளிஞ்சல்கள்

1. ஒரு பறவையின் பெயர்
2. குப்பை என்றும் அழைப்பர்.
3. வீடு கட்டப் பயன்படுவது.
4. சலங்கையின் ஒலி.
5. மழையில் நனைந்தால் வருவது.
6. ஓர் உணவு வகை.
7. வரட்சிக்கும் தாக்கும் பிடிக்கும் செடி.
8. கூட்டல் அடையாளம்.
9. பந்தாவது அவதாரம் இது.
10. போதை தரும் பானம்.

— கார்த்திகா தர்மலிங்கம் —
(ஆண்டு 6, சாவகச்சேரி இந்து.)

III.

### திருக்குமரன்

1. மலைகளில் உறையும் கடவுள்.
2. பாய் என ஏவுதல்.
3. இரத்தம் என்பதை இவ்வாறும் கூறலாம்.
4. திசை என்று பொருள் தருவது.
5. இரவில் வரும்; ஓரிரு நாள்களில் ஒளித்து விடும்.
6. செல்வம் என்று பொருள் தருவது.

—வானம்பாடி யோ. தினேஸ்குமார் —

# தோகை விரித்தாடும் மயில்

**பிராணிகள் உலகம்**



மயில் பறவைகளிலேயே மிக்க அழகானது: மயிலின் இறகுகள் குவிந்து அழகாக நீண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்குத் 'தோகை' என்று பெயர். ஆண் மயிலுக்குத்தான் தோகை உண்டு. அது தன் தோகையை விரித்து ஆடும்போது மிக்க அழகாக இருக்கும்.

மேகங்களைக் கண்டால் மயிலுக்கு அதிக மகிழ்ச்சி உண்டாகும். அப்பொழுது ஆண்மயில் தன் தோகையை வட்டமாக விரித்து ஆடும். அதன் தலையில் அழகிய சிறு கொண்டை ஒன்று இருப்பதைப் பார்த்திருக்கின் றீர்களா?

மயில் கோழி இனத்தைச் சேர்ந்தது. பறவை போல் மயில்களும் முட்டையிட்டே தம் இனத்தைப் பெருக்கும். ஆனால், அவற்றைப்போல் நீண்ட தூரம் அல்லது உயரம் பறக்க முடியாது. மயிலின் இறகுகளும், உடலும் பறப்பதற்கு ஏற்றவாறு அமையவில்லை.

மயிலின் அலகு கூர்மையானது; உறுதியானது. இதன் கழுத்து சிறிதுநீண்டு இருக்கும். இதன் கால்கள் நீளமானவையே. பெண் மயில் பார்வைக்கு ஒரு கோழி வடிவிலே இருக்கும்.

மயிலின் நிறம் நீலம் கலந்த பச்சை; வெள்ளை நிற மயிலும் உண்டு. பச்சை மயில் பளபளப்பாக இருக்கும்.

மயிலைக் கண்டால் பாம்புக்கு அச்சம். பாம்புகளை மயில் கொன்றுவிடும். ஆனால், மயில் தேவாங்கைக் கண்டால் நடுங்கும் என்கிறார்கள். மயிலின் குரல் இனிமையாயிராது. மயில் கத்துவதை 'அகவுதல்' என்று சொல்வர்.

மயில் தானியங்களையும், புழு பூச்சிகளையும் தின்னும். அடர்ந்த காடுகளில் மயில்கள் வாழும். இரவில் மரத்தில் தங்கும். மயில்களைச் சிலர் வளர்ப்பதுண்டு. முருகன் கோயில்களில் மயில் வளர்க்கிறார்கள்.

மயிலிறகு மகத்துவமான பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனைக்குக் கலியாணம்

பூனைக்கும் பூனைக்கும் கலியாணம்
—இந்தப்
பூலோகம் எல்லாம் கொண்டாட்டம்
ஆனை மீது ஊர்வலமாம்
அற்புதமான சாப்பாடாம்

ஒட்டைச் சிவிங்கி நாட்டியமாம்
'உர் உர்' குரங்கு பின்பாட்டாம்
தடல் புடலான ஏற்பாடாம்
தாலி கட்டும் வேளையிலே

மாப்பிள்ளைப் பூனையைக்
காணோமாம்
வந்தவர் எல்லாம் தேடினராம்
பெண்ணைப் பார்த்தும் மாப்பிள்ளை
பிடிக்காமல்தான் போய்விட்டார்?

எங்கே ஓடிப் போனாரோ
என்றே பலரும் பேசினராம்
பெண்ணின் தாயார் இது கேட்டு
பெரிதும் வருத்தம் கொண்டாராம்

ஐயோ தலைவிதி என்றெண்ணி
அங்கும் இங்கும் நடந்தாளாம்
வந்தவர் சாப்பிட பானையிலே
வாங்கி வைத்த பாலையெல்லாம்

சந்தடியின்றி மாப்பிள்ளை
சமையல் கட்டில் தீர்த்தாராம்
திருடித் திருடிப் பாலையெல்லாம்
தீர்த்துக் கட்டும் மாப்பிள்ளை

பார்த்து விட்டாள் பெண்தாயார்
பலத்த சத்தம் போட்டாளாம்
உடனே அங்கே எல்லோரும்
ஒன்றாய்க் கூடி வந்தனராம்

மாம்பிள்ளைப் பூனை வழியின்றி
மத்தியில் நின்று விழித்தாராம்
மாப்பிளைப் பூனை வழியின்றி
மத்தியில் நின்று விழித்தாராம்.

கிருஸ்ணசாமி கஸ்தனி
(ஆண்டு 5,
மானிப்பாய் விவேகானந்தா
வித்தியாசாலை.).



## எங்கள் வீட்டுப்பப்பீ

எங்கள் வீட்டுப் பப்பீ
இனிய நல்ல பப்பீ
நன்றி உள்ள பப்பீ
நாங்கள் வளர்க்கும் பப்பீ

வெள்ளை நிற பப்பீ
கண்டோர் விரும்பும் பப்பீ
என்னைக் கண்டால் வால் ஆட்டும்
காவல் காக்கும் பப்பீ

தம்பி பாப்பா தன்னோடு
தாவிப் பாயும் பப்பீ
நம்பி வீட்டைக் காத்திடும்
நன்றி மறவா பப்பீ.

— சி. திருமாறன் —
(ஆண்டு 4, பரியோவான் கல்லூரி)

## மூளைக்கு வேலை

(1) 7 ஆடுகள் 7 சாக்குப் புல்லை 7 நாள்களில் சாப்பிடுமாயின், ஓர் ஆடு ஒரு சாக்குப் புல்லை எத்தனை நாள்களில் சாப்பிடும்?

(2) துரைராசாவின் தோட்டம் சற்சதுர வடிவானது. தோட்டவேலியில் ஒரு பக்கத்திற்கு 10 கதியால்கள் நடப்பட்டிருந்தால் எல்லாமாக எத்தனை கதியால்கள் வேலியில் உள்ளன?

(3) கனகபுரம் வெகுதொலைவிலுள்ளது. செல்வபுரம் கிட்டவாக உள்ளது. இவை இரண்டிற்கும் இடையில் தர்மபுரம் உள்ளது. சுதந்திரபுரத்திற்கு அப்பால் சரஸ்வதிபுரம் உள்ளது; ஆனால் சுதந்திரபுரத்திற்கு அப்பால் அடுத்துள்ளது. எந்த நகரம் நான்காவதாக உள்ளது?

த. வாகினி
(ஆண்டு 4,
சாவகச்சேரி, இந்து ஆரம்பப்பாடசாலை,


(விடை XI ஆம் பக்கம் பார்க்க)

# (சினிமா) உலகையே ஆச்சரியத்தில் மூழ்கடித்த 'டைட்டானிக்' கப்பல்!

கப்பல் பயணத்திற்காக காங்கேசன்துறை துறைமுகத்தில் சென்று இறங்குபவர்களுக்கு அந்த துறைமுகத்தின் ஒரு பகுதியில் பாதி மூழ்கி மேல் பக்கம் தெரியும் 'எடித்தரா' கப்பலும் அதற்குப் பக்கத்தில் கவிழ்ந்திருக்கும் மற்றொரு கப்பலும் ஆச்சரியமான காட்சிகள். இந்த கப்பல்களின் மூழ்குதல்களும் ஒரு காலத்தில் என்ன சரித்திரம் படைக்குமோ என்று எண்ண வைக்கிறது. சுமார் 86 வருடங்களின் முன் அட்லாண்டிக் கடலின் மூழ்கிப்போய் — இன்று சரித்திரமும், சாதனையும் படைத்து வரும் — ''டைட்டானிக்'' என்ற கப்பல்.

''கடவுளே நினைத்தாலும் இதனை கவிழ்க்க முடியாது'' என்ற கர்வமான சுலோகத்துடன் தயாரிக்கப்பட்டதுடன், ''டைட்டானிக்'' என்றால் ''மூழ்கமுடியாதது'' என்ற பெயர் சூட்டப்பட்டு இறுமாப்பின் எல்லையில் மிதக்கவிடப்பட்டபோது, கன்னிப் பயணத்தின் போதே பனிப்பாறையில் மோதி மூழ்கி — கடலின் அடியில் சமாதியாகி — உறக்கம் கொள்ளும் ஒரு கப்பலின் உண்மைக் கதைதான் அது.

'டேர்மினேற்றர்1', 'டேர்மினேற்றர் II' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கி சினிமா உலகுக்கு பெரிதும் அறிமுகமான ஜேம்ஸ் கெமரூன் என்ற இயக்குநரின் புண்ணியத்தால் 'டைட்டா



'மூழ்கும் டைட்டானிக்'

னிக்' மீண்டும் புத்துயிர் பெற்று அனைவரினதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டுள்ளது.

826 அடி நீளமும் 46 ஆயிரம் தொன் எடையும் கொண்டிருந்த டைட்டானிக் கப்பல் ஒன்பது மாடிகளைக் கொண்டது. வியப்பூட்டும் அளவுக்கு மிகப்பெரும் அரண்மனையைப் போல நுணுக்கமாக இழைத்து, இழைத்து உருவாக்கப்பட்ட இக்கப்பல் இங்கிலாந்தின் சௌத்தாம்டன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. இலக்கு — நியூயோர்க்.

கப்பலில் அப்போது கப்பலை இயக்கும் குழுவினர் மற்றும் பணியாளர்கள் 891 பேர், ஆயிரத்து 316 பயணிகள் இருந்தனர். முதலாம், இரண்டாம், மூன்றாம் வகுப்பு எனப் பிரிக்கப்பட்ட கப்பலின் கீழ்த் தளத்தில் சாமானியர்கள். மேல் தளங்களில் கோடீஸ்வரர்கள், பிரபுக்கள், இசைக் கலைஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள் என்று புகழ் பெற்ற பலர், ''கட்டப்பட்ட உடனேயே புகழ் பெற்று விட்ட இந்தக் கப்பலின் முதல் பயணத்தைக் கோட்டை விட்டுவிடக் கூடாது'' என்று முதல் வேலையாக பயணச்சீட்டை வாங்கியிருந்தனர்.



கப்டன் ஸ்மித்

'டைட்டானிக்' கன்னிப் பயணத்தை ஆரம்பித்த தினத்தில் பிரிட்டனில் உள்ள அனைத்து நாளிதழ்களிலும் இதுதான் தலைப்புச் செய்தி. அந்தக் காலத்தில் அக்கப்பல் உருவாக்கப்பட்ட போது அதன் செலவு ஏழுபது லட்சம் அமெரிக்க டொலர்.

அட்லாண்டிக் கடலை டைட்டானிக் சீரான வேகத்தில், கம்பீரமாக கடந்து கொண்டிருந்தது. முதல் நான்கு நாட்களையும் பயணிகள் 'பால்ரூம் டான்ஸ், இசை நிகழ்ச்சிகள், பிரமாதமான விருந்து, நீச்சல், கோல்ஃப் விளையாட்டு என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் கழித்தனர். புதிய நட்புகள் துவங்கின; காதல்கள் மலர்ந்தன.

ஏப்ரல்14 காலை வானொலி மூலம் 'உங்கள் கப்பல் போகும் வழியில் சில ஐஸ் பாறைகள் தென்படுகின்றன. ....உஷார்!' — என்று தொடர்ந்து சில செய்திகள் வர, ''யானையோடு பூனை மோதுவதா...?''என்கிற ரீதியில், அந்தத் தகவல்கள் அலட்சியப் படுத்தப்பட்டன!

அதே நாள் இரவு 11.40 மணி......மேல் தளத்துக்குப் போன பணியாளர் ஒருவரின் கண்களுக்கு, கும்மிருட்டிலும் தொலைவில் மேடு போல ஏதோபுலப்பட்டது. கப்பல் நகர நகர, தொலைவில் தெரிந்தது பெரிதாகிக் கொண்டேபோனது!— மிகப் பெரிய ஐஸ்பாறை!

அலறிக்கொண்டு ஓடிய அவர், கப்டனிடம் விஷயத்தைச் சொல்ல......பதறிப் போனார் கப்டன். கப்பல் குழுவினர் வெகுவேகமாக இயங்கிக் கப்பலை திசைதிருப்பப் பார்த்தார்கள். நேரடி மோதல் இல்லைத்தான் என்றாலும் ஒரு ராட்சத அரிவாளைப்போல அந்த ஐஸ் பாறை, கப்பலின் பக்கவாட்டில் முந்நூறு அடி நீளத்துக்குக் கிழித்துவிட்டுப்போக ...குபுகுபு என்று கடல்நீர் உடனடியாக உள்ளே நுழைய ஆரம்பித்தது. சில நிமிடங்களிலேயே கீழ்த்தளத்தில் பதினான்கு அடி உயரத்துக்குத் தண்ணீர்!

கப்டனாக இருபத்தைந்து வருட அனுபவம் கொண்ட கப்டன் ஸ்மித், உள்ளே பில்லியர்ட்ஸ் ஆடிக்கொண்டிருந்த கப்பலின் 'டிசைனர்' தோமஸ் ஆண்ட்ருவிடம் ஓடி, விஷயத்தைச் சொன்னார் (இதுவேகப்டனுடைய கடைசிப் பயணம். இதோடு ஓய்வுபெற முடிவு செய்திருந்தார்!.) பதற்றத்துடன் கீழே போய்ப்பார்த்து விட்டு வந்த ஆண்ட்ருவின் முகம் வெளிறிப் போயிருந்தது. அவருடைய தோள்களை உலுக்கி கப்டன் விசாரித்தவுடன், மெல்ல நடுங்கிய குரலில் பதில் வந்தது. 'ஒன்றரை மணித்தியாலம். அதிகபட்சம் இரண்டு மணி நேரம்தான்...இந்தக் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது!''


திகைப்பில் செயலிழந்து போன கப்டன், சுதாரித்துக் கொள்வதற்குள் இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்து அவரைத்தாக்கியது. ஆம்! இருக்கும் 'லைஃப்' படகுகளில் பாதி பேருக்கும் குறைவான பயணிகள்தான் தப்ப முடியும்.

'இந்தக் கப்பலுக்கு 'எமர்ஜென்ஸி'படகுகள் எதற்கு..? இது என்ன மூழ்கவா போகிறது...?—என்று சற்றேகர்வத்துடன் கேட்டு விட்டு, 'போனால் போகட்டும்' என்று பதினாறு 'உயிர்காக்கும் படகுகளை' மட்டும் டைட்டானிக் உருவாக்கியவர்கள் வைத்திருந்தார்கள்!

இந்தப் பதினாறு படகுகளினால் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை காப்பாற்ற முடியவே முடியாதென தீர்மானித்து பெண்களையும், குழந்தைகளையும் அப்படகுகளில் ஏற்றி ''இங்கிலாந்து கரையில் காத்திருங்கள்; எப்படியாவது நாங்கள் தப்பி வருகிறோம்!'' என்று சொல்லி ஆண்கள் அனைவரும் அனுப்பி வைத்தனர், தனது 16 வயது மகனை மறைத்துக் கொண்டு தாயொருவர் ஏற முயன்றபோது மகனை வலோற்காரமாக பறித்து ''ஆண்மகனாக இருக்க கற்றுக்கொள்'' என்று புத்திமதி சொல்லப்பட்ட சம்பவம் நடந்தது. ஆனால் அவர்கள் எவரும் பின்னர் சந்திக்க முடியாமலேயே போய்விட்டது.

உயிர்காக்கும் படகுகள் நகரத் தொடங்கிய போது கப்பல் செங்குத்தாக எழுந்து இரண்டாக முறிந்தது. பாதி மூழ்கியது. அந்த நேரத்தில் கப்பலில் இருந்த சிலர் மண்டியிட்டு பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, வேறு சிலர் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் தொடர்ந்து சீட்டாடிக் கொண்டிருக்க ...கப்பலில் இருந்த பாண்ட் வாத்தியக் குழுவினர் ''கடவுளே உனக்கு மிக அருகில் இருக்கிறோம்...,' என்ற பாடலை இசைத்துக் கொண்டே மூழ்கிப் போயினர். கப்பல் மூழ்கும்போதும் அதன் இறுதிக் கட்டம் வரை கப்பலின் விளக்குகள் எரிந்தபடி இருந்ததாக தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்,

ஏப்ரல்—15 ஆம் திகதி பின்னிரவு 2. 20 க்கு மோதிய கப்பலின் கடைசிப் பகுதி அதிகாலை 5 மணிக்கு மூழ்கும்போது அதன் கப்டனான ஸ்மித் சீருடையணிந்தபடி



அரண்மனைக்கு இணையான வேலைப்பாடுகள்

விறைப்பாக சலனமற்று, கம்பீரமாக மேல்தட்டில் நின்ற காட்சியை, இன்றும் டைட்டானிக்கிலிருந்து தப்பியவர்களில் உயிரோடிருக்கும் சிலர் நினைத்து சிலிர்த்துப்போகிறார்கள்.

இந்த டைட்டானிக்கின் கதையுடன் ஒரு மனதை நெருடும் காதல் கதையை புகுத்தி ஒரு கதையைத் தயாரித்தபடி வெற்றிப்படங்களை அள்ளி வழங்கிய 'ருவன்ரியத் செஞ்சரி பொக்ஸ்' நிறுவனத்தை, இயக்குநர் கெமரூன் அணுகினார். கதையைச் சொன்னார். கதையைக் கேட்ட தயாரிப்பாளர்கள் 600 கோடி ரூபாவை ஒதுக்கி வைத்துவிட்டு படத்தயாரிப்பில் ஈடுபாடு காட்டத் தொடங்கினர்.

மெக்ஸிகோ நாட்டுக் கடற்கரையில் 120 கோடி ரூபா செலவில் நாற்பது ஏக்கர் விஸ்தீரணத்தில் ஒரு ஸ்ருடியோவைக் கட்டி முடித்த தயாரிப்பாளர்கள்... அதில் செயற்கைக் கடல் ஒன்றை உருவாக்கினர். ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணமான இந்தக் கடலில் 170 லட்சம் கலன் நீர் விடப்பட்டு 775 அடிநீளமான டைட்டானிக் மாதிரிக் கப்பல் ஒன்றும் உருவாக்கப்பட்டது. கப்பல் இரண்டாக முறிந்து தாழ்ந்து போவதற்கு ஏற்றவிதமாக ஏராளமான கிறேன்களின், உதவிகளுடன் உருவாக்கப்பட்ட மாதிரிக்கப்பல் செயற்கை கடல், ஆயிரக்கணக்கான நடிகர்கள், பணியாளர்கள் ஆகியவர்களுக்கான சம்பளம் மற்றும் செலவுகள் தண்ணீராய் பணத்தைக் கரைத்தது. ஒதுக்கப்பட்ட பணத்தைவிட மேலதிகமாக பணம்தேவைப்படும் என்பதை உணர்ந்த தயாரிப்பாளர்கள் திடீர் கோபக்காரரான இயக்குநரிடம் விவரத்தை சொல்ல முடியாமல் தவிக்க ''இதோ இன்னொரு டைட்டானிக், பனிப்பாறைகளை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது'' என்று பத்திரிகைகள் கிண்டலடித்தன.


தயாரிப்புக் காலமும் குறிப்பிட்ட காலத்தைவிட மாதக் கணக்கில் இழுபட்டது. இதனால் ஏதோ ஒரு துணிச்சலை வரவழைத்து கெமரூனிடம் நிலைமையை விளக்கினர் தயாரிப்பாளர்கள்.

''உண்மையான 'டைட்டானிக்' கட்ட ஏற்பட்ட செலவே 70 லட்சம் டொலர்தான். நீங்கள் சொன்னதைவிட இப்போது இரு மடங்கு செலவாகிவிடும் போல் இருக்கிறது. மேலதிக பணத்தில் இன்னும் இரண்டு படங்கள் செய்திருப்போம்'' — என்றனராம்.

அதற்கு கெமரூன் 1911 இல் டைட்டானிக்கின் பெறுமதி 70 லட்சம் டொலர். ஆனால் இப்போது அவ்வாறு உருவாக்க ஐம்பது கோடி டொலர் தேவை. மேலதிகமாக என்ன பெரிதாக எடுக்கப் போகிறீர்கள்? இரு கராட்டிப் படம் எடுத்தீர்களில்லை. அதனை மக்கள் பார்க்காதிருப்பதே மேல்'' — என்றார் கடுப்பாக.

வேறு வழியில்லாமல் 'ருவன்ரியத் செஞ்சரி பொக்ஸ்'நிறுவனம் மற்றொரு பெரிய ஹொலிவூட் பட நிறுவனமான 'பாரமவுண்ட் பிக்ஸர்ஸை' உதவிக்கு நாடியது. பின்னர் கெமரூனும் மனது மாறி, தனது சம்பளமான 30 கோடி ரூபாவை விட்டுக் கொடுத்தார்.

இவ்வளவு சர்ச்சையின் பின் முதலில் பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் படம்



இதுதான் டைட்டானிக்கின் உண்மைத் தோற்றம்

திரையிடப்பட்டது. 58நாள்களில் 35 கோடி அமெரிக்க டொலர்களை வசூலாகப் பெற்றது. ''ஜுராசிக் பார்க்'' திரைப்படத்தின் 67 நாளில் முப்பது கோடி அமெரிக்க டொலர் வசூல் என்ற சாதனையை இது முறியடித்து விட்டது, இது வரை 'டைட்டானி'க்கின் வசூல் 1·3 பில்லியன் டொலரை தாண்டி விட்டது; இது தயாரிப்புச் செலவின் ஆறு மடங்காகும்.

இதேபோல் 56ஆம் ஆண்டில் ''பென்ஹர்'' திரைப்படம் பெற்ற 11 ஒஸ்கார் விருதுகள் என்ற சாதனையை 1998இல் டைட்டானிக் அதே 11 ஒஸ்கார் விருதுகளைப் பெற்று சமப்படுத்தியுள்ளதாயினும் சிறந்த நடிகர், சிறந்த நடிகைக்கான விருது இப்படத்துக்குக் கிடைக்காமல் போயிற்று.

இந்த கப்பல் கதையை நமது தமிழ் சினிமா இயக்குநர்களை போல எடுத்த எடுப்பில் 4 பாட்டு, இரண்டு சண்டை, கவுண்டமணி — செந்தில் கடிஜோக்ஸ், நாயகியின் அங்கங்களை எவ்வளவு மயிரிழை உயரத்திற்கு காட்ட முடியுமோ அவ்வளவு கவர்ச்சி என்ற போக்கில்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவித்திராவை என்ன செய்யலாம்?

சஞ்சீவி சிறுகதை

என் மனதிற்குள் ஏக இரைச்சல். காதுக்குள் வண்டு புகுந்ததுபோல் ஒரே குடைச்சலாய்க் கிடந்தது. நிமிடத்துக்கு நிமிடம் திடுக்கிட்டு அதிரும் நரம்புகள்... சிரிக்கும்போது குறைந்தளவு நரம்புகளும், கோபப்படும்போது அதிகளவு நரம்புகளும் வேலையில் ஈடுபடுவதால் கோபப்படுபவர்களுக்கே ஆரோக்கியம் அதிகம் கெடுகின்றது என்று தெரிந்தபோதும் என்னால் மனம் விட்டுச் சிரிக்க முடியவில்லை. கண்டபடி காண்கிறவர்களிடமெல்லாம் எரிந்து விழுந்தேன். போதாக்குறைக்கு என்னுடைய கத்தலைக் கண்ட தம்பி கோபப்படுகிறவர்களுக்கு விரைவில் மூதுமை வந்துவிடும் என்பதாய்ச்சொல்லி என் எரிச்சலை மேலும் கிளப்பி விட்டுச் சென்றான். காகிதத் தாள்களோடும், பேனாவோடும் போராடிக்கொண்டிருந்த நான் ''சர்''ரென்று கதிரையை இழுத்து விட்டு மூலைக்குள் கிடந்த சாய்மனைக் கதிரைக்குள் முடங்கிக் கொண்டேன்.

உடம்பை ஆசுவாசப்படுத்திக்கண்களை மூடிக்கொண்ட போதும் கண்களுக்குள் அந்தப் பவித்ராதான் வலம்வந்தாள். பவித்ராவை என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதனால்தான் இந்தக் கோபம், குழப்பம் எல்லாமே! படுத்துக்கிடந்தபடி யோசிக்கிறேன். என்ன செய்யலாம்...? எதைச் செய்தால் என்மனம் திருப்தி கொள்ளும்; ஊஹூம்... எதுவும் தெரியவில்லை. இன்று காலை விடிந்ததிலிருந்தே இதுதான் சிந்தனையாக இருக்கிறது. அழகான ஒரு ஞாயிற்றுக்கிழமைப் பொழுது மங்கி மங்கி வீணே கழிகிறது. அம்மா அடிக்கடி எட்டிப் பார்த்துவிட்டுப்போகிறார். கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளி வரும்படி அவ இரந்தபோது நான் கோபத்துடன் இரைந்தது குறித்து அவவுக்கு வேதனையும், வருத்தமும்தான். ஆனால் அவ்வாறு கத்தியதற்குத் தண்டமாக எங்கள் வீட்டு உப்புத்தண்ணீரை நான் பருகவேண்டியதுதான்.

இப்போது பவித்ராவை என்ன செய்வது? அம்மாவைப் பற்றிய நினைப்பு அறுந்து அந்த இடத்தைப் பவித்ரா ஆக்கிரமித்துக் கொள்கிறாள்.

பவித்ரா யார்...? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்...? அதையெல்லாம் நீங்கள் கேட்கக்கூடாது. சும்மா பார்த்துக் கொண்டிருங்கள். ('சொறி'வாசித்துக்கொண்டிருங்கள்) போதும்.

பவித்ராவுக்கு வயது பதினெட்டு. கருகருவென்று முகில் போல பரந்த கூந்தல்; கணத்துக்குக் கணம் அலையும் பெரிய விழிகள் (அதுவும் கருகருதான். என்ன 'திருதிரு' என்று விழிக்கிறீர்கள்?) நிலாமுகம்; அந்த நிலாவிற்கூடக் கறைகள் இருக்கலாம். ஆனால் இவள் முகத்தில் ஒரு பருக்கூடக் கிடையாது. சில வேளை அவள் ''ஃபெயர் அன்ட் லவ்லி'' பாவித்திருக்கலாம். அதெல்லாம் உங்களுக்குச் சொல்லக்கூடாத விஷயங்கள். அவளது மாம்பழக் கன்னங்களில் சிரிக்கும்போது குழி விழும். அந்தஉதடுகள்... முருக்கம்பூவின் சிவப்பு நிறத்தவை. கூந்தல் முகில் போலப் பரந்ததென்றல்லவா சொன்னேன். அந்தக் கூந்தலை வாரி சடையை கருநாகம் போலப் பின்னிவிட்டிருப்பாள். அது எப்படி பாருங்கள்; நிலவு முகமில்லையா...? கிரகணத்தின்போது சந்திரனைப் பாம்பு விழுங்குவதாய்ச் சொல்வார்களே! அதுவே முற்றிலும் பொருந்தக் கூடியவாறு அந்த நிலவு முகத்தைக் கூந்தல் கருநாகம் விழுங்க வருவது போல் தோன்றும். அட... என்ன பேய்முழி முழிக்கிறீர்கள்? நீங்கள் ஒருவரும் இலக்கியம் படிப்பதில்லையா...? (படித்திருந்தால் அதில் ஒன்றைத்தான் நான் சரடுவிடுகிறேன் என்று புரிந்திருப்பீர்கள்)

சரி...அதுதான் போகட்டும். உங்களுக்கு ரம்பா, ஊர்வசி (தேவலோக ரம்பை, ஊர்வசியைத் தெரியாவிட்டாலும், திரையுலக நட்சத்திரங்களைத் தெரியாமலும் இருப்பீர்களா...?) மொனிஷா, ஐஸ்வரியா... யாரையும் தெரியாதா...? சும்மா சொல்லுங்கள் பரவாயில்லை...

விடுங்கள் விஷயத்திற்கு வருகிறேன். இவர்களைப் போல ஒருத்தி என் பவித்ரா (ஐ மீன் நான் சொல்கிற பவித்ரா) அவளை என்ன செய்வதென்றுதான் எனக்குத் தெரியவில்லை. ஏதாவது செய்யலாம். அதில்தான் உள்ள பிரச்சினையே, இப்படித்தான் செய்யவேண்டும். இதைத் தவிர வேறு வழியே இல்லை என்றால் பிரச்சினையே இல்லை. அதையே செய்துவிட்டுப் போய்விடலாம். இப்போது நிலைமை அப்படியே இல்லை. பலவழிகள் திறந்தபடி கிடக்கின்றன. எந்த வழியால் போகலாம், என்பதுதான் பிரச்சினையே.

பவித்ராவை மேலே படிக்க அனுமதிக்கலாம் அல்லது வேலை செய்து சம்பாதித்து வா என்று சொல்லலாம். அதிலும் எத்தனை திண்டாட்டம், என்ன படிக்கச் சொல்வது? விஞ்ஞானம் படித்து ஒரு பெரிய விஞ்ஞானியாக 'கல்பனா சொலோனா'' மாதிரி விண்ணைச் சுற்றிக் கொண்டுதான் நீ வரவேண்டுமென்றோ? தமிழ் இலக்கியத்தில் பி.எச்.டி. செய்து யதார்த்தம் குலையாமல் எழுதி ''அருந்ததி ரோய்'' மாதிரி முதல் நாவலிலேயே ''புக்கர்'' பரிசை வெல்லவேண்டுமென்றோ அவளைக் கட்டாயப்படுத்தலாம். இதற்கெல்லாம் அவள் மறுத்தாற்கூடப் பரவாயில்லை. (எழுதுகிறமாதிரி சுலபமான, விஷயங்களா அவை?) பாங் உத்தியோகத்திற்கு அவளை அனுப்பி வைத்து மனேஜரை மயக்கிப் போடு என்றோ, கடற்கரையோரமாய்க் காதலனை எதிர்பார்த்து 'டுயட்' பாடிக்கொண்டிரு என்றோ சொல்லலாம். இவையெல்லாம் அவளால் முடியாவிட்டாற்கூட அவள் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டு ''வீட்டு வேலைகளைமட்டும் கவனித்துக்கொள் தாயே'' என்று அடுக்களைப் புகைக்குள் அவளை அடைத்துவிடலாம். இது கூட முடியாவிட்டால்...வேறு என்ன செய்வது......? ஏன்......கொலை செய்யமுடியாதா..? கொலை கூட செய்யலாம். அதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. சுலபமாக ஒரு கொலையைச் செய்துவிட்டு சட்டத்தின் பிடியில் அகப்படாமல் நான் ''ஆனந்தம் ஆனந்தம்......'' பாடிக்கொண்டிருக்கலாம்.

இது நல்ல ''இண்டரஸ்ரிங்'' ஆக இருக்கிறதில்லையா...?

படிக்க விடுவது, உழைக்க அனுப்புவது, கலியாணங் கட்டுவது...இதைத்தான் எல்லோருமே செய்கிறார்கள். நானும் அதையே ஏன் செய்வான்? கொஞ்சம் வித்தியாசமாக ஏதேனும் செய்வோம். அதற்கு கொலை கொஞ்சம் பரவாயில்லை அல்லவா...?

என்ன பவித்திராவைக் கொல்வதா...? கொன்று விடுவதா...? அந்த இளம் மொட்டை...வார்த்தைகளுக்குச் சிறைப்படாத அந்தப் பைங்கிளியை வதைப்பதா...? அதுவும் நானா...? அம்மாவின் சொல் தட்டாத ஆண்பிள்ளையாகிய நானா...? (சற்றுமுன் அம்மாவோடு வாக்குவாதப் பட்டதை மறந்து விடுங்களேன் பிளீஸ்...)

ஆம். வேறுவழியேயில்லை. அதை நான் செய்யத்தான் வேண்டும். எப்படியும் அவளைக் கொலைசெய்யத்தான் வேண்டும். 'சொறி' பவித்ரா, இந்தமுடிவு எடுத்ததற்காக என்னை மன்னித்து விடேன்.

சரி, தீர்மானித்தாகி விட்டது. அவளை எப்படிக் கொல்வதென்பதுதான் அடுத்த பிரச்சினை. அது ஒன்றும் அவ்வளவுகடினமான விஷயமொன்றல்ல. எத்தனையோ துப்பறியும் நாவல்களைக் கரைத்துக் குடித்து, ஆங்கிலத்திரைப் படங்களையும் ரசித்த எனக்கு அந்தக் கொலை யுக்திகள் நிரம்பவே தெரிந்திருந்தன. ஆனால் அதைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் எனக்கும் ஏற்படும் என்பதுதான் எனக்குமுன்பே தெரியாமற் போயிற்று. அவற்றினுள்ளும் எது சிறந்த வழி என்பதில்தான் இப்போது குழப்பமாய் இருக்கிறது.

திடீர், திடீர் என்று என் நெஞ்சில் கூர்மையான கத்திகளும், நஞ்சுப்பொடிகளும், உயர்ந்த மாடிக்கட்டடங்களும், மலைப்பள்ளத்தாக்குகளும் மாறி, மாறி வந்து மோதின. இவற்றில் எவற்றிலிருந்து கொலையாளி இலகுவாகத் தப்பித்துக் கொள்ள முடியும்?

எல்லாக் கதைகளிலும் எந்தப் புத்திசாலித் தனத்தோடு கொலையைச் செய்தாலும் அனேகமான தருணங்களில் கோலையாளி கையில் விலங்கோடுதான் போக வேண்டியிருக்கிறது. ஏதோ ஒன்று இரண்டு இடங்களில் மட்டும் சில நல்ல கொலையாளிகள்தப்பித்து விடுகிறார்கள். நான் நல்ல கொலையாளிதானே? சந்தேகமிருக்கிறதா உங்களுக்கு?

கொஞ்சம், கொஞ்சமாய் இரத்தத்தோடு கலக்கும் ஒருவித விஷத்தை அவள் அருந்தும் பாலில் அவளறியாமலே கலக்கலாம். தலைவலிக்கு அவள் முகரும் 'விக்ஸ்' டப்பியில் விஷப்பொடி தூவி விடலாம். கைரேகையை சுத்தமாய்த் துடைத்து விடலாம். இல்லா விட்டால் மாடிக் கட்டடத்திலிருந்து தள்ளிவிடலாம். தற்கொலை போல ஒருதோற்றத்தை ஏற்படுத்தலாம். அதற்காக ஒரு காரணத்தையும் சிருஷ்டிக்கலாம். பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி ஏதாவதொன்று......

எனக்கு மூளையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போலத்தோன்றுகிறது. இன்னும் சிறப்பாய்த் திட்டமிடுவதற்கு லைப்ரறியில் போய் [illegible] லும் நல்லது. வேண்டாம் அப்போது பிடிபட்டால் இன்னும் ஆபத்து. கொலைசெய்யாமலே கொலை செய்ய முயற்சிக்கிறேன் என்று பிடித்து விடுவார்கள்.

கொஞ்சநேரம் எனக்கு நிம்மதியான உறக்கம்வேண்டும். உறங்கி எழுந்தால் ஏதேனும் தெளிவாகச், சிந்திக்க முடியும். விழிகளை மெல்ல மூடுகிறேன். சாய்மனைக் கதிரையில் கிடந்தபடியே உல்லாசகிரிக்குப் பயணம் போவது போல ஒரு உணர்வு. தூக்கம் கூட என்னை நெருங்கபபயப் பட்டது போலிருந்தது. பவித்திரா என்றொரு அபலைப் பெண்ணைப் பாவி கொல்லப் போகிறான் என்றதொரு கோபம் அதற்கும் இருந்திருக்கும்போல. இருளுக்கும் ஒளிக்குமிடையிலான இடைவெளிபோல ஏதோ ஒன்றில் நான் அமிழ்ந்து போன கண்களுக்குள்பவித்ரா வந்தாள்.

கையைக் கூப்பியபடி கெஞ்சினாள்......

''தயவு செய்து என்னைக் கொல்லாதை. நான்... எங்கையாவது போடுறன். கொல்லாதை, கொல்லாதை...''

எனக்குள் ஒரு விஷமச் சிரிப்பு இறங்கியது.

அவள் கெஞ்சல் என்னை ஒரு வீராதி வீரனாக்குவது போன்ற பரவசத்தை ஊட்டவே குரூரச் சிரிப்புடன் அவளை நோக்கி நெருங்குகிறேன்.

''ஐயோ வேண்டாம் வேண்டாம்...''

அவள் கதறக் கதற அவள் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்சுகிறேன்.

'குபுக்' கென்று வழிந்த ரத்தம் என் கையை நனைக்கிறது.

''ஹா... ஹ்ஹஹ்ஹா...''

என் சிரிப்பு மலையில் எதிரொலிப்பது போல் கேட்கிறது. சுற்றிலும் பார்க்கிறேன். யாரும் இல்லை. நான் தப்பிவிட்டேன், தப்பிவிட்டேன்—ஒரு கொலையைச் செய்துவிட்டு.

அவளைப் பார்க்கிறேன். அவளிடம் சலனமில்லை. சற்றுமுன் தன் உயிருக்காக இரந்து என்னிடம் மன்றாடியவள் வெறும் சடமாகக் கிடக்கிறாள். நான் எதற்காக அவளைக் கொன்றேன்? எந்தக் காரணமுமேயில்லாமல் என் சிரிப்பு திடீரென்று ஒரு மௌனமாகச் கட்டுப்பட்டு விக்கலாக எழுந்தது.

''பவித்ரா... பவித்ரா... போட்டியா பவித்திரா...''

மனதின் கசப்பு உச்சஸ்தாயியில் பொங்கியெழுகிறது.

''ஐயோ என்ரை பவிதரா...''

கத்தியபடி உதறி எழும்பினேன். அம்மா அடுப்படிக்குள் போட்டிருந்த கைக்காரியத்தை விட்டுவிட்டு ஓடி வந்தா.

''என்னப்பன்? என்ன நடந்தது...?''

ஒரு மாதிரிக் கேட்டா. எனக்குள் வெட்கப்பட்டபடியே ''ஒண்டுமில்லையம்மா சும்மா கனவு...'' என்று அப்பால் திரும்பிக் கொண்டேன்.

''கனவோ...'' அம்மா திரும்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே பக்கத்து வேலிப் பொட்டுக்குள்ளால் மாமி வீட்டை நோக்கிப் போனா.

''சீ... என்ன விசர்வேலை செய்து போட்டன்...?''

''நான் ஏன் அப்பிடிக் கத்தினன்...?''

இதுக்காக பவித்ராவைக் கொல்லாமல் விடுறதே...? எதுக்கும் யோசிக்க வேணும்.

ஜமுனா கதறிக் கொண்டு ஓடிவந்தாள். பின்னால் அம்மா.

''என்ன...? ஏன் இப்ப இவ்வளவு கத்தல்...'' எரிச்சலோடு கேட்கிறேன்.

''பாருங்கோ மாமி அவர் கேக்கிற கேள்வியை...'' அம்மாவிடம் முறையிட்டாள்.

''ஏன் இப்ப நான் என்ன கேள்வி கேட்டிட்டன். சும்மா ஒப்பாரி வைக்கிறதுக்கு...''

''நான் ஒண்டும் ஒப்பாரி வைக்கேல்லை. நீங்கள் சொல்லுங்கோ ஆர் அந்தப் பவித்ரா...''

பெண்களுக்கே பிரத்தியேகமான அந்தப் பொறாமையின் வெளிப்பாடு என் உதட்டோரங்களில் ஒரு சிரிப்பின் சாயல் எட்டிப் பார்த்திருக்க வேண்டும்.

''சிரியுங்கோ வடிவா... சொந்தத்துக்குள்ளை கலியாணம் கட்டுறது விஞ்ஞான முறைப்படி பிழை. பிறக்கிற பிள்ளைகள் ஊனமாய் பிறக்குங்கள் எண்டெல்லாம் ஏன் சும்மா புளுகினீங்கள். உள்ளதைச் சொல்ல வேண்டியது தானை? இனியாவது சொல்லுங்கோ ஆர் அந்தப் பவித்ரா...''

எனக்கு இன்னும் சிரிப்பு வந்தது. கண்ணகி கத்திவிட்டுப் போகட்டும் என்று காத்திருந்தேன்.

''என்ன செய்யிறதையும் செய்து போட்டு சிரிப்பு வேறை... கேளுங்கோ மாமி வடிவா அந்தப் பவித்ரா ஆரெண்டு...''

''ஆரெண்டு சொல்லடா, இவ்வளவு கேட்டும் சொல்ல மாட்டியே...?''

''அவள் ஒரு அழகான பதினெட்டு வயதுப்பெண்...'' சினிமா டயலாக்காக எடுத்து விட்டேன்.

ஜமுனா மிஞ்சிய கண்ணீரோடு என்னை முறைத்துப் பார்த்தாள்.

''எங்கட ஜமுனாவை விடவோடா...''

''யேஸ்...'' அழுத்திச் சொன்னேன்.

''அவளை என்னடா செய்யப் போறாய்...''

ஒரு பெருமூச்சோடு எழுத்தெழுத்தாய் உச்சரித்தபடி சொன்னேன்.

''கொ... லை...''

''கொ... கொலை...'' ஜமுனா ஓரடி துள்ளிப் பின் வாங்கினாள்.

''என்னடா...'' நெஞ்சில் வைத்த கையோடு அம்மா தூணருகே சாய்ந்து விட்டா.

'ஏனடா ஏதும் இசகுபிசகாய் நடந்திட்டியோடா...?' கொஞ்சம் ஆசுவாசத்திற்குப் பிறகு கேட்டா,

''ஏன்...?ஏன்...?'' ஜமுனா மூச்சைப் பிடித்துக் கேட்டாள்.

''சஸ்பென்ஸ்...'' மெல்ல சாய்மனைக் கதிரையால் எழுந்து அப்பால் போனேன். இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விட்டுக் 'கப்' பென்று என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.

**-தாட்சாயணி-**

''டேய் வேண்டாமடா ... உன்ரை ஏழைத்தாயை விட்டுட்டு நீ போடாதையடா. அப்பிடி ஒண்டும் செய்து போடாதை...''

''என்ன வில்லங்கத்துக்கு நீங்கள் அந்தப் பவித்திராவைத் தேடிப் போனீங்கள், இஞ்சை நானொருத்தி குத்துக்கல்லு மாதிரி இருக்கிறது தெரியேல்லையே...!'

மாறி மாறி அவர்கள் மூக்கைச் சிந்தத் தொடங்கினார்கள்.

எனக்கு மூளை கெடத் தொடங்கியது.

''என்னத்துக்கிப்ப ரெண்டு பேரும் கத்தித் துலைக்குறியள். ஊரைக் கூட்டுறதுக்குத் தான் வழி பாக்கிறியள் போலை...''

அவர்கள் ஒரு நிமிஷம் அடங்கினார்கள். ஆனாலும் அங்கேயே நின்றிருந்தார்கள். பார்க்க பாவமாய்க் கிடந்தது.

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மிச்சல்
ஜோன்ஸன்

# பால் மணம் மாறமுன் பலி வாங்கும் ஆசை

அன்றாகோல்டனுக்குவயது 11; அவனது நண்பன் மிச்சல் ஜோன்ஸனுக்கு வயது 13.

மார்ச் 24,1998,செவ்வாய். இருவரும் பள்ளிக்குப் போக வில்லை. அவர்களது வரவின்மையை எவரும் அறிவிக்கவும் இல்லை.

முதல்நாள் திங்கட்கிழமை அன்றாகோல்டன் தன் தந்தையாருடன் லிற்றில் போனோவில் (Little Bono) உள்ள தனது தாத்தாவின் வீட்டுக்குச் சென்றிருந்தான். அங்கிருந்து செவ்வாய்க்கிழமை காலை வீடுதிரும்பிய அவன் பெற்றோர்கள் வேலைக்குப் புறப்படும்வரை அங்கும் இங்குமாக வளைய வந்தான்.

பெற்றோர்கள் வேலைக்குப் புறப்பட்டதும் நண்பன் மிச்சலுடன் சேர்ந்து கொண்டான். ஏதாவது செய்தாக வேண்டும் என்பதுபோல் இருவரது கைகளும் துருதுருத்தபடி இருந்தன.

அன்றாவைவிட இரு வயது மூத்தவனான மிச்சலிடம் அவனது பெற்றோரின் வான் இருந்தது. இருவருமே வாகனம் செலுத்துவதில் சுழியர்கள். மிச்சலின் பெற்றோரும் அவர்களது உறவினர்களும் காட்டில் வேட்டைக்குச் செல்லும் வழக்க முடையவர்கள். அந்த வானை அவர்கள் அதற்குப் பயன்படுத்துவதுண்டு.

வானின் பின்புறத்தில் கூடாரம், உறங்கும் மெத்தை, பல்வேறு சாவிகள், ஒரு பெட்டி நிறைய உணவு, மற்றும், எண்ணிக்கை அளவு தெரியாத வெடிமருந்து என்பன இருந்தன.

தங்கள் நீண்டநாள் விருப்பத்தைத் திட்டமிட அன்றாவுக்கும், மிச்சலுக்கும் அது போன்ற தருணம் முன்னர் ஒரு போதும் வாய்த்ததில்லை.

அன்றாவின் வீட்டில் துப்பாக்கிகளை பாதுகாப்பாக வைக்கும் சிறிய அறை ஒன்று உள்ளது. அவனது குடும்பத்திற்கு நெருக்கமான—சட்டத்தை அமுல் செய்யும்—உத்தியோகத்தர்களினதும் குடும்ப உறுப்பினர்களினதும் துப்பாக்கிகள் அந்த அறைக்குள்ளே பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும்.

சற்று நேரத்திற் கெல்லாம் அன்றாவும், மிச்சலும் சுத்தியல், 'ரோச் லைற்' உதவியுடன் அந்த அறைக் கதவைப் பிளக்க முயன்றுகொண்டிருந்தனர்.

கதவின் இடுக்கைத் தெண்டி பூட்டை உடைப்பது சிரமமான பணியாக இருந்தது. அதற்குள் இருந்து துப்பாக்கிகளை எடுக்கும் முயற்சியில் சிறுவர்கள் தோல்வி கண்டனர்.

துப்பாக்கி கிடைக்கவில்லை.

மூளையும், கைகளும் தொடர்ந்து துரு துருத்தன. எதையோ சாதிக்க உந்தப்பட்டவர்களாக வேகம் கொண்டனர்.

இங்கில்லாவிட்டாலும் துப்பாக்கி கிடைக்கக் கூடிய மற்றொரு இடம் அவர்கள் இருவருக்கும் தெரியும்.

அடுத்த சில நிமிட நேரத்துக் கெல்லாம் இருவரும் வானில் கிளம்பினர்.

சில மைல்கள் தொலைவில் உள்ள மிச்சலின் தாத்தா குடும்பத்துக்குச் சொந்தமான தோட்டத்துக்குச் சென்று சேர்ந்த இருவரும் அங்குள்ள வீட்டில் இருந்த சிறிய நில அறைக்குள் இருந்து நான்கு கைத்துப்பாக்கிகளையும்,அதிசக்திவாய்ந்த மூன்று ரைபிள்களையும்,ரவைகளையும் அபரித்தனர்.

கைகளில் துப்பாக்கி கிடைத்ததில் அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்தவர்களாக இருவரும் காணப்பட்டனர். அங்கு வைத்து துப்பாக்கிகளில் ரவைகளை நிரப்பினர். தங்கள் ஆடைகளைக் களைந்து உருமறைப்புச் சீருடைகளை (Camouflage) அணிந்து கொண்டு வெளியே வந்தனர்.

பளபளக்கும் நிஜத்துப்பாக்கி, சீருடை சகிதம் தம்மைத்தாமே பார்த்துப் பெருமிதம் கொண்டனர்.

வீடியோ தொடரில் தோன்றும் சாகஸ வீரனைப் போல—

எதிரிகளைச் சுட்டுப்பொசுக்கும் சினிமா வீரனைப் போல—

தயாராகினர். அவர்களது இலக்குகாட்டு விலங்குகளோ, பறவைகளோ அல்ல என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

தங்கள் சக நண்பர்களை, சிநேகிதிகளை, ஆசிரியர்களை வகுப்பறைகளுக்கு வெளியே வரவழைப்பதுதான் அவர்களின் அடுத்த திட்டமாக இருந்தது.

தீ மற்றும் ஆபத்து வேளைகளில் மாணவர்களை எச்சரித்து அவசரமாக வெளியேற்றுவதற்காக பயன்படுத்தப்படும் அபாயச் சமிக்ஞொலி எழுப்பும் கருவியை திடீரென ஒலிக்கச் செய்து மாணவரிடையே களோபரத்தை உண்டாக்கினர்.

## நல்லூர் தாஸ்

என்ன நடந்தது என்பது தெரியாமல் விழுந்தடித்துக் கொண்டு தத்தமது வகுப்பறைகளை விட்டு சிறுவர்களும் ஆசிரியர்களும் வெளியே சிதறி ஓடினர்.

ஆறாம் வகுப்பு அறையில் இருந்து வெளியேறி நடைபாதை ஊடாக கூட்டமாய்

> ....அமெரிக்கச் சிறுவர்கள் பள்ளிக்குப் புறப்படும் போது புத்தகப்பை, சாப்பாட்டுப் பெட்டி, பென்சில், பேனா என்பவற்றுடன் குண்டு நிரப்பப்பட்ட துப்பாக்கிகளையும் எடுத்துச் செல்வதால் பாடசாலை ஆயுதசாலை ஆகிறது.....

வேட்டைக்கு ஆயத்தமாகும் பெரியாள்களைப் போல—

தங்களைத் தாங்களே எண்ணிக் கொண்டபோது அவர்களது ஆனந்தத்துக்கும்—ஆர்ப்பரிப்புக்கும் — அளவே இருக்கவில்லை.

வெற்றிக்களிப்புடன் இருவரும் வானில் ஏறிப்புறப்பட்டனர்.

ஓடிவந்து கொண்டிருந்த கும்பல் மீது அன்றாவும், மிச்சலும் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அவ்வளவுதான். 'தொப், தொப்' என்று சிறுவர்களும் சிறுமியரும். கீழே வீழ்ந்தனர். அப்பகுதியே ரணகளமாகிறது. குண்டடிபட்டு கீழே வீழ்ந்தவர்கள் இரத்தம் சொட்டச் சொட்ட ஈனக்

தக் காரியத்தைக் செய்தனர் என்ற உண்மையை பாடசாலைச் சமூகத்தினர் முதலில் நம்ப மறுத்தனர். பின்னர் ஜோனஸ்பெரோ நகரிலும்... ஆர்கன்ஸாஸ் முழுவதும் தொடர்ந்து அமெரிக்கா எங்கும் செய்தி பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

''இரு சிறுவர்கள் புரிந்த கோரச் செயல்'' என உலகெங்கும் பத்திரிகைகள் தலைப்புச் செய்தி எழுதின.

அச்சமயம் ஆபிரிக்காவில் விஜயம் மேற்கொண்டிருந்த அதிபர் பில் கிளின்ரனுக்கும் தகவல் பறந்தது. அதிர்ந்து போனார் கிளின்ரன். ஆர்கன்ஸாஸ் அவரது சொந்த மாநிலம். அவர் அங்கு முன்னர் ஆளுநராக இருந்தவர். அங்குள்ள மக்களையும்,மாநிலத்தின் மூலை முடுக்குகளையும் நன்கு அறிந்தவர்.

ஆபிரிக்காவில் இருந்தவாறே தனது அதிர்ச்சியை வெளியிட்ட அவர் பலியானோரின் குடும்பத்தினருக்குத் தனது அனுதாபங்களையும் தெரிவித்தார். சம்பவம் குறித்து முழுவிசாரணை நடத்துமாறும் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வன்செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் கிளின்ரன் உத்தரவிட்டார்.

அச்சமயம் டெக்சாஸ் மாநிலத்தில் தங்கியிருந்த மிச்சல் ஜோன்ஸனின் தந்தையார் வானொலியில் செய்தி கேட்டதும் அங்கிருந்து அவசர அவசரமாக சொந்த ஊருக்கு விரைந்தார்.

மிச்சலும். அன்றாவுமா இதைச் செய்தார்கள்...? — சிநேகிதர்களால் நம்பவே முடியவில்லை.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து பொலீஸார் தடயங்களைச் சேகரித்தனர். ''30 — 06'' ரக—இராணுவத்தினர் பயன்படுத்தும்—ரைபிள் மூலம் மிச்சல் ஜோன்ஸன் ஐந்து சுற்று வேட்டுக்

களும் மலிந்த தென்பகுதிக் கலாசாரமே காரணம் என்றவாறான கருத்துக்கள் அமெரிக்காவில் பரப்பப்பட்டன.

ஆர்கன்ஸாஸின் கிராமப்புறங்களில் வேட்டைக்குப் போகும் மரபு வசதியான குடும்பங்களினால் ஒரு கலாசாரமாகப் பின்பற்றப் படுகிறது.

அன்றா கோல்டன் தனது சிறு பராயத்தில் துப்பாக்கி குழாயை அணைத்தபடி தோன்றும் படம் ஒன்றை 'நியூயோர்க் டெய்லி நியூஸ்' பத்திரிகை அதன் முன்பக்கத்தில் வெளியிட்டது.



அன்றா கோல்டன்
(சிறுவயதில்)

வேட்டையை பரிகசிக்கும் விதமாக ''கொல்வதற்காகப் பிறந்தவர்கள்'' (Born to kill) என்ற அடிக்குறிப்பு ஒன்றையும் படத்தின் கீழே அப்பத்திரிகை பிரசுரித்திருந்தது.

பெரும்பாலான ஆர்கன்ஸாஸ் மக்களின் மனங்களில் அந்தக் கருத்து பாதிப்பை ஏற்படுத்தியது.



சுட்டுத் தள்ளப்பட்ட ஆசிரியையும் சிறுமிகளும்.

ஆர்கன்சாஸ் (Arkansas) மாநிலத்தில் ஜோனஸ் பெரோ (Jonesboro) நகருக்கு அருகே லிற்றில் றொக் (Littie Rock) என்னும் இடத்தில் அவர்களது நடுநிலைப் பள்ளி உள்ளது.

மார்ச் 24 ஆம்திகதி, செவ்வாய்க்கிழமை பிற்பகல் நெருங்கும் வேளை பள்ளிக் கூடம் அமைதியாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

மிச்சலும், அன்றாவும் செலுத்தி வந்த வாகனம் பாடசாலையின் பின்புறமாக மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதியில் வந்து தரித்தது.

வாகனத்தை விட்டு இறங்கிய இருவரும் துப்பாக்கிகளைத் தயாராகப் பிடித்தபடி பற்றைகளுக்குள் [illegible] கிக் கொண்டு வேட் [illegible]

குரல் எழுப்பினர். இலர் 'உதவி...! உதவி...!!' எனக் குரலெழுப்பினர்.

மார்பில் ரவை பாய்ந்து சரிந்து குப்புறக் கிடந்தார் ஆசிரியை சனொன் ரைற் (வயது 32). உயிர் பிரிந்த வேறு நான்கு சிறுமியரின் சடலங்களும் ஆங்காங்கே இரத்த வெள்ளத்தில் கிடந்தன.

எங்கும் பதற்றம்... பரபரப்பு என்ன நடந்தது என்பது தெரியவர நீண்ட நேரம் பிடித்தது. அதற்குள் பொலீஸாரும் மீட்புப்பணியாளர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

காயமடைந்தவர்களை ஏற்றிக் கொண்டு அம்புலன்ஸ்கள் பறந்தன.

[illegible]

களைத் தீர்த்துள்ளான். அன்றா கோல்டனோ இலகு ரக 30 கலிபர் கார்பைன் துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளான். இருவரிடமும் மொத்தம் ஒன்பது துப்பாக்கிகள் இருந்துள்ளன.

பொலீஸ் விசாரணையின் பின் அன்றாவும் மிச்சலும் குடும்ப நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அமெரிக்காவில் வன்செயல்களுடன் தொடர்புடைய சிறுவர்கள் பெரும்பாலும் வசதியான நல்ல குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். அன்றாவும், மிச்சலும் கூட அத்தகைய குடும்பப் பின்னணியைக் கொண்டவர்கள்தான். ஆனால் ஆர்கன்ஸாஸ் சூட்டுச் சம்பவத்துக்கு வேட்டையும், துப்பாக்கி

ஜோன்ஸ்பெரே நகரத்தின் மேயர் கியூபேட் புறொடெல் அக்கருத்தை மறுதலித்தார்.

''.... வேட்டை என்பது ஒரு விளையாட்டு (Sports). மீன் பிடிப்பதைப் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் தந்தை, தாய், பிள்ளைகள் என அனைவருமே அதில் ஈடுபடுகிறார்கள். அது வன்முறை அல்ல...'' என்று அவர் கூறினார்.

அன்றா கோல்டனின் குடும்பத்தவர்களும் வேட்டைப்பிரியர்களே. அவனது தந்தை ஒரு துப்பாக்கி சுடும் வீரர். அன்றாவுக்கும் துப்பாக்கி சுடுவதற்கு அவர் பழக்கியுள்ளார். ஆனால் அவனிடம் வேறு பொழுதுபோக்கு ஆர்வங்களும் இருந்தன.

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னிச் சமர்

கண்டிவழிப் பாதையைக் காலடியிற் கொண்டுவரச்
சண்டை வழிதான் சரியென—மண்டைசொலத்
தாண்டிக் குளந்தாண்டித் தோண்டத் தொடங்கியோ
ராண்டின்று சென்றதே மாண்டு!

செருக்களங் காக்குஞ் சிறுத்தை வனத்துள்
கரத்தை செலுத்தும் கனவின்—பரிசாம்
கிரஞ்சிரமாய்ச் சேர்க்கின்றார் சென்னிபல எண்ணிக்
கரங்கரமாய்க் காணுதே காடு.

கன்னியருங் காளையருங் கைகோர்த்து மின்னலெனச்
சென்னிபல கொய்துவருஞ் செய்தியுடன்—பின்னடைவார்
என்றும்போல் இன்றுமவர் பின்னல் நடையுடன்
பின்னடைந்த பெற்றியையும் பேசு.

வன்னிச் சமர்தமக்கோர் சின்னச் சமரெனப்
பென்னம் பெரிதாய்ப் பெருமையாய்ச்—சொன்னவர்
கன்னத்தில் நீர்வடியக் காலனை மண்டியிட்டுச்
சுன்ன மிடிப்பாரே சோர்ந்து.

திக்குத் தெரியாத தென்வன்னிக் காட்டகத்தே
சிக்கி மடிகின்றார் சீக்கியர்போல்—அக்காவோ
பக்கத்து நாட்டின் பலத்தை மதியாதோர்
திக்கொன்றால் தேடுகிறார் தீது.

— அங்குசன் —

## சேவைகள் செய்வதே தேவை!

பாவைகள் போல்பல மனிதர்—இப்
பாரிலே வாழ்வதில் ஒருசிலர் புனிதர்
மாவிலே கிண்டிய பசைபோல்—ஒரு
மாற்றமும் இன்றியே அரைத்ததைப் பிசைவர்!

ஊரிலே வாழ்ந்தது தொட்டு—இந்த
உலகினைப் பிரிகிற உயிரினை விட்டு
சேரிடம் செல்வதன் முன்னே—கடும்!
சேவைகள் செய்வதே தேவை!

யாரிடம் உள்ளது ஓலை—இனி
யாருக்குப் பந்தமாய் இப்பெருஞ் சீலை?!
கூறுவோர் குறைகளைக் கேட்டு—தலை
குனியாமல் வைத்திடு அதற்கொரு வேட்டு!

செய்கையில் வேண்டும் உரங்கள்—வெறும்
சொல்லிலே சொல்பவர் உதவா மரங்கள்
கையொடு சேருங்கள் கரங்கள்—அது
காட்டிடும் இங்கொரு காவலின் சரங்கள்

ஊக்கமே வேண்டும் எம் உழைப்பில்—இது
உதவுமே எங்களின் வாழ்க்கைப் பிழைப்பில்
தாக்கங்கள் பெருகினால் தடையாய்—அதை
தாங்குக மனதிலே தடுத்திடும் படையாய்!

புகழுக்குச் செய்வதா சேவை ?—இல்லை
புதுமைக்குச் செய்வதா சேவை?—மன
மகிழ்வோடு செய்வதே சேவை—அதை
மறக்கத்தான் இல்லையே தேவை!

— கி. வாயுபுத்திரன்—

## அந்தி வானிலோர்...
## அமர் நடக்குதே?

அந்தி வானிலோர் அமர் தொடங்கிற்று
அய்யகோ என ஊர் அடங்கிற்று
வந்த ராத்திரிப் படைகளோ; பகலவன்
வாழ்ந்த நாட்டினை வளைத்துப் பிடித்திட
கண்ட சூரியன் களம் புகுந்துமே
கைகலந்திடக் கடலிலும் வானிலும்
கண்டல் ரத்தமும் ஊனும் வடிந்தது
கடலையது போர்ப்பறை கொட்டிற்று.

காகச் சுப்பர் சொனிக்குகள் போயின
கன்று பசுவெலாம் தரைப்படையாகின
மேக ''ராங்கிகள்'' சகிதமாய் ராத்திரி
மேற்கில் சூரிய தேசம் பிடித்திட
தாகத் தோடு தவழ்ந்துமே வந்தது
தரை கடலிலும் போரைத் தொடுத்தது
ஏகமாய்நின் றெதிர்த்திட்ட சூரியன்
ஏலாக் ஹிட்லராய் தற்கொலை செய்தது.

இருள் எழுந்து தன் ஆட்சிநடத்திட
இளவரசனாய் சந்திரன் வந்தது
கறுத்த மேகத்தைக் கட்டித் தழுவிட
கட்டளைகளை மதித்து நடந்திடப்
பொருத்த மானதால் சந்திரப் பொம்மையை
''போஸ்ற்'' கொடுத்துமே ராத்திரி விட்டது
குருடர் போல்விழி இருந்தும் பயனிலாக்
கூச்சத் தாரகைக் குடிகள் இருந்தனர்

மீண்டும் சூரியன் மிடுக்கோ டெழுவதும்
மேற்கில் மீண்டுமோர் யுத்தம் நிகழ்வதும்
நீண்டுபோகுதே நிறுத்தினால் என்னவாம்?
தரும வாழ்வினைச் சூதது கவ்வுதல்
தலை நிமிர்ந்தறம் மீண்டும் எழுந்திடல்
அருள் நலிந்திட அவித்தைகள் விஞ்சுதல்
ஆன்மசக்தியால் அருள்நிலை பெற்றிடல்
புரிய வேண்டுமிவ் வியற்கையின் காட்சிகள்
பூடகப்பொருள்; ஆழ்ந்துள கவியுளம்
தெரிந்திடா விடில் கவிதை சுவைக்குமோ
தேவை பற்றியே சொல்கிறேன் அப்பனே!

— ச. முகுந்தன் —

## பயங்கள்

'தலையில் சுமையுடன்'
தரிப்பிடமில்லா ஓட்டம்.
இடுக்கு வழியே தெரியும்
ஒளிக் கீற்றுகள்
—உற்சாகந்தரினும்
இருட்டுகளே எமை
பற்றிக் கொள்கின்றன!
பயங்களாக......

மணலாறு பாஸ்கரன்—

## விடியவில்லையே!

வைகறையில் விடிந்தும்
நான் துயில் எழும் போதும்
உன் நினைவுகள் மட்டும்
என் இதயத்தில்
விடியாமல் இருக்கின்றன.

—உயிரோவியன்—

## சங்கத் தமிழ்!

முப் பெரும் இடங்கள் தேர்ந்து
வேந்தாரம் மூவராட்சி
ஒப்பரும் காதல் வீரம்
ஒருங்கவே வளரும் காலை
செப்பரும் செந்தமிழை
செகதலம் என்றும் போற்ற
கைப் பொருளாக தந்தர்
முத்தமிழ் செல்வமன்றோ.

சங்கமே மூன்றமைத்து
தனிப் பெரும் தமிழையேத்து
பங்கமே கொண்டு பாடி
பார்மிசை பரவவைத்தான்
எங்கணும் எண்ணும் வாசம்
எழிலுற வீச வைத்து
மங்கள மாக எம்மை
மருட்டிடும் தமிழும் இதுவே!

பின்வரும் யுகங்களெல்லாம்
பீறிட்டு வளர்ந்த தமிழை
மன்னவன் பிரசை காத்தாற்
போலது காத்து நின்று
தென்னவன் வாழ்க்கை யெல்லாம்
செழிக்கவே வைத்த செல்வம்
பின்னவர் வாழும் வரையும்
பின்தொடர் செல்வமன்றோ.

எண்ணரும் நூல்கள் தோற்றம்
எழிதினில் என்றும் தோன்ற
கண்ணரும் சார்பாய் நின்றே
களத்தினில் வென்ற வீரம்
கண்ணிய கடமை சாற்றி
கனிவுற வைத்த செல்வம்
மண்ணிய வாழ்வுக் கெல்லாம்
மகா மருந்துமாமே!

— கமலினி குணம் —

## எச்சம்

சன்னம் பட்ட சுவர்
சிதைந்த யன்னல்
பாதிக் கதவு
முறிந்து விழக் காத்திருக்கும்
சலாகை மரங்கள்
தன் இஷ்டம் போல் உடைந்து சிதறிய
ஓட்டுத் துண்டுகள்
தையற்காரன் வெட்டியெறிந்த
துணிகள் போல்
பரவிக் கிடக்கும் கண்ணாடித்
துண்டுகள்
கால் படாத நிலத்தில்
பரவிப் படரும் நெருஞ்சி முட்கள்
குறோட்டன் சாடி உடைவினூடாக
எட்டிப் பார்க்கும் எருக்கலஞ் செடிகள்
'இன்ரநெட்' வலைப் பின்னல் போல
சிலந்தி வலைகள்
எல்லாம்
எங்கள் பரிணாம வாழ்வின்
எச்சங்கள் தான்!
என்றாலும்;
உடைந்த வீடுகளில்,
உயிர்கள் இல்லையென்று
யார் சொன்னது?
அந்தச் சுவர்களில் ஒட்டிக் கொண்டு,
சிலந்திகளை உண்டு உயிர்வாழும்
பல்லிகளைப் பாருங்கள்!
அவை இன்னமும் உயிர் வாழ்கின்றன!

— எஸ். குணேஸ் —

## எரிக்கின்ற கோடை வெயில்
## எப்போது போயகலும்?

கோடையென வந்து கொழுத்தி எமை எரித்துக்
காடாத்து கின்ற
கடும் வெப்பக் காலமிது
தீ யெடுத்து எங்கள் தேகத்தில் பூசுது!
வாய்வரண்டு தாகம் வதைக்கிறது.
வீதிகளில்
கால்வைக்க முடியாது! கரைந்துருகும் தார் எங்கள்
பாதத்தைப் பொசுக்கிறது!

காய்ச்சி வறுத்தெடுக்கும்...
அனல் வெக்கை ஊரின் அழகைக் கருக்கிறது!
'வேர்க்குரு' உடைந்து வெந்த இரண எரிச்சல்
தோலைத் துளைக்கிறது!
வருத்தம் பிடிக்கிறது!!
என்ன புழுக்கம்? சீ...
எப்போதும் ஒரேவேர்வை!
நிம்மதியாய் ராவில் நீட்டிப் படுக்க... என்றால்
கொல்லும் நுளம்பரக்கர்,
குடைந் தரிக்கும் எறும்புகள்!

இந்தமுறை சரியான வெய்யில்... அதனால்தான்
''வெள்ளைப்பூரான்கள்'' கூட
வெளிக்கிட்டு வந்தனவாம்.
''எல்நைனோ'' விளைவாம்; இது ஊரை எரித்திடுமாம்!
''பாலை வனமாகும் பார்'' என்று ஓர் அயலான்
சொன்னானே...
அது எம்மைச் சுறுக்காய் நெருங்குறதா?

மண்வெடித்துப் போச்சு! மடைதிறக்கும் நம் 'ஊற்றுக்
கண்' வரண்டதாச்சு!
கருகிக் கிடக்கின்றோம்!
முந்தியென்றால் ஆடிக்காற்று முகிழ்ந்துவந்து
வெந்த வெயிலகற்றும்,
வெக்கை தணித்து வைக்கும்:
இந்தமுறை காற்றும் மூசத் தொடங்கலை ஏன்?
காற்றுக்காய்க் காத்திருந்து
கருகித் துடிக்கின்றோம்.
என்ன வியர்வை? எப்போதும் ஒரே புழுக்கம்!
மண்டை பிளந்து நிற்கும்
மட... வெய்யில் என்றகலும்?

— த. ஜெயசீலன் —

## ஆனந்தம் வந்தது...?

எதுவரைப் போகுமோ அன்னிய மோகம்?
இழவைச் சுமப்பதா எங்களின் கோலம்?
விதியினை நொந்து துடிக்குமா மானம்?
விழிகளில் தீபிறந்தாடுமோ கூறும்?

முடவராய் நடக்கிறோம் தெருவினில் நாங்கள்
முறைக்கிற இரவுடன் பொருதுறோம்... போங்கள்!
''அடைவினை மீட்கிறோம்'' என்ற பொன்வாய்கள்
அடைவினில் வீழ்ந்தன! குனிந்தன தோள்கள்.

வயிறுகள் நிரம்பலை... வளர்ந்தது கொள்ளை
வசதிகள் வழமைபோல் வலம்வரவில்லை.
துயருடன் துவக்கதும் விடைபெறவில்லை.
'சுகயீனம்' குறையலை... தொடருது தொல்லை

கரையிலும் கடலிலும் தினசரி வேட்டு
கருகிய மலர்கள் மீட்கலை வோட்டு
வருங்காலம் ஊமையாய் வழிமாறும்போது
துரையப்பா அரங்கிலோ குலுக்கிற பாட்டு

சோக்கான படமெல்லாம் ஓடுறகாலம்.
சோடா, ஹீரோ ஹொண்டா வந்தெங்கும் பாயும்.
பேய்க்காட்டும் படம்பார்க்கப் பசிதாகம் போகும்
பேந்தென்ன? சொர்க்கந்தான் மூழ்குவோம் வாரும்!

— அருணன் —

## வெளிநாடு

முடியெல்லாம் நரைத்து முக்கால் கிழடாகி
நரைபோக மைபூசி நாடு வந்து
நாலுபேர் மதிக்கும் நல்லதொரு மாப்பிள்ளைக்கு
நாலுலட்சம் வேண்டாரோ சீர்?

அடுக்கடுக்காய் நாலு குமர் அப்பன் குடிகாரன்
அகதியாய் அண்ணனவன் அயல் நாட்டில்
சிறுகச் சேர்த்த பணம் சீதனமாய் போய்முடிய
வெறுங்கையாய் வந்திடுவான் தன் வீடு!

காணியீடுவைத்து கனடா சென்ற மகன்
மாதமோர் ஐம்பதென்று அனுப்பிவிட்டால்
மகளுக்கு பிறந்தநாள் வண்ணப் படப்பிடிப்பு
எடுத்திடுவாள் அம்மா இங்கு!

இரவு பகல் பாராமல் எந்தத் தொழிலினையும்
விருப்புடனே செய்த பின்னர் வேதனத்தை
அனுப்பும் மகனின் அவலத்தை அறியாமல்
அனைவருக்கும் அளந்திடுவாள் அன்னை!

வெளிநாட்டில் நின்று வீடு வந்த அண்ணனுக்கு
விதம் விதமாய் உணவுவகை தந்திடுவாள்
தரும் பொருளில் குறைவு கண்டால்
தங்கை அவள் மனமும் கொடியவிடமாகிவிடும்!

— திருமதி. இராஜினி சிவலிங்கம்—

# கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

அம்பாளைப்போல உடுத்துக்கொண்டு இந்த அம்பாள் தவறாமல் கோயிலுக்கு வந்துவிடுவாள். அவளைக் காணமுன்னே பூசை தொடங்கப் பூசகருக்கு மனம்வராது.

வெள்ளிக்கிழமை இந்தக்கோயில்; ஞாயிற்றுக்கிழமை அந்தக்கோயில்; இப்படித் தினசரி படையெடுப்பு. பக்திப் பிரவாகம். சனிக்கிழமை விரதம். எல்லாம் மோட்சத்தை தேடும் பயணம். இதனால் வீட்டிலோ நிலைமை நரகத்தை விடவும் கேவலம்.

'எல்லாம் செய்துவிட்டேன். கஞ்சியை வடிச்சிட்டு சோத்தை இறக்கலாம். கறியைக் கொஞ்சம் வத்தவிட்டு இறக்கினால்சரி' என்று அரை குறையில் அவியலை விட்டு ஆலயதரிசனத்துக்கு கிளம்பிவிட்டால் அவளை மனைவியாக அடையப் பெற்றவன் மனம் புழுங்கா மலாவிடும்? நாளை பிள்ளைகள் மதிக்குமா?

இப்படிப்போய் என்ன வரம் கேட்கிறார்களோ? எதைக்கேட்டாலும் — கிடைத்தாலும் ஊர் என்ன பேசும்?

அவளைக் கோயிலிலே காண்பது அருமை என்றால் தெய்வம் சினக்குமா? அல்லது ஊர்வசைபாடுமா? இரண்டுமே இல்லை.

கோயிலை நம்பிக்குடிசையை தவிக்கவிடலாமா? அரசனை—ஆண்டவனை நம்பிப் புருசனைக் கைவிடலாமா? தரிசனக் களைப்பில் வீட்டுக்கு வந்து நிம்மதியாக உறங்கிவிடலாமா?

குடும்பமே கோயில். பேண வேண்டிய தெய்வம் கணவனே என நினைத்து நிம்மதியாக வாழும் பெண்டிர் பெறும் மன நிம்மதி ஆலயத்தில் கிடைக்காது; அந்தத்தேவர் உலகிலும் கிட்டாது.

கிடைக்கும் பெருஞ் சிறப்பால் குடும்பமே புத்தேளிர் வாழும் உலகமாக—தெய்வத் தன்மையுடைய கோயிலாகச் சிறக்கும் என்றார் வள்ளுவர்.

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர்
பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

— 0058

(வாழ்க்கைத் துணை நலம்)

—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [02 - 05 - 1998 முதல் 08 - 05 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வெ சனி | சூ செ புத | | சந் |
| வி கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| | | | |

மாற்றம்:

புனர்பூசம் – மிதுன ராசியில் சந்திரன் 02 – 05 – 1998 இல் வரும். 05 – 05 – 1998 இல் மேட இராசிக்குப் புதன் மாறும்.

யுத்தத்தால் எல்லோருக்கும் அழிவுகள் மேலிடும். சலிப்பு வரும். பேச்சும் வரும். உலக அழுத்தம். ஐக்கிய நாடு சபையின் அழுத்தம் மேலிடும். காலமறிந்து செயற்படா விட்டால் நாட்டில் பெரும் அழிவுகள் ஏற்படும். இலங்கை-இந்திய அரசியலில் திசை மாற்றங்கள். இந்தியாவில் தென்திசை அரசியல் வாதியான ஜெயலலிதா—வடதிசை அரசியல்வாதியான சோனியா காந்திக்கும் ஓர் இரகசிய இணக்கம் ஏற்படும். நாட்டில் தீவிரவாதிகளால் அழிவுகள் மேலிடும். அமெரிக்காவின் உதவிகள், இந்தியாவின் எதிர்ப்புகள் நேரடியான மனக்குறைகளைக் கொடுக்கும். அமெரிக்கா — கிழக்கு நாடுகளில் கவனம் செலுத்தும். கிழக்கு நாடுகளில் செயற்கை, இயற்கைத் தாக்கங்கள் கொடுக்கும்.

மேடம்: உங்களுக்கு புதிய வழி ஒன்று பிறக்கின்றது. எந்தளவு போராட்டநிலை இருந்தாலும் உங்கள் காரியங்களில் கண்ணாக இருந்து செயற்படுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கேயாகும். தொழில் ஸ்தானத்தில் ஒய்வு ஒழிச்சலின்றி ஓடியாடித்திரிவீர்கள். உங்களை எவரும் வெல்ல முடியாது. தனிக்காட்டு ராஜா அல்லவா நீங்கள்? ஆனால் உடையதை விளம்பாமல் இருந்தால் பல காரியங்களை இலகுவில் சாதகப்படுத்துவீர்கள். காணி, பூமிப் பிரச்சினைகள் இருக்கும். கொஞ்சம் நிதானமாகப் போங்கள். உஷ்ண பீடைகள், அடிவயிற்று நோக்கள், முதுகு நோக்கள், வாயுத் தொல்லைகள் என்பன இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

இடபம்: உலகம் எங்களைப் பற்றி அதிகம் சிந்திக்கமாட்டாது. நாம்தான் எங்கள் குடும்பம் பற்றிச் சிந்திக்க வேண்டும். கால வெள்ள ஓட்டத்தில் நாமும் சேர்ந்து செயற்படவேண்டாமா? தொழில் இடத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். அயலவர்களுடன் அன்பாக இருக்கவும். எதிர்ப்பாலார் ஓடி ஓடி உதவுவார்கள். காணிபூமி இலாபம் அல்லது இடமாற்றம் ஏற்பட இடம் உண்டு. ரீ.வி, டெக், வானொலி என இசை ஆர்வத்துடன் செயற்படுவீர்கள். நெஞ்சில் நோ, சளி, கைகால் விறைப்புக் கொடுக்கலாம். தகுந்த வைத்தியம் செய்யச் சுகம் கொடுக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

மிதுனம்: உங்களை ஒரே இடத்தில் பிடிக்க முடியாது போலிருக்கின்றது. ஓடி ஓடித் திரிகிறீர்கள். நாலு காசு சேர்ப்பதானால் பரவாயில்லை. நாலு செய்திகளை அல்லவா நாடி ஓடித் தேடுகிறீர்கள்? தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகலாம். பக்கத்தில் இருப்பவர்கள் குத்திவிடலாம். தேவையற்ற சோதனை, வேதனைகளைத் தரலாம். கவனமாக இருக்கவும். மனந்திறந்து எதிர்ப்பாலாருடன் கதையுங்கள். உங்கள் வேதனை குறையும். மூட்டு—நாரிநோ, வயிற்றில் எரிவு, சலவருத்தம் ஏற்படலாம். சாப்பாட்டை நிதானப்படுத்தி உற்ற நேரத்தில் நல்லதைச் சாப்பிடுங்கள். அம்மாவைக் கொஞ்சம் கவனியுங்கள். அல்லது பக்கத்தில் இருக்கும் அம்மன், மாதாவைக் கவனியுங்கள். அதனால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி, புதன்.

கடகம்: என்னையா பயம்? உலகத்தில் பயந்து கொண்டிருந்தால் வாழமுடியுமா? எங்கள் குடும்பத்தைக் கவனிப்பது யார்? அதிகமாக கதைத்துக் காலத்தைக் செலவழியாமல் நாலுகாசு வர வழிபாருங்கள். நாலு மனிதர்கள் உங்கள் செயற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் காலம். தொழிலில் புதிய திட்டங்களைப் போட்டு உருவாக்குங்கள். நல்ல காலம் வரும்; நல்ல காலம் வரும் எனச் சொல்லிக் கொண்டிருந்தால் என்ன பலன்? உலகத்தில் நல்லது — கெட்டது நடக்கத்தான் செய்யும். அதையெல்லாம் ஆண்டவனிடம் விட்டுவிடுங்கள். நெஞ்சுச்சளி, கைகால் உளைவு, வயிற்று நோ, சலவருத்தங்கள் வருத்தலாம். வைத்திய உதவிகளை நாடுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்; சனி, புதன்.

சிங்கம்: உலகத்தைப் பற்றிச் சிந்தித்து அலுத்து விட்டதா? எனக்கு நல்லகாலம் இல்லையா? அட்டமத்துச் சனி வந்தால் எல்லாருக்கும் இப்படியா? எனக் கேட்கிறீர்கள். பானையில் இருந்திருந்தால் அகப்பையில் வரும் என்பார்கள். சனீஸ்வரனை வேண்டினால் அள்ளி அள்ளிக் கொடுப்பான். நாம் விதைத்ததைத்தானே அறுவடை செய்ய முடியும்! தொழில் ஸ்தானத்தில் உங்களைக் கண்டு எல்லோரும் மரியாதை செய்வார்கள் எனச்சிந்திக்க வேண்டாம். ஒரு சிலருக்கு கோபம் ஏன்? நேரிய வழியில் சென்றால் சிலருக்குப் பிடிக்காதுதானே. ஆலயத் திருப்பணி, தெய்வ வழிபாடு தொடரட்டும். பேசுபவர் பேசட்டும். எதற்கும் தயங்காதீர்கள். இருதய வியாதி, முதுகு நோ, தொண்டை வரட்சி, சூட்டு வருத்தங்கள் வரும். தகுந்த வைத்தியம் செய்யவும்; சுகம் வரும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.


## மகாதேவா ஜோதிடம்

கன்னி: கொஞ்சம் நிதானமாகச் செயற்படுங்கள். உங்களுக்கு எல்லாம் கிடைக்கும். சகோதரங்களைப் பேசாதீர்கள். எதிர்ப்பாலாருடன் அனுசரித்துப் போங்கள். தொழில் ஸ்தானத்தில் எல்லோரும் உதவிகள் செய்வார்கள். மேலதிகாரிகளால் நன்மைகள் கிடைக்கும். பொருள் விடயத்தால் அவதிகள் ஏற்படும். பல புதிய உத்திகளை தொழில் ஸ்தானத்தில் உருவாக்க அலை, அலையாக எண்ணங்கள் வட்டமிட்டபடி இருக்கும். காசு வேண்டுமே. கவனமாகச் செயற்படுங்கள். சளி, வலி கைகால் நோக்கள் [illegible]

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 48



சொற்சிலம்பம் இல. 48
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................
விலாசம்: ..........................................
..........................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 08 — 05 — 1998

**இடமிருந்து வலம்**

1. கிடைப்பது அரிது என்பதை வெளிப்படுத்த சரியான சொல். 4. தொடக்கம். 6. வாழ். 7. நாயில் ஒட்டி வாழ்வது. 8. நவக்கிரகங்களுள் ஒன்று. 10. அற்ப. 11. முதலில் சரிபார்த்தல். 13. போர் நிற்க இது பிறக்கும். 15. கிறு. 16. சூரியன். 17. காலம் தாழ்த்து. 19. ஒரு மாவு வகை. 21. கப்பம். 22. உடைந்த — அழிந்த — எச்சம்.

**மேலிருந்து கீழ்**

1. உளவாளி தேடுவது. 2. சீதையின் மகன்மாருள் ஒருவன். 3. வயிற்றைக்கிள்ளுவது. 4. பெண்ணல்ல. 5. நிறை. 7. திடம். 9. குளிர்மை. 10. காவலில் இருப்போர் உட்படுத்தப்படுவது இதற்கு. 12. கைத்திறமை. 13. முடிந்த பாட்டின் இறுதியை அடுத்தபாட்டின்முதலாய் யாக்கும் ஒரு பிரபந்தவகை. 14. தினசரி மாறுவது. 18. வேதம் என்றும் கூறுவர். 20. கணிகையாள்.

### சொற்சிலம்பம் 46 — முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. நேரு. 3. சிதை. 4. அதோ. 6. சதுரம். 8. மகள். 9. சமாதானம். 11. கம்சன். 12. பாதி. 14. சனி. 15. குவளை. 16. கம்பளம். 18. தபம். 20. ராம். 22. மின்மினி. 23. புரவி.

**மேலிருந்து கீழ்**

1. நேசம். 2. ருது. 3. சிம்மாசனம். 4. அகம்பாவம். 5. தோள். 7. ரசம். 8. மன. 10. தடன். 11. கனி. 13. திளை. 14. சப்தமி. 15. குளம்பு. 16. கம்மி. 17. பரா. 19. பண். 21. குவி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: மே. அமலன், ஆண்டு — 7, யாழ். மத்தியகல்லூரி.

★ இரண்டாம் பரிசு: சலோமி ரவீந்திரராஜ், 4ஆம் கட்டை, இருபாலைச்சந்தி, கோப்பாய்.

★ மூன்றாம் பரிசு: இ. சந்திரமௌலீசன், சரசாலை தெற்கு, சரசாலை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம் 47 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று ~ கடவுள் தத்துவம்!

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி நான்சி. அவளுடைய பிறந்தநாளன்று ஓர் அழகான வெள்ளித்தட்டு பரிசாகக் கிடைக்க வேண்டும் என்பது அவளுடைய விருப்பம். அதற்கு ஒருவாரம் முன்பாகவே, ''எனக்கு நிச்சயமாக அது கிடைக்கும். அதன் அளவு இவ்வளவு அங்குல விட்டமாக இருக்கும். அதன் கனம் இவ்வளவு கிலோ'' என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருந்தாள். பிறந்தநாள் வந்தது—அவள் சொல்லிக் கொண்டிருந்த அதே அளவு, அமைப்பு, கனம் கொண்ட வெள்ளித் தட்டொன்றை, அவளை மணக்க விரும்பிய வாலிபன் பரிசாகக்கொண்டு வந்து கொடுத்து விட்டான்!

பிரான்ஸ் நாட்டில் தனது ஒரே மகனைப் போர்க்களத்துக்கு அனுப்பி இருந்தாள் பிலாபிலோ என்ற அந்தப் பெண்மணி. அவன்படுத்துத் தூங்கிய கட்டிலிலேயே அவள் படுத்து உறங்குவது வழக்கம். அன்று இரவு இரண்டு மணிக்கு அவள் தூக்கத்திலிருந்து திடீரென்று விழித்துக் கொண்டாள். மகன் வந்து அவளைத் தொட்டு எழுப்பி, சொல்லிக் கொண்டதுபோல உணர்ந்தாள். மறுநாள் அவளுக்கு இராணுவத் தலைமை அலுவலகத்திலிருந்து தந்தி வந்தது. 'தங்களுடைய மகன் நேற்றிரவு இரண்டு மணிக்கு விமானம் வெடித்துச் சிதறி வீரமரணம் அடைந்தான் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று அதில் எழுதி இருந்தது!

காரியங்களை மனிதன் சாதாரணமாகச் சாதிக்கும் சக்திக்கு, அப்பாற்பட்டவை இந்த இரண்டும். இவற்றை நமக்குத் தெரிந்த பௌதிக சக்திகளைக் கொண்டோ, உணர்ச்சிகளைக்கொண்டோ மதிப்பிட்டுச் சொல்ல முடியாது. இவை இந்த எல்லைகளைக் கடந்தவை. மனிதன், அவனுடைய சிந்தனை இவற்றுக்கு அப்பாற்பட்ட ஒன்று இது போன்ற சம்பவங்களுக்குக் காரணமாக இருக்கிறது.

நம் கண்ணுக்கு புலப்படும், நம்மால் உணரப்படும் சில மட்டுமே உண்மை என்று பகுத்தறிவுவாதிகள் கூறுகிறார்கள். இந்த இரண்டினாலும் அளவிட முடியாத சில இருக்கின்றன.

எது புலப்படுகிறதோ அதைப் பௌதிகம் (Physics) அலசுகிறது. இவ்விதம் அளவிட முடியாததெைக் கூறுவது Meta Physics என்று இன்றைய விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சாதாரண உணர்வுகளை (Sensory) உணர்ச்சிகள் என்றும், இத்தகைய எல்லைக்கு உட்படாதவற்றை அபார உணர்வுகள் (Extra Sensory Perception) என்றும் சொல்கிறார்கள்.

## விஞ்ஞானம் - மெய்ஞ்ஞானம்

இந்து மதத்தின் வேதாந்த நூல்கள் இதற்கும் ஒருபடி மேலே போய், அங்கு உணரக்கூடிய நிலையை நமக்குக் காட்டுகின்றன. நாம் உலகத்தில் உணரும் சம்பவங்கள் ஒரு மனிதன் — ஓர் இடம்— ஒருகால அளவு என்ற மூன்று பரிமாணங்களைக் கொண்டு அளவிடப்படுகின்றன. இந்த மூன்றையும் கடந்த நாலாவது பரிமாணம் ஒன்று இருக்கிறது. அதை நமது முன்னோர்கள் உணர்ந்திருந்தார்கள். பிறர் மனத்தை அறிவது, வரப்போவதைச் சொல்வது, கூடுவிட்டுக் கூடுபாய்வது போன்றவை இந்த அடிப்படையில் அமைந்த சக்தியே ஆகும்.

பாகவத சிறுகதை

இந்தச் சிறுகதை ஸ்ரீமத் பாகவதத்தில் வருகிறது...

ஒரு பேரரசன் தன்னுடைய மகளைப் படைக்கும் கடவுளான பிரம்மாவிடம் அழைத்துப் போனான். ''என் பெண்ணுக்கு உகந்த கணவன் ஒருவனைத்தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்குத் தாங்கள் உதவ வேண்டும்!'' என்று கேட்டான். பிரம்மதேவர் சிரித்துக் கொண்டே சொன்னார். ''அரசனே! நீ இங்கு வந்து சேர்ந்த நேரத்தில் ஆயிரம் ஆண்டுகள் பூவுலகத்தில் கடந்து விட்டன. நீ திரும்பிச் செல்லும் போது நீ பார்த்த உலகம் முற்றிலும் மாறிப் போயிருக்கும். நீ அறிந்த மக்கள் எல்லோரும் மறைந்து போயிருப்பார்கள். அதனால் உனக்குத் தெரிந்தவர்கள் யாரையும் மனதில் வைத்துக்கொண்டு என்னிடம் மணமகனை யாசிக்காதே!''

அரசன் பூமிக்குத் வருகிறான். அவன் பார்த்த இடமும், அவனுக்குத் தெரிந்த மனிதர்களும்அடியோடு மாறி இருப்பதை உணர்கிறான். தெய்வத்தை வேண்டுகிறான். அவனுடையமகளைப் பலராமர் மணந்துகொள்கிறார்.

இந்தச் சிறுகதையில் இன்றைய பௌதிக உண்மை மறைந்து நிற்கிறது. டாக்டர் ஐன்ஸ்டீன் சொன்ன இடம், காலம் பற்றிய ஒப்பிடும் கொள்கையை (Theory of Relativity) இது நினைவு படுத்துகிறது. காலத்தை அவர் நாம் இப்போது தெரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு ஒப்பிட்டுச்சொல்லவில்லை. நிறம் மாறுபடுவதைப்போலக் காலமும் மாறுபடக்கூடும் என்றுசொன்னார் நமது ஓராண்டு என்பது, சூரியனைப் பூமிசுற்றிவரும் கால அளவு. புதன் என்ற கிரகம் இதேபயணத்தை88நாள்களில் செய்துமுடிக்கிறது. அதாவது நமக்கு 365 நாள்கள் என்பது அந்தக் கிரகத்தில் உள்ளவர்களுக்கு 88 நாள்கள்தாம்! நம்முடைய கால அளவு பரிமாணம் சூரியனுடன் ஒப்பிடும்போது, இப்படி மாறிவிடுகிறது. ஆகவே நிலையான காலம் என்பதோ, 'இப்போது' என்று குறிப்பிடுவதோ சரி இல்லை என்பது ஐன்ஸ்டீனின் கருத்து.

நமது வேதாந்த நூல்கள் இப்படிக்காலம், இடம்ஆகிய பரிமாணங்களைக் கடந்து செல்லக்கூடிய சக்தியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றன. அவை மனத்தின் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சித்த சக்தியால் சாத்தியமானவை. அவர்களுடைய விண்வெளிக் கப்பல் சித்தம் என்பதுதான். சூரிய மண்டலம், சந்திர மண்டலம், நட்சத்திர மண்டலம் என்று பிரயாணம் செய்து திரும்பியதாகப் புராணங்களில் வரும் குறிப்புகளும் இந்த அடிப்படையில் அமைந்தவையே. மனம் கால அளவுக்குக் கட்டுப்பட்டதல்ல; சித்தத்தின் சக்தி மகத்தானது.

சித்த சுத்தியுடன் செயற்படும் போது மனிதனின் சக்தி உயர்ந்து விடுகிறது. பல நூறு ஆண்டுகளில் சாதிக்கக் கூடியதை அவன் சில நாள்களில் சாதித்து விடுகிறான். அந்தச் சக்தி இல்லாத சாதாரண மனிதன் சோம்பலினால் சில நாள்கள் செய்யக் கூடியதை முடிப்பதற்குக் கூடப் பல ஆண்டுகளை எடுத்துக் கொள்கிறான். ஆகவே காலத்தை வெல்லும் சக்தி — அதன் எல்லைகளைக் கடக்கும் சக்தி —மனிதன் தனது மனத்தின் சக்தியை உணர்ந்து மலர்ச்சி பெற்று முழுமை அடைவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மனம் மேலான நிலைக்கு உயரும் போது, மனிதன் நிர்ணயித்த கால எல்லைகள் பின் தங்கிக் கீழே போய்விடுகின்றன. இதைத்தான் யோகியரும், தவமுனிவர்களும் நமக்கு உணர்த்தி இருக்கிறார்கள். புராணங்களில் பல ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்ததாகச் சொல்லப்படுவதன் உட்கருத்தும் இதுவே ஆகும்.

**- லட்சுமி -**

மனிதன் தனது எல்லைகள் தனக்கு வெளியே இல்லை — தனக்குள்ளேயேதான் இருக்கிறது — என்பதைக் கடைசியில் கண்டறிகிறான். இடம், காலம் என்ற மானுட எல்லைகளை, தன்னை உணர்ந்து தெய்விகத்தை உணர்ந்த மனிதன் வெல்ல முடியும் என்பதைப் புரிந்துகொள்கிறான். அதுவே சாசுவதம் என்பதைப் புரிந்துகொள்கிறான். இந்த நிலையை நமது இந்து மதநூல்கள் நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன. இந்த நிலையை அடைவதே மனிதனின் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

கடந்த காலம் — நிகழ் காலம் — எதிர்காலம் — ஆகிய மூன்று எல்லைகளையும் கடந்து மனம் இறைவனிடம் ஒன்றும் நிலையே இந்த நிலை என்று நமது வேதாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

(X ஆம் பக்கம் பார்க்க)

# உண்மையான மாணவன் யார்?

மிதிலையை ஆண்ட ஜனகர் ஒரு பழுத்த ஞானி. ஒரு சமயம் சுகப்பிரும்மம் அவருடைய நாட்டில் ஒரு காட்டில் வந்து தங்கி இருந்தார். இதைத் தெரிந்து கொண்ட ஜனகர் அவருடைய சீடராக இருந்து கற்றுக்கொள்ள விரும்பினார்.

''என்னால் அரண்மனைக்கு வர முடியாது. சுக போகங்களையும் நான் ஏற்க முடியாது. உமக்கு அவசியம் என்று தோன்றினால் நீர் காட்டுக்கு வந்து என்னிடம் கற்கலாம். சொல்லித்தர ஆட்சேபணை இல்லை!'' என்று கூறி விட்டார் சுகர். ஜனகர் சிறிதும் தயங்கவில்லை. தமது ஆடை ஆபரணங்களைக் கழற்றாமல் தினமும் வந்து காட்டில் முனிவரின் குடிலில் அமர்ந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினார்.

சுகரின் மற்ற சீடர்கள் தமது ஆசிரியரின் வைராக்கியத்தைப் பார்த்துப் பெருமை அடைந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. இவ்வளவு பேரும் எளிமையாக உடை அணியும் போது ஜனகர் மட்டும் ஆடை ஆபரணங்களைக் கழற்றி மாற்றிக் கொள்ளாமல் வந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள் வழக்கம் போல எல்லோரும் பாடம் கற்றுக் கொள்ள வந்து கூடியபோது ஜனகர் வந்து சேரவில்லை. சுகரும் பாடத்தை ஆரம்பிக்கவில்லை. அதை மற்ற சீடர்கள் கவனித்தார்கள். 'ஓ! ஜனகர் ஓர் அரசர் என்பதால் அவருக்குத் தனிமரியாதை கொடுக்கிறார் குருநாதர். நாமெல்லாம் காஷாயம் அணிந்து வரும்போது ஜனகர் மட்டும் ராஜ உடை தரித்துவர அனுமதி அளித்திருக்கிறார். ஆக நம்முடைய குருநாதரும் மற்றவர்களைப் போலத்தான்; பணத்துக்கும் பதவிக்கும்தான் அவர் மதிப்பு கொடுக்கிறார்.'—என்று எண்ணிக் கொண்டார்கள்.

அன்றையிலிருந்து அந்தச் சீடர்களுக்குக் குருநாதரிடம் மதிப்பும் மரியாதையும் குறைந்தது. அவர் பாடம் சொல்லும்போது கேட்பதிலும் கவனக்குறைவு ஏற்பட்டது. இதை சுகர் கவனித்து விட்டார். ஆயினும் அதை



வெளியே காட்டிக்கொள்ள விரும்பவில்லை. சீடர்களுடைய மனப்பக்குவத்துக்கு ஒரு சோதனை வைக்கத் தீர்மானித்தார்.

அன்று வழக்கம்போல எல்லோரும் பாடம் கற்றுக் கொள்ள வந்து அமர்ந்திருந்தார்கள். ஜனகரும் உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். அப்போது அவர்கள் அமர்ந்திருந்த இடத்தைச் சுற்றி மரங்கள் பற்றி

## பாபா கூறிய குட்டிக்கதை

எரியத் தொடங்கின. பாடம் சொல்லுவதை ஒரு கணம் நிறுத்தி விட்டு, ''மிதிலை நாட்டின் அரண்மனையில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாகப் பல இடங்களிலும் நெருப்புப் பரவ ஆரம்பித்திருக்கிறது!'' என்று கூறி விட்டுப் பாடம் சொல்லுவதைத் தொடர்ந்தார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் சீடர்களுக்குப் பயம் பிடித்து [illegible] ஒருவனுக்குத் தனது வீட்டைப்பற்றிய கவலை ஏற்பட்டது. இன்னொருவனுக்குச் சாப்பாட்டுக்காகத் தானியங்களைச் சேகரித்து வைத்திருந்த களஞ்சியம் பற்றிய கவலை உண்டாயிற்று. வேறொருவன் தனது உடைமைகளையும் செல்வத்தையும் பற்றி நினைத்துக் கொண்டான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கவலையுடன் அங்கிருந்து மெல்ல நழுவி ஓடிவிட்டனர். மரத்தடியில் சுகரும் ஜனகரும் மட்டுமே இருந்தனர். பாடம் தொடர்ந்தது. சுகர் அமைதியாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஜனகர் ஆழ்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்...

சீடர்கள் ஓடிப்போய்ப் பல இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள். எங்கேயுமே நெருப்புப் பற்றி எரியவில்லை; எந்த உடைமையும் தீக்கு இரையாகவில்லை. அவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. திரும்பி வந்தவர்கள் ஜனகர் அமைதியாகப் பாடம் கேட்டுக்கொண்டிருப்பதைக் கவனித்தார்கள். எல்லாம் குருநாதர் தங்களைப் பரீட்சை செய்ய வைத்த சோதனையே என்று புரிந்து கொண்டார்கள்.

சுகர் கூறினார்: ''ஜனகர் ஓர் அரசர். அவர் அந்தப் பதவியைத் துறக்கவில்லை. ஆயினும் அவர் சாஸ்திரம் கற்க வந்த சீடர். அந்த நினைவையும் அவர் மறக்கவில்லை. ஆகையால் இங்கே வரும்வரை அரசரைப் போலவே வந்தார். அந்த உடையிலேயே இருந்தார். ஆனால் இங்கே வந்து அமர்ந்து கொண்டதும், அவருக்கு அரண்மனை நினைவு முழுவதும் அறவே போய் விட்டது. ஒரு சீடராக மட்டுமே இங்கு அமர்ந்துபாடம் கேட்டார்.

''உங்களைச் சோதிக்கவே நான் மிதிலையில் தீப்பிடித்திருப்பதாகக் கூறினேன். இங்கே கானகத்தில் தீப்பற்றி எரிவது போன்ற மாயையும் உண்டாக்கினேன். அதைப் பார்த்ததும் நீங்கள் அவ்வளவு பேரும் தத்தம் உடைமைகளைப் பற்றியே எண்ணிக்கொண்டு ஓடினீர்கள். பாடத்தைப் பற்றிய நினைவு உங்களுடைய மனத்தை விட்டுப் போய்விட்டது.

''ஆனால் ஜனகர் சிறிதும் கலங்கவில்லை. அரண்மனையே பற்றி எரிந்தாலும் அவர் கவலைப்படவில்லை. பாடத்தைத் தவிர வேறு எதிலும் அவருடைய கவனம் திரும்பவில்லை. அதைக் கவனித்தீர்களா? ஜனகரிடம் நான் பாரபட்சம் காட்டியதாக நினைத்தீர்களே? உண்மையான, சிரத்தை மிகுந்த மாணாக்கன் யார் என்பதைப் புரிந்து கொண்டீர்களா?''

எல்லோருக்கும் புரிந்தது; எல்லாம் புரிந்தது. அவர்கள் எல்லோரும் வெட்கித் தலைகுனிந்தார்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மணம் மாற முன்...

(VI ஆம் பக்கத் தொடர்)

பேஸ்போல் விளையாட்டு. பாடசாலை பாண்ட் அணி என்பவற்றில் அன்றூவுக்கு ஆர்வம் அதிகம். கொம்பியூட்டர் விளையாட்டுக்களில் அலாதியான விருப்பம் உடையவன்.

''ஈ—மெயில்!'' மூலம் பலருக்கு கடிதங்களை அனுப்புவான். அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகைக்கும் கடிதங்களை அனுப்பி அவற்றுக்கு அங்கிருந்து பதில்களையும் பெற்றுள்ளான்.

அவ்வாறாயின் அந்தக் கொடூரச் செயலைப் புரிய அன்றூவைத் தூண்டியது எது?

குழந்தைகளிடம் உள்ள மனித நேயத்தை அவர்கள் சிறு பிராணிகளை எவ்வாறு நடத்த முற்படுகிறார்கள் என்பதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம் என உடலியலாளர்கள் கூறுகின்றனர். இது விடயத்தில் அன்றூவின் போக்கை அவனது அம்மம்மா மெச்சுகிறார்.

''அன்றூ மென்மையானவன். பறவைகளையும், அணில்களையும் அவன் ஒருபோதும் துன்புறுத்தியதில்லை. அவற்றைப் பிடித்து பிரியமுடன் வளர்க்க ஆசைப்படுவான்'' — என்கிறார் அவர்.

அப்படியானால் சக சிறுமிகளைச் சுட்டுப் பொசுக்க அன்றூவால் எப்படி முடிந்தது?

மிச்சல் ஜோன்சனைப் பொறுத்தவரை அவனது மன நிலையும் புதிராகவே உள்ளது. சமீப நாள்களாக அவனிடத்தில் ஒரு மாறுதலை அவதானித்ததாக அவனுக்கு நெருக்கமான நண்பர்கள் கூறுகின்றனர்.

அவனுக்கு ஒரு கோஷ்டியுடன் தொடர்பு இருந்தது. சிகரெட், போதைப் பழக்கங்களும் அவனிடத்தில் ஏற்பட்டிருந்தது.

பிரியத்துக்குரிய சிநேகிதி ஒருத்தி (girl friend) தன்னை நிராகரித்ததால் மனமுடைந்து காணப்பட்டான். தன்னைத் தானே சுட்டுக் கொள்ளவும், தூக்கில் தொங்கவும் முயன்றுள்ளான்.

''...குளியல் அறைக்குள் சென்று நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தான். பெண் பிள்ளைகள் மீது கோபமுற்றவனாகக் காணப்பட்டான். தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் கூறினான்...'' — அவனது நண்பன் ஒருவன் வெளியிட்ட தகவல் இது.

அவ்வாறாயின் 13வயதான அந்தச் சிறுவனுக்கு நேர்ந்த காதல் தோல்விதான் அவனது வன்முறைப் போக்கிற்குக் காரணமா?

மிச்சலும் மிகவும் மென்மையானவன். ஆனால் அவனது வீட்டு நிலைமை ஒருவித வெறுமை உணர்வை அவனிடத்தில் ஏற்படுத்தியது. அவனது பெற்றோரின் நெருக்கமின்மை, நிஜமான அன்புக்கான தாகத்தை அவனிடத்தில் உருவாக்கி விட்டிருக்கக் கூடும்—என அவனது மறுபக்கத்தை வெளிப்படுத்துகின்றனர் சிலர்.

இதில் எது உண்மை...... எது தவறு?

மிச்சலைப் போன்றே மன முறிவு ஏற்பட்ட ஏராளமான சிறு பிஞ்சுகளை அமெரிக்கப் பள்ளிகளில் தாராளமாகக் காணலாம்.

அமெரிக்காவின் அண்மைக் கால வரலாற்றில் ஆர்கன்ஸாஸ் சூட்டுச் சம்பவம் முதலாவது சம்பவம் அல்ல; சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வன்செயல்கள் அடிக்கடி அங்கு இடம் பெறுகின்றன. கடைசியாக நடந்த இந்தச் சம்பவம் அவை தொடர்பான கவலைகளைப் பெரிய அளவில் கிளப்பி விட்டிருக்கின்றன.

வன்முறைக் காட்சிகள் நிறைந்த சினிமா, ரீ.வி. தொடர்கள், வீடியோ விளையாட்டுக்கள் (Video games), மலிவாகக் கிடைக்கும் துப்பாக்கிகள் இவற்றில் ஒன்று அல்லது அனைத்துமே சிறுவரிடையே வன்முறை உணர்வைத் தூண்டி விடுகின்றன என்று காரணம் கூறப்பட்டாலும் மாறிவரும் சிறுவர்களின் மனப்போக்கு உளவியல் நிபுணர்களுக்குக்கூடப் புரியாத புதிராகவே உள்ளது.

வயதுக்கு மீறிய உடல் முதிர்ச்சி, மன முதிர்வு, தங்கள் உணர்ச்சிகளை அடையாளங் கண்டு அங்கீகரிப்பதில் பிறர் காட்டும் அலட்சியம், குடும்ப உறவுகளுக்கு இடையே அதிகரித்து வரும் இடைவெளி, மனமுறிவுகள் என்பன சிறுவர்களைத் தங்கள் தங்கள் சுய அடையாளங்களை இனங்காண முடியாமற் செய்து விடுகின்றன. அவர்கள் தங்களை அடையாளங் காண — அர்த்தப்படுத்த — வீரவீர, சாகஸ, வன்முறை வழிகளை நாடுகின்றனர் என்கிறது ஓர் ஆய்வு.

புத்தகம், பென்சில் என்பவற்றுடன் ஆரம்பத்தில் பொம்மைத் துப்பாக்கிகளையும் பள்ளிக்கு எடுத்துச் சென்ற சிறுவர்கள் இப்போது நிஜத் துப்பாக்கிகளில் குண்டையும் நிரப்பிக் கொண்டு வருகிறார்கள். இதனால் பாடசாலைகள் ஆயுத சாலைகள் ஆகுகின்றன.

அண்மையில் நியூயோர்க் நகரின் ஆரம்பப் பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவன் உண்மையான துப்பாக்கிக்குள் ரவைகளை நிரப்பி எடுத்துச் சென்றுள்ளான். பாடசாலை பாதுகாப்பு அலுவலர்கள் அது விளையாட்டுத் துப்பாக்கி என நினைத்து அவனை உள்ளே அனுமதித்தனர். பின்னர் சக மாணவன் ஒருவன் கொடுத்த தகவலின் பேரிலேயே அந்த மாணவனிடம் இருந்து துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது.

அந்தத் துப்பாக்கியைதான் வீட்டில் உள்ள புல்வெளியில் கண்டெடுத்ததாகவும், தனக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வரும் மற்றொரு மாணவனை பயமுறுத்துவதற்காகவே அதனைத்தான் எடுத்து வந்ததாகவும் அந்த மாணவன் விசாரணையின் போது தெரிவித்தான்.

துப்பாக்கி வைத்திருந்ததாக அவன் மீது குடும்ப நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. பாடசாலையில் இருந்தும் அவன் இடை நிறுத்தப்பட்டான்.

இத்தகைய துப்பாக்கிக் கலாசாரத்தில் இருந்து பாடசாலைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை அமெரிக்க கல்வி அமைச்சின் புள்ளி விவரங்களுக்கான தேசிய நிலையம் வெளியிட்டுள்ளது.

அந் நடவடிக்கைகளில் கடைசியாகச் சேர்க்கப்பட்டிருப்பது மாணவர்கள் மீதான குண்டுப்பரிசோதனை. இன்டியானாபொலிட் என்ற நகரில் உள்ள ஒரு பாடசாலையில் 6 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை வகுப்பறைக்குள் அனுமதிக்க முன்பு ''மெற்றல் டிக்ரெற்றர்'' என்னும் குண்டு பரிசோதிக்கும் கருவி மூலம் சோதனை செய்கின்றனர். சிறுவர்கள் மீதான இத்தகைய நடவடிக்கை உலகிலேயே இங்கேதான் முதல் முறையாக இடம்பெறுகிறது. ★

# காலத்தை வென்ற...

(IX ஆம் பக்கத் தொடர்)

நடந்தது — நடப்பது — நடக்கப்போவது — இந்த மூன்று நிலைகளைத்தான் மனதினால் சிந்திக்க முடிகிறது.

இதுவே மனம் நினைத்துப் பழகிய முறை. இந்த எல்லைகளை வைத்தே அது எந்த அநுபவத்தையும் கணக்குப் போடுகிறது. ஒரு துயரமான சம்பவத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் ஒருவனை எடுத்துக் கொள்வோம்... ''ஒரு நாள் போவது ஒரு யுகம் போலத் தோன்றியது!'' என்கிறான் அவன். ஒரு மகிழ்ச்சி நிறைந்த அனுபவத்தை ஏற்கும் இன்னொருவனை எடுத்துக் கொள்வோம்... ''ஒரு மாதம் ஒரு மணி நேரமாக ஓடி மறைந்து விட்டது!'' என்று அவன் சொல்லுகிறான். மனத்தின் உணர்ச்சியைப் பொறுத்தே காலத்தின் அளவும் இருக்கிறது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

இந்த அடிப்படையில், நமது அனுபவம் சுகம், துக்கம் என்ற எல்லையைக் கடந்து மனம் அமைதியாக அசைவின்றி இருக்கப் பழகி விட்டால் மனம் இந்த மூன்று எல்லைகளையும் கடந்து அடங்கி விடுகிறது என்ற தத்துவத்தையும் புரிந்து கொள்ளலாம். இவை எல்லாவற்றுக்குமே பின்னணியாக இருக்கும் சச்சிதானந்த சொரூபமான இறைவனை உணரும்போது மனம் இப்படி அடங்கிப்போய் விடுகிறது. இறைவன் எந்த மாறுதல்களுக்கும் உட்படாதவன். ஆகையால் அவனிடம் ஒன்றி விடும் மனமும் மாறுதல்கள் என்ற நிலையைக் கடந்து சாசுவதமான, நிரந்தரமான பக்குவத்தை எட்டிவிடுகிறது. ''அகம் பிரம்மாஸ்மி — கடவுள் உன்னுள்ளேயே இருக்கிறார் — அதை நீ உணர்ந்தால் நீ அவருடன் ஒன்றி விடுகிறாய்!'' என்பது நமது மதம் போதிக்கும் தத்துவம். அப்படி ஒன்றி விடும் மனமும் அவரைப் போலவே, மாறுதல்களைக் கடந்து வெல்லக்கூடிய சாசுவதமான நிலையை அடைந்துவிடுகிறது.

அதனாலேயே மாறக்கூடிய மற்ற எல்லாவற்றையும் மாயை என்றும், அநித்தியம் என்றும் நமது வேதாந்த நூல்கள் கூறுகின்றன.

இன்றைய விஞ்ஞானம் கண்டுள்ள தத்துவமும், அன்று நமது மெய்ஞ்ஞானம் உணர்த்திய தத்துவமும், ஒரே அடிப்படையை இப்படி இரண்டு கோணங்களில் காட்டுவதை நாம் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா? ★

# (சினிமா) ...

(IV ஆம் பக்கத் தொடர்)

கெமரூன் எடுக்கவில்லை.

கடலில் இரண்டரை மைல் ஆழத்தில் அமிழ்ந்துள்ள டைட்டானிக் கப்பலை 12 தடவைகள் சென்று நேரில் பார்த்து ஆராய்ந்தது வந்தே படத்தை அவர் எடுத்திருக்கிறார். இதற்கே இரண்டு கோடி அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. இது தவிர ரஷ்யாவிலிருந்து கடனாகவும், வாடகைக்கும் பெற்றுக் கொண்ட நீர் மூழ்கிக் கப்பல்களையும், நவீன கமராக்களையும் பயன்படுத்தி படம் பிடித்து, சில உண்மையான காட்சிகளையும் இணைத்திருக்கிறார்.

இதுதவிர நடிகர், நடிகை தேர்வுக்காக அவரின் உதவி டைரக்டர்கள் அலைந்த அலைச்சல், வாங்கிய ஏச்சும், பேச்சும் நடிகர்கள் கெமரூனின் கடும் போக்கினால் பட்ட அவமானங்கள் எல்லாம் இன்று மறக்கப்பட்ட நிலையில் வெளிநாடுகளில் மட்டுமல்ல இலங்கையில்கூட சக்கைபோடு போடுகின்றது —'டைட்டானிக்'.

இது கெமரூனுக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி என்றே சொல்லவேண்டும்.

-மூலம்;- மதன்-

# மஞ்சள் மகிமை

மஞ்சள் ஒரு மங்கலப் பொருள். அதே நேரத்தில் அது மருந்தாகவும் பயன்படுகின்றது. மஞ்சள் பூசிக் குளித்தால் முகத்தில் பருக்கள் தோன்றாது.

மஞ்சளை நீரில் கரைத்து இல்லமெங்கும் தெளித்தால் மங்கலம் பெருகி இலட்சுமீகரம் துலங்கும்.

வாசலில் கோலம் போடும் போது மஞ்சள் மாவையும் கலந்து இட்டால் அதில் புதுப் பொலிவு விளங்கும்.

பசுப்பாலுடன் மஞ்சளைச் சேர்த்துக் காய்ச்சிப் பருகினால் இருமல், சளி என்பன அகன்று விடும். கை, கால் நோக்களுக்கும் சதை நெரிவுகளுக்கும் மஞ்சள் மாவுடன் நல்லெண்ணெயைக் கலந்து பூசினால் நோவு மாறிவிடும். ★

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

பாவியுங்கள். எல்லாம் சரியாகி விடும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

**துலாம்:** 'எல்லோரும் வாழ வேண்டும் என நான் யோசிக்கின்றேன். எனக்கு உதவுபவர்கள் ஒருவரும் இல்லை' எனச் சிந்திக்கிறீர்கள். ஓய்வில்லாமல் ஓடி ஓடித்திரிந்து பொறுமையாகச் செயற்படும் நீங்கள் அடிக்கடி கோபித்துக் கொள்ளாதீர்கள். எதிர்ப்பாலாரின் பேச்சுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பல புதிய திட்டம், உருவாக்கம், பேச்சு வார்த்தைகளால் நன்மைகள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். அயலவர்களுடன் எதிர்க்காமல் நடவுங்கள். கலைத்துறை ரீ. வி., சினிமா என காலத்தை செலவு செய்வீர்கள். சளி, விறைப்பு, நரம்பு, மர்மவியாதிகள் வருத்தலாம். வைத்திய உதவிகளை நாடுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**விருச்சிகம்;** நீங்கள் எல்லாவற்றையும் கவனித்தபடி இருப்பீர்கள். எந்தளவுக்கு பொறுமையாக இருப்பது என அடிக்கடி சிந்திப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் சுற்ற உள்ளவர்களால் மனக்கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும், ஊக்கத்தைப்பொறுத்து உயர்வுகள், நன்மைகள், பொருள் வரவுகள் கொடுக்கும். சக்தி, யுக்தி, புத்தி ஒரே நேரத்தில் அலை பாய்ந்தபடி இருக்கும். தெய்வ ஆலயங்களில் உங்களை அடிக்கடி காணலாம். எதிர்ப்பாலாரை அனுசரித்துப் போகவும். கிருமித்தாக்கம், திடீர் விபத்து, காயங்கள், உள் உறுப்புக்களில் வருத்தங்கள் என்பன இக்காலங்களில் ஏற்படும். வைத்திய உதவிகள் நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

**தனுசு:** கலகலப்பாக இருக்கிறீர்கள். வெளி நாட்டிலிருந்து காசு வந்திருக்கின்றதா? அல்லது சுபமங்களப் பேச்சா? வீட்டில் கொஞ்சம் மாற்றம் தெரிகிறது. எல்லாவற்றையும் நாலுபேர் தெரிய சொல்லிவிடுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். உங்களைப் பார்த்து ஒரு சிலர் பொருமியபடி இருக்கிறார்கள். கவனம். பல புதிய திட்டங்கள் போடுவீர்கள். ஒரு சில விசயங்கள் நடக்கும். இடுப்பில் நோ, கைகால் உளைவு, குடல், மலவருத்தம், உஷ்ண வியாதிகளால் வருந்துவீர்கள். ஆலயங்களுக்கோ அன்று ஆஸ்பத்திரிகளுக்கோ போய்வருவீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

**மகரம்:** கொஞ்சம் வெளிச்சமாக இருக்கின்றது. காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளுங்கள். மனஉறுதியோடு செயற்படுங்கள்; வெற்றி பெறுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். நன்மை தீமைகள் மாறி மாறி நடக்கும். நரம்புத்தளர்ச்சி, தோல் வருத்தங்கள், கைகால் உளைவு, வயிற்றுக் கோளாறு வருத்தம் என்பன வருத்தலாம். வைத்திய உதவிகளை நாடுங்கள். உங்கள் உறுதி நிலையிலேயே காரியங்கள் இக்காலத்தில் நன்மைகளைத் தரும். புத்திரர், சகோதரங்கள், எதிர்பாலார்கள் என்போர் நன்மைபெற பல காரியங்களைச் செய்வீர்கள். பொருள்கள் சிலருக்கு மறையலாம் கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

**கும்பம்:** என்ன கூர்ந்து பார்க்கிறீர்கள்? எதிரிலிருப்பவர் உண்மை சொல்லுகிறார்களா அல்லது பொய் சொல்லுகிறார்களா என்று எண்ணுகிறீர்களா? மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்ற நிலை. ஏழரைச் சனியால் பல கஷ்டங்களைப் பட்ட உங்களுக்கு மூன்று மாதத்தில் கொஞ்சம் மாற்றம் வரப்போகின்றது. காரியனுகூலங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் நடக்கும். இரத்த அழுத்தம், நரம்பு கிருமித்தாக்கம், கைகால் வலி, உஷ்ணபீடைகள் என்பன ஏற்படச் செய்யும். இறைவனைப் பேசுங்கள்; ஏசாதீர்கள். பரந்தாமன் பாதம் படியேறி வாருங்கள். அந்தோனியார் பீடம் போய் பாருங்கள். அமைதி அங்கு காணுவீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

**மீனம்:** எங்களுக்கு விடிவே இல்லையா? இப்படித் துன்பப்பட என்ன பாவம் செய்தோம்? எத்தனைபேர் எவ்வளவைச் செய்கிறார்கள். நாங்கள் எதைச் செய்தாலும் விடிவே இல்லையே என்று ஏங்குகிறீர்கள் எதற்கும் ஆண்டவன் சந்நிதானங்களுக்கு அடிக்கடி போய் வாருங்கள் நன்மைகள் வரும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி மறையாதீர்கள். மேலதிகாரிகளின் கண்டிப்பு வேதனை தரும். காசு பொருளில் கவனம். கள்வர் பயம் உண்டு. வயிற்றில் வருத்தம் உஷ்ணபீடைகள், சவித் தொல்லை, நரம்பு வருத்தம், வரலாம். அடிக்கடி யோசிக்காதீர்கள். அலைச்சல் கொடுக்கும். அம்மனையும், மாதாவையும் வழிபட்டு வாருங்கள். பல நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வெள்ளி.

# பவித்திராவை..-

(V ஆம் பக்கத் தொடர்)

சகிக்கமுடியாமற் போகவே உள்ளே போய் மேசையில் குழம்பிக் கிடந்த காகிதத் தாள்களை எடுத்து வந்து விசிறினேன்.

''பாருங்கோ ரெண்டு பேரும் வடிவா. நான் புதுசா ஒரு துப்பறியும் கதை எழுதுறன். அதிலை வாறவள் தான் பவித்ரா. அவளைக் கொலை செய்தாத்தான் துப்பறியலாம். அதுக்காகத் தான் என்ரை கதையிலை வாற பவித்ராவைக் கொலை செய்யப்போறன். போங்கோ ரெண்டு பேரும். இனியாவது நிம்மதியா இருக்க விடுங்கோ''

இருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

நான் உள்ளே வந்து அந்தக் காகிதங்களைக் கிழித்துப் போட்டேன். இனிமேல் இந்த ஜென்மத்தில் கதை எழுதமாட்டேன்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆனையை அடக்கிய அரியாத்தை
# சபையையும் அடக்கிய விந்தை!

உண்மையாகவே யானை ஒன்று மேடைக்கு வந்து விட்டதோ என்று எல்லோரும் எண்ணும்படியாயிற்று.

கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இளங் கலைஞர்மண்டபத்திலே இது இடம்பெற்றது.


செல்லையா மெற்றாஸ் மயில் தயாரித்து மேடையேற்றிய ''வேழம் படுத்த வீராங்கனை'' என்னும் நாட்டுக் கூத்திலேயே இந்த யானை மேடையிலே தோன்றியது.

''வேலப்பணிக்கன் ஒப்பாரி'' என்னும் வன்னி நாட்டு நாட்டார் கதைப் பாடலை ''ஆனை அடக்கிய அரியாத்தை'' என்னும் நூலாக மெற்றாஸ் மயில் 1994 ஆம் ஆண்டிலே வெளியிட்டார். அந்நூலிலே அவர் அந்நாட்டார்கதை தொடர்பாகக் குறிப்பிட்ட புதிய எண்ணக்கருக்களையும் உள்ளடக்கி இவ்வாண்டு ''வேழம் படுத்த வீராங்கனை'' என்னும் இந்நாட்டுக்கூத்தினை உருவாக்கித் தயாரித்து நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார்.

தொடங்கி முடியும் வரையும் மிக அழகான — விறுவிறுப்பான — ஆட்டங்களுடனும் பாடல்களுடனும் கூத்து இடம்பெற்றது. சின்ன வன்னியனாக வேடமிட்ட மெற்றாஸ் மயில் மேடை முழுவதையும் தன் வசப்படுத்திக் கொண்டார். அவர் வயதுக்கு விஞ்சிய செயற்பாடாக அவருடைய துரித ஆடல் அமைந்தபோதிலும், அது இளைஞர்களுக்கு உற்சாகமூட்டுவதாக அமைகின்றது. மந்திரியாகத் தோன்றிய கண்ணன் தைரியநாதன் தாளக்கட்டுத் தவறாமலும் அழகாகவும் ஆடினார். புதுநாச்சன் வேடத்திலே தோன்றிய திருமதி ப.சண்முகலிங்கமும் அரியாத்தையாக தோன்றிய தாட்சாயினியும் நீல கேசரியாகத் தோன்றியஜெய சுதாவும் தங்களுடைய ஒய்யாரமான ஆட்டங்களாலே மேடைக்கு அழகூட்டினர். வேலப்பணிக்கனாக வந்த தயாநிதியும் நீலப்பணிக்கனாக வந்த ஜோண்சன் ராஜ்குமாரும் அவர்களுடைய குழுவினரும் அரசசபை நோக்கி வேகமாகச் செல்லும் காட்சி நன்றாக நெறியாள்கை செய்யப் பட்டிருந்தது. அவர்களுடைய ஆடல் சபையோரை வெகுவாகக் கவர்ந்தது.

## ''வேழம்படுத்த வீராங்கனை''
### ஆட்டநாட்டுக் கூத்து விமர்சனம்

பேராசிரியர்
**அ. சண்முகதாஸ்**
(கலைப்பீடாதிபதி.
யாழ். பல்கலைக்கழகம்)



மேடையில் தோன்றும் அரியாத்தையும் ஆனையும்

நாட்டுக் கூத்தினுடைய முதுகெலும்பு ஆடலாகும். ''வேழம்படுத்த வீராங்கனை'' நாட்டுக் கூத்திலே ஆடல் மிக அற்புதமாக அமைந்தது. எல்லோரும் மிக லாவகமாக ஆடினர். கதைக்கும் கதைநிகழிடத்துக்கும் கதை மாந்தருக்கும் பொருத்தமான ஆடல்களாக அவை அமைந்தன. யானையும் தாளம் பிசகாமல் ஆட எத்தனித்தமையைக் காண முடிந்தது. ஆனால் மேடை போதாது.

நாட்டுக் கூத்துக்கு, பாடல் அணி சேர்ப்பது.

''வேழம்படுத்த வீராங்களை''ப் பாடல்கள் தொடர்பாக நெறியாள்கை செய்பவர் கவனஞ் செலுத்த வேண்டுமென எண்ணுகிறேன் பாடல்களை நாட்டார் இசையின் கனிவு குன்றாமல் பாடுவதுடன் சபையோர் விளங்கிக் கொள்ளவும் பாட வேண்டும். மந்திரி, அரியாத்தை, பணிக்கர் இருவரும் நன்றாகப் பாடினார்கள். ஆனையை அடக்கும் பொழுது அரியாத்தை அதன் முன்னர் பாடிய பாட்டையும் மேடையிலே காட்டினால் நன்றாயிருக்கும்.

மந்திரி, வேலப்பணிக்கன், நீலப்பணிக்கன், அரியாத்தை ஆகியோருடைய நடிப்பு வித்து கூறப்படவேண்டியுள்ளது. அரியாத்தை பற்றிய விவரங்களை அரசனுக்கு எடுத்துக்கூறும்போது கண்ணனுடைய நடிப்பு நன்றாக அமைந்தது. நீலப்பணிக்கனுடைய கண்ணும், வாயு, ஆடலும் பொறாமைத் தீயைக் கக்குவனவாக இருந்தன. வேலப்பணிக்கன் தன் மனைவியில் கொண்டிருந்த அன்பினையும் நம்பிக்கையினையும் நன்றாகப் புலப்படுத்தினார். அரியாத்தை இந்த நாடகத்தின் தலைவி தானே என்பதை எல்லா வகையிலும் எடுத்துக்காட்டினாள். ஆனையை அடக்கிய அரியாத்தையாக மட்டுமன்றி சபையைக் கட்டிய அரியாத்தையாகவும் திகழ்ந்தாள்.

பலகால இடைவெளிக்குப் பின் ஒருநல்ல நாட்டுக் கூத்தைப் பார்க்கும் வாய்ப்பினைத் தந்த மெற்றாஸ் மயில் பாராட்டுக்குரியவர்.

★

# இலங்கை அரசாங்கத்தை...

(11 ஆம் பக்கத் தொடர்)

வகித்தார். அடுத்த வருட முற்பகுதியில் இலங்கை உட்பட தென்னாசிய நாடுகளுக்கு ஜனாதிபதி கிளின்டன் விஜயம் செய்யவுள்ளார். அதற்கு முன்னோடியான, நிலைமையைக் கண்டறியும் விஜயமாகவே றிச்சார்ட்சன் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் வருகை கருதப்பட்டது.

அதனால் இக்குழு தனது வருகையின் போது, இனப்பிரச்சினை விடயத்தில் தமிழ்த் தரப்புக் கருத்தையும் அறிந்து செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உயர்மட்டக் குழுவின் உத்தியோகபூர்வ நிகழ்ச்சி அட்டவணையில் தமிழர் தரப்பைச் சந்தித்துப் பேச ஏற்பாடாகவில்லை தமிழர் பணிக்குழுவின் பிரமுகர் திரு. என். விஜயசுந்தரம் அமெரிக்கத் தூதுவருக்கு இவ்விடயத்தைச் சுட்டிக் காட்டி வலியுறுத்திய பின்னரே விருந்துபசார நிகழ்வின் போது பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

எனினும் றிச்சார்ட்சன், இன்ரர்பேர்த்ஆகியோர்இனப் பிரச்சினை விவகாரத்தில் முழுக்க முழுக்க அரசை ஆதரித்தும், அதன் தீர்வுப் பொதியை தேவலோகத்து அமுதசுரபி என்றவாறு ஏற்றிப் போற்றியும் பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்றவர்கள் ''பெயருக்காக வேணும்'' அரசும் போரை நிறுத்த வேண்டும் என்று தானும் சொல்லவில்லை.

சாய்ந்தால் சாயிற பக்கமே சாய்வது போல, அரசின் நிலைப்பாட்டை ஆதரித்தும் ஊர்ஜிதம் செய்தும் கருத்து வெளியிட்டுப் போயுள்ளனர்.

அமெரிக்கா தனது பக்கம் தான் என்ற துணிவிலேயே இலங்கை அரசு இந்தியா மீது ஆத்திரப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது!

பிலிப்பீன்ஸில் இருந்த கடற்படைத் தளம் மூடப்பட்டு விட்டது. இந்தியா மீது கண்காணிப்பு வைத்திருக்க திருகோணமலை கடற்படைத் தளம் மீது அமெரிக்காவுக்கு ஆசை வந்திருப்பதாகவும் அதன்பொருட்டே அமெரிக்கக் குழுவினர் அரசு பக்கம் சாய்ந்துபேசினார்கள் என்றும் அவதானிகள் கருதுவதில் தப்புஇருக்கமுடியாது.

# உலக உதை....

(1 ஆம் பக்கத் தொடர்

யில் முற்றிலுமாகச் சீரமைக்கப்படுகிறது. ரசிகர்களுக்கு போதிய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் ஏற்கனவே இருந்த இருக்கைகளில் 6 ஆயிரம் குறைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி மூலம் பயன் பெறுவது மோந்த்பெலிரிலுள்ள மோஸன் மைதானம் தான். 20 ஆயிரம் பேர் ஆட்டத்தைக் காணக் கூடிய இந்த மைதானத்தில் இருக்கை வசதி 35 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. இங்கும் 6 ஆட்டங்கள் நடக்கவுள்ளன.


வடக்கு பிரான்ஸ் லின்ஸிலுள்ள பெரிக்ஸ் போலேர் மைதானம் சதுர வடிவமானது. 1932 இல் உருவாக்கப்பட்ட இந்த மைதான இருக்கைகள் 40 ஆயிரத்திலிருந்து 35 ஆயிரமாகக் குறைக்கப்படுகின்றன. 6 ஆட்டங்கள் இங்கு நடக்கவுள்ளன.

★

# விடைகள்

## கண்டு பிடியுங்கள்

111 ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-




## இயலுமா?

இப்புதிரின் அச்சில் ஒரு சிறிய தவறு. முதல் வரிசையின் இரண்டாவது வட்டத்தில் உள்ள 'பா' என்ற எழுத்தை 'ப்' எனவும், இரண்டாவது வரிசையில் மூன்றாவது வட்டத்தில் உள்ள 'க' என்ற எழுத்தை 'க்' எனவும் கொள்க.

விடை:-
(i) ஆசியா.
(ii) ஆபிரிக்கா.
(iii) அமெரிக்கா.
(iV) அவுஸ்திரேலியா.
(V) ஐரோப்பா.

## தெரியுமா உங்களுக்கு?

I. 1. நாகர். 2. கல். 3. கோ (அரசன்). 4. கவி. 5. நார். 6. கோயில். 7. கல். 8. கோல். 9. கோர்.

II. 1. கிளி. 2. கஞ்சல். 3. கல். 4. சல. 5. சளி. 6. களி. 7. கள்ளி. 8. சக. 9. கல்கி. 10. கனி.

III. 1. குமரன். 2. குதி. 3. குருதி. 4. திக்கு. 5. மதி. 6. திரு.

## மூளைக்கு வேலை

1. ஏழு நாள்கள்.
2. 36 கதியால்கள்.
3. சரஸ்வதிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைக்கு உயிர் கொடுத்த கரு

கண்ணில் இரத்தப் புற்று நோய் காரணமாக உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நான்கு வயது குழந்தைககு அதே தாயின் இரண்டாவது கரு மறுவாழ்வு அளித்த மருத்துவ அதிசயம் சென்னையில் நடந்துள்ளது.

இரண்டாவது குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியிலிருந்து தாயின் இரத்த அணுக்களை இச்சிறுவனுக்குச் செலுத்தி மறுவாழ்வு அளித்துள்ளனர்.

அமெரிக்காவில் 10 ஆண்டுகளுக்கு முன்பே இதுபோன்று தொப்புள் கொடி இரத்த அணுக்கள் மாற்று சிகிச்சை முறைகண்டுபிடிக்கப்பட்டது.

எனினும் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் இந்தியாவில் முதல் முறையாக இந்த தொப்புள்கொடி இரத்த அணுக்கள் மாற்று சிகிச்சை வெற்றிகரமாக நடந்துள்ளது.

அசாம் தலைநகர் குவாஹாட்டியைச் சேர்ந்த சிவான்ஷு சரோகி என்பவனே இச்சிறுவன் ஆவான்.

இரத்தப் புற்றுநோய், தாலசீமியாநோய், (இரத்தசிவப்பு அணுக்கள் பற்றாக்குறை), இரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்ட ''பிளேட்டலட்ஸ்'' அணுக்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் வாடும் குழந்தைகளுக்கு இந்த தொப்பிள் கொடி இரத்த அணுக்கள் மாற்று சிகிச்சை வரப்பிரசாதம் என்றார் இரத்த நோய் சிகிச்சை மருத்துவர் ஈஸ்வர் விஸ்வேஸ்வர்.

# கொசோவோவில் அல்பேனிய இன மக்கள் நடத்தும் பிரிவினைப் போராட்டம்!

## யூகோஸ்லாவியா மேலும் சிதறுண்டு போகும் நிலை

ஸ்லோபோடன் மிலோசெவிக்கை ஜனாதிபதியாகக் கொண்ட யூகோஸ்லாவிய சம்மேளனம் தற்பொழுது நான்கு பிராந்தியங்களைக் கொண்டுள்ளது.

அவற்றில் ஒன்றே கொசோவோ (Kosovo) ஆகும்.

ஏனையவை சேர்பியா, மொன்ரேநெக்ரோ, வொஜ்வொடினா.

கொசோவோவின் ஜனத்தொகை 20 லட்சம். 90 சதவீதமானவர்கள் அல்பேனிய இனத்தவர்கள். எஞ்சிய 10 சதவீதமானோரே சேர்பியர்கள்.

1989—90 இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சியை அடுத்து யூகோஸ்லாவியாவிலும் நெருக்கடி தோன்றிய போது அல்பேனியர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கொசோவோ பிராந்தியமும் பிரிந்துபோய் விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அப்படி நடக்கவில்லை.

கொசோவோ மக்கள் தமது ஆரம்பப் போராட்டத்தை சாத்வீக முறையில் நடத்தியதால் அது அப்போது சாத்தியமாகவில்லை.

ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசெவிக் (Slobodan Milosavic) யூகோஸ்லாவிய சம்மேளனத்தில் கொசோவோவை தொடர்ந்து வைத்திருப்பதில் உறுதியாக இருந்தார்.

எனினும் ஐ நாவின் தலையீடு தற்பொழுது ஏற்பட்டு ஆயுதத்தடை விதிக்கப்பட்டிருப்பது யூகோஸ்லாவியாவுக்குப் பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கனவே வர்த்தகத்தடையால் பாதிப்புற்றுள்ள யூகோஸ்லாவியாவுக்கு ஆயுதத்தடை மற்றொரு அச்சுறுத்தல்.

### பெப்ரவரி 28 படை எடுப்பு

கொசோவோ பிராந்திய மக்களின் போராட்டம் படிப்படியாக தீவிரம் அடைந்து முழு அளவிலான பிரிவினைப் போராட்டமாக உருவெடுத்த சமயம் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி யூகோஸ்லாவிய அரசு தனது படைகளை கொசோவோவுக்கு அனுப்பியது.

கொசோவோ மக்களின் போராட்டத்தை மிக மோசமான முறையில் நசுக்க யூகோஸ்லாவியா முற்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது யூகோஸ்லாவியப் படைகளால் 80 அல்பேனிய இனத்தவர்கள்வரை கொல்லப்பட்டனர்.

### ஐ. நா. தலையீடு

பொஸ்னியாவில் ஏற்பட்ட நிலைமை கொசோவோவிலும் ஏற்படும் ஆபத்து உருவான சமயம் ஐ. நா.பாதுகாப்புச்சபை அவசரமாகத் தலையிட்டது.

கொசோவோ மீதான யூகோஸ்லாவியப் படைகளின் நடவடிக்கையைக் கண்டித்ததுடன் மார்ச் 31 ஆம் திகதி யூகோஸ்லாவியாமீது ஆயுதத் தடையை விதித்து தீர்மானம் ஒன்றையும் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியது.

பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், போத்துக்கல், சுவீடன் ஆகிய ஆறு நாடுகள் கூட்டாகக்கொண்டு வந்த ஆயுதத்தடைத் தீர்மானத்துக்கு ஆதரவாக ரஷ்யா உட்பட 14 நாடுகள் வாக்களித்தன. சீனா மட்டும் வாக்களிப்பில்கலந்துகொள்ளவில்லை.

கொசோவோவுக்கு சர்வதேச அமைதிப்படை ஒன்றை அனுப்பவேண்டும் என்ற யோசனை உட்பட சில யோசனைகள் ஐ. நா.தீர்மானத்தில் இருந்து நீக்கப்பட்டன.

யூகோஸ்லாவியா மீதான ஐ. நா. ஆயுதத்தடைதீர்மானத்தை ஆதரிக்க இதன் பின்னே ரஷ்யா இணங்கியது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மடெலின் அல்பிரைட் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பிரிமகோவ்வுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ரஷ்யாவை இணங்கவைத்தார்.

கொசோவோ நிலைமை குறித்து ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் 30 நாள்களுக்கு ஒரு தடவை பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

கொசோவோ தொடர்பான ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கமைய யூகோஸ்லவியா செயற்படுவது தெரியவந்தால் ஆயுதத் தடையை நீக்குவது குறித்து பரிசிலனை செய்யப்படும்.

ஐ. நா. தீர்மானங்களை யூகோஸ்லாவியா அமுல் செய்கிறதா என்பதைக் கண்காணிக்க பாதுகாப்புச் சபையில் அங்கம்வகிக்கும் நாடுகள் அடங்கிய கண்காணிப்புக்குழு ஒன்றும் நியமிக்கப்படும்.

### யூகோ கடும் எதிர்ப்பு

பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு யூகோஸ்லோவியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐ. நா வுக்கான யூகோஸ்லாவிய தூதுவர் விலாடிஸ்லோவ் ஜொவனோவிக், யூகோஸ்லாவியாவின் உள் விவகாரங்களில் ஐ. நா. தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டி உள்ளார்.

தனது இறைமையைப்பாதுகாப்பதற்கும் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடுவதற்கும் யூகோஸ்லாவியாவுக்கு உரிமை என்று அவர் தெரிவித்தார்.

நிபந்தனை இன்றிப் பேச்சுவார்த்தை நடத்துமாறு யூகோஸ்லாவியாவையும் கொசோவோ தலைவர்களையும் பாதுகாப்புச் சபை கோரி உள்ளது.

அத்துடன் கொசோவோ பிராந்தியத்துக்கு விசேட அந்தஸ்து, சுயநிர்ணய உரிமைகள் வழங்குவதற்கும் பாதுகாப்புச்சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

### தீவிரவாதம் வளர மிலோசெவிக் காரணம்

ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசெவிக் 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொசோவோ பிராந்தியத்துக்கு வழங்கப்பட்டிருந்த சுயநிர்ணய உரிமைகளை கட்டுப்படுத்தினார். அத்துடன் அல்பேனிய இனத்தவர்கள் தமது தாய்மொழியில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் உரிமையையும் அவர் நீக்கினார்.

70 சதவீதமான மக்கள் வேலைவாய்ப்பின்றி இருந்தனர். கொசோவோ சனத்தொகையில் சேர்பியர்கள் 10 சதவீதமாக இருந்த போதிலும் கூடுதலான வேலைவாய்ப்புக்கள் அவர்களுக்கே வழங்கப்பட்டன.

கொசோவோவில் மிதவாத போக்குள்ள கட்சிகள் மக்களின் ஆதரவை இழப்பதற்கும் K. L. A. எனப்படும் கொசோவோ விடுதலை ராணுவம் என்ற தீவிரவாத இயக்கம் வளர்ச்சி அடைந்து பிரிவினைப் போராட்டம் வலுப் பெறுவதற்கும் ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசெவிக்கின் [illegible]களே காரணமாக இருந்தன. கொசோவோ விடுதலை ராணுவம் தற்பொழுது அமெரிக்காவினால் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி கொசோவோ மீது யூகோஸ்லாவியா ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொசோவோ விடுதலை ராணுவத்தின் தலைவர் அடெம் ஜேஷன் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்.

கொசோவோ மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை 1970ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறது.

கொசோவோவில் உள்ள பிரதான அரசியல் கட்சி ''கொசோவோ ஜனநாயக லீக்'' ஆகும்.

இதன் தலைவர் இப்ராஹிம் றுகோவா. (Ibrahim Rugova)

இப்ராஹிம் றுகோவாவுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்காக கடந்த மார்ச் 2 ஆம் திகதி யூகோஸ்லாவிய அரசு அதி உயர் தூதுக்குழு ஒன்றை அனுப்பியது எனினும் அத்தூதுக்குழுவைச் சந்திக்க இப்ராஹிம் றுகோவா மறுத்து விட்டார்.

### கொசோவோ மக்களின் போட்டி அரசு

1987 ஆம் ஆண்டில் இருந்து கொசோவோ மக்கள் யூகோஸ்லாவிய நடத்தும் தேர்தல்களைப் பகிஷ்கரித்து வருகிறார்கள்.

தேர்தல்களில் பங்குபற்றுவது கொசோவோ மீதான யூகோஸ்லாவியாவின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டதாகும் என்று கருதப்படுகிறது.

அதே சமயம் போட்டி அரசு ஒன்றையும் அவர்கள் அமைத்திருந்தனர். 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வரி அறவிடும் நடவடிக்கையையும் இவர்கள் ஆரம்பித்தனர்.

போட்டி அரசு வெறும் செயலளவில் இயங்கிய போதும் யூகோஸ்லாவியாவுக்கு பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. அல்பேனிய இனத்தவர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையில் குரோதம் அதிகரிக்கவும் காரணமாக இருந்தது.

1987 ஆம் ஆண்டு ஜனாதிபதி மிலோசெவிக் கொசோவோவில் ஆற்றிய உரையே கொசோவோ பிரச்சினையை மேலும் மோசமடைய வைத்தது.

''இது சேர்பியர்களின் நாடு'' என்று அவர் சேர்பியர்களைப் பார்த்துத் தெரிவித்திருந்தார்.

கொசோவோவில் யூகோஸ்லாவியர் நடத்தும் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும் முடிவை அல்பேனிய இனத்தவர்கள் இதன் பின்னரே எடுத்தனர்.

கொசோவோ சம்பந்தமான ஐ. நா. தீர்மானங்களை யூகோஸ்லாவியா நிறைவேற்றத் தவறுமானால் அதன் மீது மேலும் தடைகளைப் போடப் போவதாக ஐ. நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது.

### பொஸ்னியா ஏற்படுத்திய பாடம்


கொசோவோவில், தற்பொழுது அல்போனிய இனத்தவர்கள் பெரும்பான்மையினராக உள்ள போதிலும் சேர்பிய கலாசாரத்துடனும் வரலாற்றுடனும் அது பின்னிப் பிணைந்துள்ளது.

1389 ஆம் ஆண்டில் ஒட்டோமான் படைகளிடம் சேர்பிய கிறிஸ்தவ படைகள் தோற்கும்வரை சேர்பியர்களின் இதய பூமியாக கொசோவோ இருந்து வந்தது. சேர்பிய வைதீக தேவாலயத்தின் (Orthodox Church) பிறப்பிடமும் கொசோவோதான்.

எனினும் ஐ.நாவும் சர்வதேச சமூகமும் பொஸ்னியாவில் கற்ற பாடத்தினால் ஐ.நாவின் தலையீடு கொசோவோவில் உடனடியாக ஏற்படுவது சாத்தியமாயிற்று. ★



மிலோசெவிக்



கொசோவோவில் யூகோஸ்லாவியப் படைகள் சமீபத்தில் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட அல்பேனிய இனத்தவர்களில் சிலரின் சடலங்களை படத்தில் காணலாம். இறுதிச் சடங்கில் 30 ஆயிரம் அல்பேனியர்கள் கலந்து கொண்டனர். இளம் அல்பேனிய இனத்தவர் ஒருவர் வெற்றியின் அடையாளமாக V என்ற குறியைக் காட்டுகிறார்.

---

இனச் சுத்திகரிப்புச் செய்வதில் சேர்பியர்கள் பெயர் போனவர்கள்.

சேர்பியர்களைக் கொண்ட யூகோஸ்லாவிய இராணுவம் கொசோவோவில் பல படுகொலைகளிலும் பாலியல் வல்லுறவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது தற்பொழுது தெரியவந்துள்ளது.

தமது துப்பாக்கியை முத்தமிட்ட இரு சேர்பியர்களைப் படம் எடுத்த ஐ. ரி. என். பிரிட்டிஷ் படப்பிடிப்பாளர் ஒருவர் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டார். இரு சேர்பியப் பொலீஸார் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாக முதலில் எதிர்ப்பட்ட 12 அல்பேனிய இனத்தவர்களை சேர்பியர்கள் சிறைப்பிடித்து சுட்டுக் கொன்றனர். இவர்களில் சிலரின் கண்களும் பிடுங்கப்பட்டன.

---

உலக உலா
என்.பி.சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org